RR No. 321
ASO (B)
MADRAS STATE ARCHIVES
6457/L
MADRAS

வெளியீடு—18—7—1968]
Issued—18—7—1968]

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## கவன ிக்கை ணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

781

செவ்வாய்க்கிழமை, *1967* நவம்பர் *28*

**Tuesday, 28th November 1967**

தொகுதி VI—எண். *4*

**Volume VI—No. 4**

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

D,
V2:11,31 N67
N67.6.4

50 காசுகள்]
Paise]

V211, 31 N67
N67. 6.4

## உள்ளடக்கம்

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள் .. .. .. .. .. | 337–Z76 |
| 2 | எதிர்க்கட்சித் தலைவரின் விளக்க அறிக்கை— இந்தியப் பிரதமரின் தமிழகச் சுற்றுப்பயணச் செலவின் பகுதியைக் காங்கிரஸ் கட்சி ஏற்றல் .. .. | 377–378 |
| 3 | அறிவிப்புகள்— | |
| | (i) உறுப்பினர் விடுதலை .. .. .. .. | 278 |
| | (ii) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல் .. | 379 |
| 4 | ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்— | |
| | (i) சர்க்கரை விலை உயர்வு .. .. .. | 37 |
| | (ii) இராமநாதபுரம் மாவட்டத்தில் திறந்த சந்தையில் உணவு தானியங்கள் கிடைக்காமை .. | 380 |
| 5 | கவன ஈர்ப்பு—பொற்கொல்லர்களின் இன்னல்கள் .. | 386–382 |
| 6 | அறிக்கை அளித்தல்—மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கை .. | 382 |
| 7 | அரசினர் மசோதாக்கள்— | |
| | (i) 1967-ம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 19/1967) .. .. .. .. .. | 382-390 |
| | (ii) 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 13/1967) .. .. | 396-398 |
| | (iii) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா 20/1967) .. | 398 |
| | (iv) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாவது திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 21/1967) .. .. | 399-406 |
| | (v) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) வரிவிதிப்பு (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 22/1967) .. .. .. .. .. | 406-408 |
| | (vi) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 23/1967) .. .. | 4083409 |
| | (vii) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உடைமை உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா 24/1967) .. .. .. .. .. | 409-417 |
| | (viii) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 25/1967) .. .. | 417–425 |
| 8 | அரசினர் தீர்மானம்—1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் நான்காவது விவர அட்டவணைக்குத் திருத்த வரைவு .. .. | 425–497 |
| 9 | பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 427–ஓ28 |



(64981)

## தமிழக சட்டப் பேரவை

---

**செவ்வாய்க்கிழமை, 1967 நவம்பர் 28**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

781

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல், "வினாக்கள்-விடைகள்". உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

### கல்பாக்கம் அணு மின் நிலையம்

*474 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :**
**திரு. எஸ். இராமச்சந்திரன் :**
**திரு. கே. வினயகம் :** } மதிப்பிற்குரிய

கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அருகே கல்பாக்கத்தில் அணு சக்தி மின்சார நிலையம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டு விட்டதா?

(இ) இல்லையெனில் திட்டம் நிறைவேற்றப்படுவதில் தாமதத்துக்குக் காரணமென்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) தமிழக அணு மின் நிலையம் அமைக்கும் திட்டம் வேகமுடனும் திறனுடனும் நிறைவேற்றப்பட்டு திருப்திகரமாக முன்னேற்றம் அடைந்து வருகிறது.

**திரு. கரு. சீமைச்சாமி :** சார், இந்தக் கல்பாக்கம் மின் திட்டத்திற்கு இந்த ஆண்டு மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது? அதனுடைய வேலைத் திட்டம் எவ்வளவு தூரத்திற்கு முன்னேறி இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த ஆண்டுக்கு ஒதுக்கியிருக்கும் பணம்பற்றி விவரம் தெரியவில்லை. அணு மின் நிலையத்திற்குத் தேவைப்படுகிற இடம், சாலைவசதிகள், குடியிருப்பு இடங்கள் இவற்றிற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. கூடிய விரைவில் ஒன்று இரண்டு ஆண்டுகளிலே அதாவது 1970-71-ல் இது இயங்கக் கூடிய அளவிலே பணிகள் நடைபெறுகின்றன. மேலும், அதற்காக வேண்டிய நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. அங்கு இருக்கிறவர்களை வேறு

இடங்களுக்குக் குடியேற்றுகிற நிலைமை இருக்கிறது. அங்கு குடியிருப்பவர்கள் ரிட் மனு போட்டிருக்கிறார்கள். இதிலே தான் காலதாமதம் இருக்கிறது. இத்திட்டத்தை அமைக்கும் பணிகளெல்லாம் முழுமுரமாக நடைபெற்று வருகின்றன.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** இந்தத் திட்டத்திற்காக மத்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் நிறைவேறி மின்சாரத்தைப் பயன்படுத்தக்கூடிய நேரத்தில் இது பலன் அளிக்கின்ற டார்ஜட் தேதி என்ன என்று தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தத் திட்டத்திற்காக மொத்தத்திலே 100 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை இரண்டு பகுதிகளாக நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஒரு பகுதியிலே 200 மெகாவாட் திறன் உள்ள மின் உற்பத்தி செய்யப்படும். இது முதல் யூனிட். இதற்காக 69 கோடி ரூபாய் செலவாகும் என்றும் இரண்டாவது யூனிட் அமைக்கப்பட்டால் அதுவும் சேர்ந்து மொத்தத்தில் ரூபாய் 100 கோடி ஆகும் என்றும் திட்டமிடப்பட்டு எல்லாம் சரியாக நடைபெறுகிற நிலைமை ஏற்பட்டால், 1970-71-லே மின்சார உற்பத்தி செய்யக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று கருதப்படுகிறது.

**திரு. கே. விநாயகம் :** இந்த அணு மின்சார நிலையத்தைப் பார்வையிடுவதற்கு மத்திய சர்க்காரிலிருந்து வந்த அட்டாமிக் எனர்ஜி எக்ஸ்பர்ட் ஒருவரும் நமது அமைச்சர் ஒருவரும் சேர்ந்து அந்த இடத்தைப் பார்த்தபோது எந்த அளவிற்கு மத்திய சர்க்கார் எதிர்பார்க்கிறார்களோ, அந்த அளவிற்கு இந்தச் சர்க்கார் செய்யவில்லை என்று சொன்னாரே, அது உண்மைதானா? எங்கே தாமதம் ஏற்பட்டது? அதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அணு சக்தி கமிஷன் தலைவரோடு நான் அங்கு செல்லவில்லை. இரண்டு மாதத்திற்கு முன்னே இதைப்பற்றிய நடவடிக்கைகளைக் கவனிக்கவேண்டுமென்று நான் அங்கே சென்று நிலைமைகளைக் கண்டறிந்து மாவட்ட ஆட்சித் தலைவரையும் அழைத்துவைத்து ஒரு தேதியையும் குறிப்பிட்டு அதற்குள் நிலங்களெல்லாம் அளிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டேன். அங்கே வரக்கூடிய மெஷின்களைக் கொண்டு செல்லக்கூடிய நிலைமையில் பாலங்கள் எல்லாம் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அங்கு குடியிருக்கின்ற மீனவர்களை எல்லாம் அப்புறப்படுத்துவதில் சிலபல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆனால், வேறு இடத்திற்குச் சென்றால் அந்த இடம் மீன் பிடிப்பதற்கு ஏற்ற இடமாக இருக்காது என்று சொல்லிவிட்டார்கள். இடத்திற்கு உரியவர்கள் ரிட் போட்டிருக்கிறார்கள். அதைத் தவிர விலை அதிகப்படியாக நிர்ணயம் செய்துவிட்டார்கள் என்ற காரணத்தினால், இது சம்பந்தமாக அதிகாரிகள் மீது ரிபோர்ட் போய் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ரிட்கள்



போடப்பட்டிருப்பதன் காரணமாகத்தான் உடனடியான முயற்சிகள் எடுக்க முடியவில்லை. இருந்தாலும் தேவையான நிலங்கள் உடனுக்குடன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு வாரத்திற்கு முன்பு போர்டு மெம்பரை அழைத்துவைத்துப் பேசினேன். அங்கே வேலை நடந்து கொண்டிருக்கிறது. டாக்டர் சிவா அவர்களையும் அழைத்து வைத்து சொல்லியிருக்கிறேன். அந்த முறையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

DR. H. V. HANDE : What is the total capacity of this plant in mega watts? Do the Government expect to produce that capacity in the Kalpakkam Plant? May I know whether it is going to be co-ordinated with the present tempo of increasing production in the other Hydel Projects in the Hydel areas? May I also know whether the capacity of this Plant will be taken into account in regard to the expansion of the Hydel Projects?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, முன்பே குறிப்பிட்டபடி இரண்டு யூனிட்டுகள் என்ற முறையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு யூனிட்டும் 200 மெகாவாட் திறன் உடையதாக இருக்கும். இரண்டு யூனிட்களும் முடிந்தால்தான் 400 மெகாவாட் கிடைக்கும். அல்லது 200 மெகாவாட் கிடைக்கக் கூடிய யூனிட்டை ஏற்படுத்துவதற்கு முயற்சி நடைபெற்றுக் கொண்டுவருகிறது. இது சம்பந்தமாக சேர்மெனோடு பேசும் போது இரண்டு யூனிட்டைப் போடுகிறபோது அதைக்கூடுதலாக 200 மெகாவாட்டுக்குக் கொஞ்சம் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது இருக்கிற திட்டம், 400 மெகாவாட் திட்டம்.

**திரு. நா. காசிராமன் :** நூறு கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலே கல்பாக்கம் மின்சார நிலையம் ஏற்படப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதனால் எத்தனை தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** என்னிடம் விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தத் திட்டம் மத்திய சர்க்கார் திட்டம். வேலைவாய்ப்புகள் கொடுக்கிறபோது, வேலை ஆட்களை போடுவதற்கு மத்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டா? அல்லது மாநில சர்க்கார் போடுவதற்கு அதிகாரம் உண்டா? மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்றால் மாநில சர்க்காரே போடுவதற்கு அதிகாரம் கிடைப்பதற்கு வழிவகை செய்வார்களா? திருச்சி பாய்லர் பிளான்ட் தொழிற்சாலையில் தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு இடம் கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே

அப்படியில்லாமல் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கும் தொழிலாளர்களையே போடுவதற்கு முயற்சி எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்பாக்கம் திட்டத்தைப் பார்வையிட்டபோது அங்கே இப்போது கட்டட வேலைகள், சாலை வேலைகள் இவற்றிலே செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அங்கே இருக்கும் எஞ்சினீயர்கள் எல்லாம் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். முக்கியமாக திரு. சிவா என்பவர் கூட நம் மாநிலத்தைச் சேர்ந்தவர்தான். நூறு கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காக செலவழிக்கப்படுகிறதென்றாலும் கட்டடங்கள் எல்லாம் மிகச் சிறிய அளவிலேதான் இருக்கும். செலவு அதிகமாக இருக்கும். இதனால் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் 500 அல்லது ஆயிரம் பேர்களுக்கு அதிகமாக இருக்கமாட்டார்கள். ஆகையால், இந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய நிலைமை இருக்கும். பம்பாயில் டிராம்பே அணுசக்தி மின் நிலையத்திலே இந்த மாநிலத்தைச் சேர்ந்த என்ஜினியர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்கிறபோது இங்கே நிச்சயமாக அவர்கள் இடம் பெறுவார்கள்.

## உணவு உற்பத்திக்குப் பயன்படும் மின்சாரம்

■ 475 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :<br>
திரு. நா. வீராசாமி :<br>
திரு. வி. டி. அண்ணாமலை :<br>
திரு. வி. டி. அண்ணாமலை :<br>
திரு. என். கிட்டப்பா :

மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவு உற்பத்திக்கு உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு கட்டணத்தை பாதியாகக் குறைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) அவ்வித திட்டம் ஒன்றும் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தில் பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டபோதிலும், அதை ஏற்றுக்கொள்ளுவதைப் போல், உணவுப் பெருக்கத்தில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதிலும், மின்சாரக் கட்டணத்தைப் பாதியாகக் குறைத்து வசூலித்துக் கொண்டு, மறு பாதியினால் ஏற்படுகிற நஷ்டத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளுவது பற்றி அரசு யோசிக்குமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நேற்றே, மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின் இறுதியில் தெளிவாகக் குறிப்பிட்டேன். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், வேளாண்மைத் துறைக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் யூனிட் ஒன்றுக்கு எட்டேகால் காசுதான். ஆனால், 12 காசு வரையிலும் போடலாம் என்பதைத்தான் மத்திய அரசு எடுத்துத் தெரிவித்திருக்கிறது. ஆந்திரம் 12 காசு போட்டிருக்கிறது. கேரளம் 8.80 காசும், மைசூர் 11 காசும் போட்டிருக்கிறது. தமிழகம்தான் எட்டேகால் காசு போட்டிருக்கிறது. இதை அதிகம் என்று கருதுவதற்கில்லை. மின்சார உற்பத்தி செலவு யூனிட் ஒன்றுக்கு 17 காசு என்றால், அதில் பாதிக்கும் குறைவாகவே வசூலிப்பதால், கனம் உறுப்பினர் கூறுகிற யோசனைப்படி மேலும் குறைத்தால், நஷ்டம் இன்னும் அதிகமாகும். இப்போதே, மின்சார வாரியத்திற்கு அதிக லாபம் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு ஒரு பக்கம் இருக்கும்போது, மின்சாரக் கட்டண விகிதத்தை மேலும் குறைப்பதனால், இன்னும் அந்த நிலைதான் வளரும்.

**திரு. வி. டி. அண்ணாமலை :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் விவசாயிகளுக்குப் பல நன்மைகளைச் செய்திருந்த போதிலுங்கூட, தற்போது வேளாண்மைத் துறையில் ஈடுபட்டு உணவு அபிவிருத்தி செய்கின்றவர்களுக்குச் சர்க்கார் கொடுக்கின்ற சலுகை குறைவாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பாசனப் பகுதிகளில் நெல் பயிரிடுகிறவர்களுக்கு அரசாங்கம் தண்ணீர் சப்ளை செய்கிறது. அதைப்போல், மின்சாரத்தை பாசன வசதி செய்துகொண்டு பயிர் செய்கின்றவர்களைப் பொறுத்தும், அத்தகைய பகுதிகளில், மின்சாரக் கட்டணத்தைப் பாதியாகக் குறைக்கவோ, அல்லது 25 சத விதம் மானியம் வழங்கவோ ஏன் அரசாங்கம் உதவி செய்யக்கூடாது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முன்னால் சொன்ன பதிலே முழுவதும் இதற்குப் பொருந்தும். நேற்றும் இதுபற்றி விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கி மற்ற மாவட்டங்களுக்கு வழங்கும் தஞ்சை மாவட்டத்திற்காவது இந்தச் சலுகை தரப்படுமா என்று வேண்டுவதுடன், பாதி அளவிற்குத் தரப்படவில்லை என்றாலும், ஓரளவிற்காவது சலுகை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சலுகை தரப்படுகின்றபோது. தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் அளித்து, மற்ற மாவட்டங்களைப் புறக்கணிப்பதற்கில்லை. சலுகை என்றால், அது எல்லோருக்கும்தான் வரவேண்டும். அப்படிப் பார்த்தால், தஞ்சை

[1967 நவம்பர் 28

மாவட்டத்தில் தண்ணீர் இறைப்பது எளிது என்றும், மற்ற மாவட்டங்களில் தண்ணீரைக் கொண்டுவருவது மிகக் கடினமான நிலைமை என்றும், அங்கே மழையை நம்பிக்கொண்டு இருக்கிறோம் என்றும் வாதித்து, அவர்களுக்குத்தான் முதன்மை அளிக்க வேண்டும் என்று கேட்கலாம். ஆகவே, மற்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் அப்படிக் கேட்கும் அளவிற்கு, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இப்படிக் கேட்காமல் இருப்பது நல்லது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மின்சாரக் கட்டணம் எட்டேகால் பைசா விகிதப்படி சரிதான். ஆனால், வரியாக 20 சத விகிதம் போட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்காவது ஒரு சலுகை, விவசாய மக்களுக்குக் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப் பட்ட யோசனை இல்லை.

திரு. எஸ். முருகையன் : விவசாயிகளுக்குச் சலுகை கொடுக்கும்போது, எல்லா விவசாயிகளுக்கும் கொடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் உள்ளவர்கள் இரண்டு போக சாகுபடிக்கு ஏக்கராவொன்றுக்கு 40 ரூபாய்தான் வரியாகச் செலுத்துகிறார்கள். ஆனால், மற்ற மாவட்டங்களில், ஐந்து ஏக்கரா நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயி மின்சாரத்தைக்கொண்டு பம்ப் செட்டை இயக்கிப் பயிரிடவேண்டுமானால், ஏக்கராவொன்றுக்கு 100 ரூபாய்க்கும் அதிகமாகச் செலவாகிறது. ஆகவே, பம்ப் செட் வைத்து விவசாயம் செய்பவர்களுக்கு கட்டணத்தைச் சற்று குறைத்து, இந்த ஏற்றத்தாழ்வைச் சமப்படுத்தவேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்ற பிரச்சினையை விட்டுவிட்டு, மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கிற நிலைமைகளைப் பற்றிய பிரச்சினைகள் வந்துவிட்டன. ஆகவே, அந்த முறையில் இடத்திற்கு இடம் கவனிப்பது என்பது சரியாக வராது. கனம் உறுப்பினர் அவர்கள், ஒரே சீராக அமையும் வண்ணம் ஏதாவது முறை இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சாரம் பற்றி ஏற்கனவே மூன்று நாட்கள் விவாதம் நடத்தியிருக்கிற காரணத்தால், இறுதித் துணை வினாவை திரு. சித்தன் அவர்கள் கேட்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நேற்றைய தினம் இந்த மாமன்றத்தில் பேசியபோது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், பெரிய ஆலைகளுக்கான மின்சாரக் கட்டண விகிதம் தக்க தருணத்தில் உயர்த்தப்படும் என்று சொன்னார்கள். அப்படி உயர்த்துகிற நேரத்திலாவது, விவசாயத்திற்கான கட்டணத்தைக் குறைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் தெரிவித்த கருத்து மனதிலே கொள்ளப்படும்.



1967 நவம்பர் 28]

* 476 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிணறு வெட்டி, மின்சாரத்தைப் பயன்படுத்தி, பம்பு செட்டின் மூலமாக தண்ணீர் இறைத்து விவசாயம் செய்பவர்களுக்கு மின்சார ரிபேட் கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சலுகை என்று சொன்னால், எல்லோருக்கும் ஒன்றுதான் என்று கனம் அமைச்சர் அவர்கள் இப்பொழுது கூறினார்கள். இப்பொழுது தஞ்சை மாவட்டத்திலே இரண்டாவது போகம் சாகுபடி செய்யக்கூடியவர்களுக்குத் தண்ணீர்த் தீர்வை கிடையாது என்று சலுகை காட்டியிருக்கிறார்கள். மற்ற இடங்களில், கிணறு வெட்டி, பம்ப் செட்கள் வாங்கிவைத்து, மின்சாரத்தை உபயோகப்படுத்தி பாசன வசதி செய்துகொண்டு, உணவு உற்பத்தி செய்யக்கூடியவர்களைப் பொறுத்தவரையில், இரண்டாவது போகம், மூன்றாவது போகத்திற்கு மின்சாரக் கட்டணம் இல்லாத அளவிற்குச் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தண்ணீரைப் பொறுத்துத்தான் அந்த நிலை ஏற்பட்டிருக்கிறதே தவிர, மின்சாரத்தைப் பொறுத்தல்ல.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : டெல்டா அல்லாத பிரதேசங்களில் கிணறு வெட்டி நெல் சாகுபடி செய்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் இன்னொரு போகத்திற்கு நெல் சாகுபடி செய்வதற்காகத் தண்ணீர்த் தீர்வை இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இப்படி தஞ்சை ஜில்லாவிற்குச் சலுகை கொடுக்கிறோம். ஆனால், தண்ணீரே இல்லாமல், கிணறு வெட்டி, பம்பு செட்டைப் பொருத்தி, பாசனம் செய்து கொள்ளுகிறவர்களுக்கு ஒரு சலுகை கொடுக்க சர்க்கார் முன்வருமா? குளமே பெருகாமல் இருந்தும், அந்த இடங்களில் பம்ப் செட் வைத்துத் தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து அதிக நஷ்டத்திற்கு உள்ளாகிறவர்களுக்குச் சலுகை கொடுப்பதுபற்றி சர்க்கார் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரம் வழங்குவதிலே, யூனிட் ஒன்றுக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு ஆகிறது என்று கணக்கிட்டு, அதற்கு ஓரளவு குறைவாகத்தான் வாங்கப்படுகிறது. சலுகைகள் வேண்டுமானால், வேறு வகையிலே பெறலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆற்றுத் தண்ணீர், அணைத் தண்ணீர் இவற்றிலே நல்ல அருமையான வண்டல் உரச் சத்துடைய தண்ணீர் கிடைக்கிறது. அப்படிப்பட்ட தண்ணீருக்கு மாத்திரம் சலுகை அளித்து, உரமும் போட்டு, கிணறு வெட்டி, பம்ப் செட் வைத்து, மின்சாரக் கட்டணம் கட்டி விவசாயம் செய்பவர்களுக்கு இந்த அளவிற்குச் சலுகை இல்லை என்று சொன்னால், அந்த விவசாயிக்கு உணவு உற்பத்தி செய்யவேண்டும் என்பதில் உற்சாகம் குறையுமல்லவா? ஆகவே, அதற்காகவேண்டி, தயவு செய்து, கண்டிப்பாக, ஏதாவது சலுகை கொடுப்பதற்கு இனி மேலாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மின்சாரத் துறை பற்றிய கேள்விக்கும் கனம் உறுப்பினருடைய துணைக் கேள்விக்கும் தொடர்பில்லை. ஆனால், மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையில், புஞ்சை நிலங்களுக்கு வரி இல்லை என்ற சலுகை இருந்துகொண்டிருக்கிறது. பாடுபடுகிற தன்மைக்கேற்ப, வேறு வகையிலே சலுகை கேட்டுப் பெற வேண்டுமே தவிர, மின்சார வகையிலே கேட்டுப் பெறுவதற்கில்லை.

## குடியாத்தம் கல்லூரி

* 477 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநில எல்லையில், ஆந்திரா எல்லையை ஒட்டி அமைந்துள்ள குடியாத்தம் தாலூக்காவில் தெலுங்கு படித்து எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்யும் மாணவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு நடப்பு ஆண்டில் குடியாத்தம் கல்லூரியில் தெலுங்கு செக்ஷன் ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்; புதிய வகுப்புகள் 1967-68-ல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திரு. வி. கே. கோதண்டராமன் : குடியாத்தம் கல்லூரியில் இப்பொழுது தெலுங்கு படித்த மாணவர்களைச் சேர்ப்பது கிடையாது. அவர்கள் தெலுங்கு படிக்கவேண்டுமானால், சென்னையில் உள்ள கல்லூரியில் இடம் கிடைத்தால்தான் தெலுங்கு படிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, தெலுங்கு மாணவர்களுக்காக வேண்டி அங்கே ஒரு தனியான வகுப்பு உடனடியாக ஆரம்பிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் சொன்னபடி, 1967-68-ல் புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பாடமாக வேண்டுமானால் தெலுங்கு மாணவர்கள் தெலுங்கைப் படிக்க இடம் தரப்படுகிறது. ஆனால், 'மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன்' என்ற தன்மை வரவில்லை. மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் தமிழாகத்தான் இருக்கமுடியுமே தவிர, தெலுங்கு இருக்கக்கூடிய தன்மை உருவாவதற்கான வழிகள் ஏற்பட முடியாது. இரண்டாவது மொழியாகத் தெலுங்கைத் தங்கள் தாய்மொழியாக எடுத்துப் படிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.





திரு. கே. விநாயகம் : நமது மாநிலத்திலுள்ள தெலுங்கு மொழி பேசக்கூடிய சிறுபான்மையினருக்குச் சலுகை அளிக்கும் வகையில், தெலுங்கு மக்கள் கல்லூரியில் தெலுங்கைப் பாடமாக நாம் வைத்திருக்கிறோம். அதேமாதிரி, நம் தமிழர்கள் ஆந்திர மாநிலத்தின் ஓரத்தில் வாழ்கிறார்களே, அவர்கள் தமிழிலே படிக்க வகை செய்யவேண்டும். திருப்பதி யூனிவர்சிடியில் படிக்க விரும்புகிறவர்களுக்காவது அந்த வசதியைச் செய்துதரவேண்டும். நாங்கள் உங்கள் மக்களுக்கு இவ்வளவு சலுகைகளைத் தந்திருக்கிறோமே, எங்கள் மக்களுக்கும் தமிழில் படிக்க வசதி செய்து தர முடியுமா என்று ஆந்திர சர்க்காருக்கு, குறிப்பாகத் திருப்பதி யூனிவர்சிடி அதாரிடீஸ்ஸுக்கு நம்முடைய சர்க்கார் எடுத்துச்சொல்லி வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று, அந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டித் தெரிவிப்பார்களானால், அன்பு முறையிலே அவர்களுக்குத் தெரிவித்து, அந்த நிலைமைகளை உருவாக்க வழி ஏற்படும்.

திரு. கே. விநாயகம் : இதுவரையிலும் திருப்பதி யூனிவர்சிடியில் தமிழ் படிப்பதற்கு தமிழ் மாணவர்களுக்கு வசதி செய்து தந்திருந்தார்கள். இப்பொழுது நான்கு ஆண்டுகளாகத்தான் ஏற்கெனவே இருந்த தமிழ் வகுப்புகளையெல்லாம் ரத்து செய்துவிட்டு, அங்கிருக்கும் தமிழர்களும் தெலுங்குதான் படிக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தாலும், தெரிந்திரா விட்டாலும், திரும்பவும் தமிழை அங்கே போதிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து தருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எனக்கு விவரம் தெரியவில்லை. விவரம் தெரிந்தவுடன் அதுபற்றி நான், அன்பு முறையில் அணுகி, செய்ய வேண்டிய முயற்சிகளுக்குத் தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in the month of July I received a copy of a memorandum submitted to the Hon. Minister for Education by the residents of Purasawalkam and other areas of the City, that admission to Telugu students was refused in the Sir M. Ct. Muthiah Chettiar High School, in Purasawalkam. Will the Hon. Minister be pleased to state the steps taken to remove that difficulty?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

[1967 நவம்பர் 28

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, திருப்பதியிலே இருக்கக்கூடிய கல்லூரியிலே கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்து அந்த மாணவர்களைச் சேர்ப்பதற்கு முன்னாலே, சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிற மாணவர்கள், தமிழ்நாட்டிலே இருந்து வந்தவர்கள் என்ற காரணத்திற்காக வேண்டி, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்போ, மற்றக் கல்விச் சலுகைகளோ கொடுக்க மறுக்கப்படுகிறது. ஆகவே, குடியாத்தம் கல்லூரியிலே இரண்டு மூன்று அல்லது நான்கு ஐந்து வருஷ காலத்திற்கு வரைக்கு மாவது டெம்பரரியாக ஒரு தெலுங்கு செக்ஷன் ஆரம்பிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாணவர்கள் தெலுங்கு மொழி எடுத்துப் படிப்பதற்கு வேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்யும். ஆனால் மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ரக்ஷனை தெலுங்கு மொழியை எடுத்து நடத்த வழி இல்லை.

### தூத்துக்குடி இல்லத்தார் வாலிபர் சங்க உயர்நிலைப்பள்ளி

* 478 வினா.—திரு. மு. ச. சிவசாமி : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி இல்லத்தார் வாலிபர் சங்க உயர்நிலைப் பள்ளியின் அங்கீகாரத்தை 8—2—1967-ம் நாள் Fort St. George கெஜட்டில் வாபஸ் பெற்றிருக்க, மார்ச் மாதம் வரை S.S.L.C. பரீட்சைப் பணம் கட்டாதிருந்தும், நான்கு மாணவர்களுக்கு பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டது ஏன் ?

(இ) 1966-ல் மேற்படி பள்ளியில் S.S.L.C. பரிட்சை எழுதிய மாணவர்களில், இன்றுவரை எத்தனை மாணவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்கப்படவில்லை ?

(உ) கொடுக்கப்படாததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இம்மாணவர்களுக்கு இடர்ப்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, 1967 மார்ச் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வில் தேர்வு எழுத, தனித்த முறையில் இவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதற்கான தேர்வுக் கட்டணம் கருவூலத்தில் ஏற்கெனவே செலுத்தப்பட்டு விட்டது.

(இ) தூத்துக்குடி, இல்லத்தார் வாலிபர் சங்க உயர்நிலைப் பள்ளியிலிருந்து எந்த மாணவரும் 1966, மார்ச் திங்களில் இப்பள்ளி மூலம் தேர்வு எழுதவில்லை.

(உ) இக்கேள்வி எழவில்லை.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, அரசினர் அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றபின்பும், அந்தப் பள்ளியை நடத்துவதால் அரசுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் சிரமம்



1967 நவம்பர் 28]

ஏற்படுகின்றது. ஆகவே, அரசினர் அங்கீகாரம் திரும்பப்பெற்ற பின் பள்ளி நடத்த தனியார் மானேஜ்மெண்ட் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அங்கீகாரம் இல்லாமல் நடத்தப்படுகின்ற பள்ளிகளின்மீது அரசாங்கம் எத்தகைய நடவடிக்கையும் எடுக்காது. கனம் உறுப்பினர் குறிப்பிடும் பள்ளி 1957-58-ல் 9-ம் வகுப்பிலிருந்து 11-ம் வகுப்பு வரை நடத்தி வந்தது. பள்ளி சரிவர நடைபெறவில்லையென்று தெரிந்ததால் அதன் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. அதில் இரண்டு மூன்று மாணவர்கள் படித்துவிட்ட காரணத்தால், அம்மாணவர்களுடைய எதிர்கால வாழ்வு பாழாகிவிடக் கூடாது என்ற காரணத்தால் அவர்கள் மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டார்கள். அந்தப் பள்ளியில் யாரும் சேர வேண்டாமென்று பொது மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த வகையிலே அந்தப் பள்ளி அங்கீகரிக்கப்படவில்லையென்பதை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் திட்டவட்டமாகத் தெரிவிப்பதன் மூலம் எல்லோரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று கோரப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : May I know for what reasons the recognition given to this institution was withdrawn by the Government, what the crimes committed by it are and whether a reasonable opportunity was given to it to see that such errors do not creep in in its administration in future?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியில் 1957-58-ல் 9-ம் வகுப்பிலிருந்து 11-ம் வகுப்புவரை தொடங்கப்பட்டது. 1962-63-ம் ஆண்டு வரை அப்பள்ளி ஆசிரியர்களுக்குத் தர வேண்டிய சம்பளம் சுமார் 14 ஆயிரம் ரூபாய் பாக்கி வைக்கப்பட்டது. அங்கீகாரம் திரும்பப்பெறப்பட்டு மீண்டும் 1964-65-ல் அனுமதி அளிக்கப்பட்டது. மீண்டும் அனுமதி திரும்பப் பெறப்பட்டது. மீண்டும் பள்ளிக்கூடத்திற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது. 1965-66-ல் டி.இ.ஒ. அவர்கள் பள்ளியைப் பார்வையிட வந்தபோது அங்கே ரிக்கார்டுகளும் இல்லை. பள்ளி நடத்தப்படவும் இல்லை. அங்கே சில மாணவர்கள் மட்டும் இருந்தார்கள். சில மாணவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை. மாணவர்கள் கேட்டபொழுது, மானேஜ்மெண்டார் பல்வேறு வகையான சாக்குப்போக்குகள் சொல்லி வந்தார்கள். ஆகவே பள்ளியின் அங்கீகாரம் அறவே இல்லையென்று மீண்டும் சொல்லப்பட்டது. அங்கே கிளார்க்காக வேலை பார்த்து வந்த திரு. அபிஷேகம் பிள்ளை அவர்கள் 6 எஸ்.எஸ்.எஸ்.சி. புத்தகங்கள் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. கரஸ்பான்டெண்ட் திரு. அருணாசலம் அவர்கள் மீதும், திரு. அபிஷேகம் பிள்ளை அவர்கள் மீதும் பல்வேறான வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. போலீசார் வழக்கை நடத்தி வருகிறார்கள்.

[1967 நவம்பர் 28

## State Transport Buses

* 479 Q.—THIRU K. VINAYAKAM:
THIRU K. CHEEMAICHAMY:
THIRU S. J. RAMASWAMY:
THIRU S. RAMACHANDRAN: and
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR:

Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to reduce the fares in the nationalised Government Transport in the City of Madras?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தமிழ்நாட்டு அரசாங்கப் போக்குவரத்துத் துறை சென்னை மாநகரில் நடத்தும் பேருந்துப் போக்குவரத்தின் கட்டண வீதங்கள் 15—9—1967 முதற்கொண்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

**திரு. கே. விநாயகம்:** தலைவர் அவர்களே, சென்னை போக்குவரத்துத் துறையிலே ஏற்கெனவே இருந்த கட்டணத்தை ரேஷனலைஸ் செய்ய வேண்டுமென்றும், கண்டக்டர்கள்--பொதுமக்கள் சில்லறை கொடுத்து வாங்குவது கஷ்டமாக இருக்கிறதென்றும் கூறி, 10, 15, 20, 25, 30, 35 பைசாவாக டிக்கெட்டுகளைத் திருத்தியமைத்திருக்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு லாபமா, நஷ்டமா என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? 14 பைசாவை 15 பைசா என்று உயர்த்தினார்கள். 18 பைசாவை 20 பைசா என்று உயர்த்தினார்கள். இந்தக் குறிப்பிட்ட அளவுக்குத்தான் மக்கள் அதிகமாகப் பிரயாணம் செய்கிறார்கள். ஏதோ 26-ஐ 25 ஆகவும், 22-ஐ 20 ஆகவும் மேல்வாரியாகக் குறைத்து, நீண்ட தூரம் செல்கிறவர்களுக்குச் சாதகம் செய்துவிட்டு, குறைந்த தூரத்தில் பிரயாணம் செய்கிறவர்களுக்கு, அதாவது மீடியம் டிஸ்டன்ஸ் போகிறவர்களுக்குக் குறைக்கவில்லை. இப்படி மீடியம் டிஸ்டன்சில் அதிகமாக மக்கள் பிரயாணம் செய்வதால் அரசாங்கத்திற்கு அதிகமாக வருமானம் கிடைக்கிறது என்பது தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, டிக்கெட் 14 காசு என்றிருந்தபோது ஒரு புதுக்காசு திருப்பித் தருவதில் பிரயாணிகளுக்கும், அலுவலர்களுக்கும் ஏகப்பட்ட தகராறுகள் ஏற்பட்டன. அதை முன்னிட்டு பஸ் தொழிலாளர்களும், பொதுமக்களும் இதைத் திருத்தியமைக்க வேண்டுமென்று பல கோரிக்கைகளை இந்த அரசாங்கத்திற்கு அனுப்பினார்கள் என்பதும் கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். 14 காசை 12 காசு என்று குறைத்திருந்தால், தகராறு ஒரு காசிலிருந்து 3 காசு என்ற அளவில் உயர்ந்து இருக்கும். அதனால்தான், 14 காசு 15 காசாக உயர்த்தப்பட்டது. மேலும் மொத்தம் உள்ள 23 நிலைகளில், 3 நிலைகளில்தான் இந்த உயர்வு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக 10 காசு என்றிருப்பது அப்படியே விடப்பட்டது. 14 காசு 15 ஆக ஆக்கப்பட்டது. 18-20; 22-20; 26-25; 34-35; 38-35; 42-40; 46-45; 50-45; 54-50; 58-55; 62-60; 74-70; 78-75; 82-80; 86-85; 94-90; 98-95 காசுகளாகத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதனால் சர்க்காருக்கு லாபம் வருமா, நஷ்டம் ஏற்படுமா என்பது கணக்குப் பார்த்து முடிந்த பிறகுதான் தெரியும்.



1967 நவம்பர் 28]

**திரு. எஸ். ராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சென்னை மு.ப. 9-30
மாநகராட்சி எல்லைக்குள் தனியார் பஸ்கள் டிக்கெட்டுகள் அச்சிட்டு வைத்துக்கொண்டு பிரயாணிகளை ஏற்றி டிக்கெட்டு கொடுத்து வருகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதனால் சர்க்கார் போக்குவரத்து வசூல் பாதிக்கப்படாதா? ஆகவே இந்தப் பழக்கத்தைத் தடை செய்ய சர்க்கார் முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** குறிப்பிட்டுத் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. நா. காசிராமன்:** மற்ற நகரங்களில் ஓடுகிற தனியார் டவுன்பஸ் சர்வீஸ்களிலும், இதுமாதிரி கட்டண விகிதங்களை மாற்றி அமைத்துக்கொள்ள விரும்பினார்கள் என்றால், அதற்கு அரசு அனுமதி அளிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதுபற்றி அரசுக்கு எழுதுவார்களானால் யோசிக்கப்படும்.

**திரு. எம். எஸ். மணி:** சென்னையில் 14 காசுக் கட்டணத்தை 15 காசாக உயர்த்தியிருப்பதுபற்றிக் குறிப்பிட்டார்கள். இதில் கொஞ்சம் லாபம் கிடைத்தாலும் கூட, சென்னையில் இருந்து திருச்சிக்கு 3 ரூபாய் கட்டணத்தைக் குறைத்திருக்கிறார்களே, அதனால் நஷ்டம் ஏற்படாதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதனால் இப்போது பிரயாணிகள் அதிகமாக இருக்கிறார்கள்.

**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் இதேமாதிரி கட்டண விகிதங்களைக் குறைப்பதற்கு அல்லது மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அது யோசிக்கப்பட்டு இப்போது தேவையில்லை என்று விடப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன்:** சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னை நகரத்திற்குள் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் போய்வர தமிழக அரசப் போக்குவரத்தில் ப்ரீ பாஸ் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதிகக் கட்டணம் கேட்காமல் இருப்பதற்கே அங்கத்தினர் மகிழ்ச்சி அடையவேண்டும்.

**திரு. கே. வினாயகம் :** அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலைப் பார்த்தால், மேலே போகப்போக கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கீழ் நிலையில் 14 காசு 15 காசாகவும், 18 காசு 20 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் இந்தமாதிரி குறைந்த கட்டணத்தில் ஆசிரியர்கள், அரசாங்க குமாஸ்தாக்கள், ஏழை எளிய மக்கள் தான் பிரயாணம் செய்கிறார்கள். இது அவர்களை மிகவும் பாதிக்கிற காரணத்தினால், கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு இதைக் குறைக்க முன்பு இருந்த அளவுக்காவது குறைத்துவிட சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என். ஜி. ஓ.-க்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் கனம் உறுப்பினருக்குத் தெரியும். இந்தக் கட்டண விகிதத்தில் பிரயாணம் செய்கிறவர்கள் ஏறத்தாழ ஒரே தரம் உடையவர்களாக இருக்கிறார்கள். 14 காசை 15 காசாக்க வேண்டாம் என்றால், 10 காசாகக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைப்பதால், தமிழக அரசுப் போக்குவரத்துக்கு அதிக நஷ்டம்தான் வரும் என்பது அங்கத்தினருக்குத் தெரியவேண்டும்.

DR. H. V. HANDE : Sir, with regard to the young boys and girls who are less than 12 years, a concession was asked long, long ago. Is that concession now in force and if so, to what extent the students are availing of this particular concession given to them?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதுபற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

**திரு. வ. ஜார்ஜ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள பஸ் போக்குவரத்தில் இப்போது கட்டணங்களை மாற்றி அமைக்கத் தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்குக் காரணம் என்னவென்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது குறித்து தனியாக ஆலோசிக்க வேண்டியது இல்லை என்பதாக, இப்போது பதில் அளிக்க அவசியம் இல்லை என்று கூறினேன்.

**திரு. கே. வினாயகம் :** கேரள மாநிலத்தில் இன்றைய சட்டசபை அங்கத்தினர்களுக்கு மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தால் அவர்களது வேலைத் திறமை அதிகரிக்கும் என்ற அளவில் ப்ரீ பாஸ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதேமாதிரி நமது மாநில பஸ் போக்குவரத்துக்கும் நமது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ப்ரீ பாஸ் வழங்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதுபோல, நமது மாநிலப் பேரவை உறுப்பினர்களுக்கும் ரயில்வேயில் பாஸ் வழங்கவேண்டும் என்று மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். (ஆரவாரம்).





**திரு. கே. வினாயகம் :** அதுகுறித்து சந்தோஷம், ரயில்வேயில் ப்ரீ பாஸ் பெற்றுத் தரவேண்டிய முயற்சியில் நான் பூரணமாக ஒத்துழைக்கிறேன். அது இன்று நடக்காது. உங்கள் சக்திக்கு உட்பட்டிருக்கிற சர்க்கார் பஸ் போக்குவரத்தில் உடனடியாக உறுப்பினர்களுக்குப் பாஸ் வழங்க முயற்சிப்பீர்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நடக்காதது ஒன்றும் இல்லை. வேறு இரண்டு மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் நம் மாநில உறுப்பினர்களுக்கும் பெற்றுத் தர முடியும் என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அண்மையில் மத்திய ரயில்வே அமைச்சர் வந்திருந்தபோது, நமது முதல் அமைச்சர் கோரினால், வேறு மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதுபோல இந்த மாநிலத்திற்கும் கொடுக்கலாம் என்பதாகத்தான் சொன்னார்கள். அதற்கு ஏற்பாடு செய்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** அதைத்தான் சொன்னேன். நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தம் நண்பருடன் இதுபற்றித் தனியாகப் பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* 480 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :<br>
திரு. கே. வினாயகம் : } மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க பஸ்களில் தமிழக அரசுப் போக்குவரத்து என்று எழுதுவதற்கு எவ்வளவு செலவாயிற்று ?

(இ) திருவள்ளுவர் படமும், திருக்குறள் ஒன்றும் ஒவ்வொரு பஸ்ஸிலும் இடம் பெறச் செய்யும் திட்டத்திற்கென அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) சுமார் ரூ. 1,200;

(இ) திருவள்ளுவர் படம் வைப்பதற்கு ரூ. 3,502-ம், திருக்குறள் எழுதுவதற்கு ரூபாய் 700-ம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. கே. வினாயகம் :** பஸ்களில் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக

யாகா வாராயினும் நாகாக்க காவாக்கால்<br>
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு

என்று எல்லாம் குறள் எழுதப்பட்டிருக்கிறதே, இதன்படி பிரயாணிகள் நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்களா ? பஸ்களை ஓட்டுகிற கண்டெக்டர்கள், டிரைவர்கள் எல்லாம் நடக்கவேண்டும் என்று விரும்புகிறார்களா ? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** நண்பர் அவர்கள் ஒரு சிறிய திருத்தத்தை தம் கேள்வியில் செய்துகொள்ளவேண்டும். ' பஸ் ஓட்டுகிற கண்டெக்டர்கள் ' என்றார். கண்டெக்டர்கள் பஸ் ஓட்டமாட்டார்கள். (சிரிப்பு)

**திரு. கே. வினாயகம் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நான் பஸ் ஓட்டுகிற டிரைவர்கள், கண்டக்டர்கள் என்று. . .

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** திரு. வினாயகம் அவர்கள் அவசரத்தில் இப்படியெல்லாம் பேசுவது வாடிக்கை. (சிரிப்பு) இரண்டாவது, அந்தக் குறள் யாருக்காக எழுதப்படுகிறது என்றார்கள். நா உள்ளவர்களுக்கு எல்லாம் இது சொல்லப்படுவது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** திருவள்ளுவர் படத்தின் அருகில் திருக்குறள் அரசாங்க பஸ்களில் எழுதப்பட்டிருக்கிறதே, இப்படி எழுதுவது பஸ் போக்குவரத்து ஊழியர்கள் தானா ? அல்லது வெளியாரிடம் எழுதுவதற்கு விடப்பட்டதா ? வெளியாரிடம் விடப்பட்டிருந்தால் டெண்டர் கோரி அந்த வேலை விடப்பட்டதா ? தமிழக அரசு போக்குவரத்து என்பதில் இலக்கணப் பிழை இருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மைதானா ? அப்படியிருந்தால் அதைத் திருத்த முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பல கேள்விகளை உறுப்பினர்கள் சேர்த்துப் போட்டிருக்கிறார்கள். முதலாவதாக 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட வேலையாக இருந்தால்தான், டெண்டருக்கு விடப்படும். இதற்கு அவ்வளவு செலவாகவில்லை. மேலும் பஸ் போக்குவரத்து ஊழியர்களே இலவசமாகத் தங்கள் உழைப்பைத் தந்து எழுதி இருக்கிறார்கள். அடுத்து தமிழக அரசு போக்குவரத்து என்பதில் இலக்கணப் பிழை இருப்பதாகச் சொல்கிறார்களே என்றால், இலக்கணப் பிழை எதுவும் இல்லை. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரைப் போன்றவர்களைக் கலந்துகொண்டுதான் எழுதப்பட்டது. தமிழக அரசு என்பதற்கு அடுத்தாற்போல அரசாங்கச் சின்னம் வந்துவிடுகிறது. அப்புறம் போக்குவரத்து என்று இருப்பதனால் அரசு என்ற சொல்லையொட்டி ' ப '-கர ஒற்று சேர்க்கப்படவில்லை என்பதை உறுப்பினர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Several persons coming from outside who are not acquainted with Tamil are very pleasantly surprised when a translation of Tirukkural is offered to them. In view of this, will the Government seriously consider the writing of an English translation of the couplet so that the persons coming from outside and tourists will be surprised to know that so much is contained in such a small couplet?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் அவர்களுடைய இந்த யோசனை அரசாங்கத்தால் பரிசீலிக்கப்படும்.





**திரு. எம். எஸ். மணி :** சார், அரசாங்க பஸ்களில் திருக்குறள் எழுதிய காரணத்தால் பல விபத்துக்கள் ஏற்பட்டதாக ஒரு பிரபலஸ்தர்— சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்—பேசியதாக பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி ஏதாவது விபத்துக்கள் ஏற்பட்டனவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விபத்துகள் ஏற்படுகின்றன. ஆனால் திருக்குறளால் அல்ல. திருக்குறளால் ஏற்படுமென்று சொல்வார்களானால் அது அவர்களுக்கு ஏற்பட்ட விபத்துதான். (சிரிப்பு).

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கன்னியாகுமரியில் இருந்து கேரளத்திற்கு, குறிப்பாக திருவனந்தபுரத்திற்கு செல்கிற பஸ்களில் "ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்" என்றும், பஸ் செல்கிற இடங்களைப் பற்றியும் ஆங்கிலத்திலே எழுதுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆங்கிலத்திலே எழுதுவதற்கும் முயற்சிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** இப்பொழுது தமிழிலேயே எழுதப்படுவது போன்று, " கவர்ன்மென்ட் ஆப் மெட்ராஸ் ட்ரான்ஸ்போர்ட்" என்று இருந்ததை "ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்" என்று மாற்றி எழுதினார்களே, அதைப்பற்றிய செலவு விவரம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது தகவல் இல்லை.

*Sea erosion in Nadar Ovari*

* 481 Q.—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government are aware, that there was sea erosion in Nadar Ovari. South of Sri Swayambulinga Swamy Temple in Nanguneri taluk in Tirunelveli district;

(b) whether any representation requesting the Government to check further sea erosion was received;

(c) whether the Government have any proposal to put up a broad based sea wall to check up the further sea erosion; and

(d) if so, when will the work be started?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம். தேவையான காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

(உ) இல்லை.

(எ) இவ்வினா எழவில்லை.

## Loans to Agriculturists

* 482 Q.—THIRU D. S. AUTHIMOOLAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the amount granted as subsidy and loan respectively for erecting pumpsets?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : விசை ஏற்றத்திட்டத்தின் கீழ் விசை ஏற்றங்களை அமைப்பதற்கு உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. விசை ஏற்றங்களை வாங்கும் செலவுக்காக, 100 சதவீதக் கடன் தொகை வழங்கப்படுகிறது.

**திரு. டி. எஸ். ஆதிமூலம்** : கிணறு வெட்டுவதற்கும் மற்றும் பல விவசாய காரியங்களுக்கும் தக்காவிக் கடன் போன்ற பல கடன்களும், சலுகைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்த சர்க்கார் மட்டுமல்ல, வேறு பல சர்க்கார்களும் அதை நடைமுறையில் வைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த சர்க்கார் ஒரு புது முறையை கடைபிடிக்கும் முறையில், பம்புசெட் வைக்கும் விவசாயிகளுக்கு ஒரு இன்ஸென்டிவ் காண்பிப்பது போல ஏதாவது சப்சிடியோ, லோன் தொகையோ கொஞ்சம் கூடுதல் செய்ய சர்க்கார் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : மானியம் கொடுப்பது என்பது ஒரு திட்டத்தை பொது மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்வதற்காக, உற்சாகப்படுத்துவதற்காக கொடுக்கப்படுவதாகும். இந்த மின்சாரம் வழங்கும் திட்டத்திலே, மானியம் இல்லாமலே மின்சாரம் கிடைத்தால் போதும் என்ற அளவிலேதான், விவசாயிகள் இருக்கிறார்கள், மானியத்துக்கு பதிலாக முழு கடன் தொகை அரசாங்கம் அளித்து வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : பம்புசெட்டுகளுக்காக வேண்டி கொடுக்கக் கூடிய கடன் பணத்திற்கு பதிலாக பம்புசெட்டாகவே சர்க்கார் வாங்கிக் கொடுப்பதுடன் கிணறு வெட்டுவதற்காக எப்படி சப்சிடி, லோன் கொடுக்கப்படுகிறதோ, அதே போன்று இதற்கும் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இப்போதே பணத்திற்கு பதிலாக பம்புசெட்டுகள் வழங்குவதற்கு வேண்டிய வசதி செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. ஆதிமூலம் அவர்களுடைய கேள்விக்கே, சப்சிடி வழங்கப்படவில்லை என்ற நிலைமையை எடுத்துச் சொன்னேன். சப்சிடி எதற்காக வழங்கப்படுகிறது என்றால், ஒரு திட்டத்தை மக்கள் விரும்பி ஏற்க வேண்டும், அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். அத்தகைய சப்சிடிகளை மத்திய சர்க்கார் நிறுத்திக் கொண்டே வருகிறார்கள் என்றாலும், ராஜ்ய சர்க்காரே சில திட்டங்களுக்கு சப்சிடி வழங்கி வருகிறது. மின்சாரத்தைப் பொறுத்தவரையில் முழு கடன் தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வழங்கி வருகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்** : தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பம்புசெட்டுகள் வாங்குவதற்கு கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் கொடுக்கின்ற கடன்கள் தேவைப்படுகிற



அளவுக்கு கொடுக்கப்படுவது இல்லை. ப்ளாக் ஒன்றுக்கு ஆண்டுக்கு 5 அல்லது 6 என்ற பிரிவிலே கொடுக்கப்படுகிறது. இனிமேலாவது தேவைப்படுகிற அளவுக்கு பம்பு செட்டுகள் வாங்க கடன்களை கொடுத்துதவ சர்க்கார் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : விவசாயிகளுடைய தேவை அதிகமென்பதை சர்க்கார் உணர்கிறது. ஆனால் அரசாங்கத்தின் நிதிநிலைக்கேற்பதான், அந்தத் தொகையை ஒதுக்க முடியும். அந்த அளவிலே, ஒரு ப்ளாக்குக்கு மின்சாரத்திற்காக ஒதுக்கப்படுகிற தொகை அந்த ப்ளாக்குக்கு தொடர்ச்சியாக உள்ள கிராமங்களிலும் மின்விசை வழங்குவதிலே அரசாங்கம் தாமதிக்காமல் செயல்படுகிறது. அப்படி எந்த கிராமத்திலேயாவது தொடர்பு ஏற்படுத்துவதில் நெருக்கடி அல்லது கஷ்டம் ஏற்படுமானால், கனம் அங்கத்தினர் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது பரிசீலிக்கப்படும்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்** : தலைவர் அவர்களே, நிலச் சொந்தக்காரர்கள் அல்லாத சாகுபடியாளருக்கும் போதுமான அளவுக்கு பம்ப் செட் போன்றவைகளுக்கு கடன் கிடைக்க அரசாங்கம் வசதி செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : சாகுபடியாளருக்கு நிரந்தரமாக நிலம் சொந்தம் என்ற நிலை இல்லாத காரணத்தால், அந்தக் கடனைப் பெற்ற விவசாயிக்கே மீண்டும் வழங்குவதா என்ற நிலைமை ஏற்படும். புதிய நெருக்கடியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி** : ஐயா, சர்க்கார் கொடுக்கும் கடன்களை விவசாயிகள் பணம் இருக்கும் நேரத்தில் வசூல் செய்யாமல், விவசாயம் செய்யக்கூடிய நேரங்களிலே வசூல் செய்யும் நிலை இப்போது இருப்பதால், கஷ்டம் ஏற்படுவதுடன் விவசாயிகளுக்கு இடைஞ்சலாக மாடுகளை ஜப்தி செய்யக்கூடிய நிலையும் ஏற்படுகிறது. ஆகவே, மகசூல் வரக்கூடிய காலங்களிலே வசூல் செய்யும் படியாக அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : விவசாயிகளை நெருக்கி வசூல் செய்யவேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. ஆனால் அதேநேரத்தில் அத்தகைய நெருக்கடி எங்காவது ஏற்படுமானால் அதை தயவுசெய்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். சில பேர் பணத்தை வைத்துக் கொண்டே கட்டாமல் இருக்கக்கூடிய நிலைமையையும் கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிந்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்களிடம்தான் நெருக்கடி செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஏழை எளியவர்களிடம் எப்போதும் பண நெருக்கடி இருந்து கொண்டுதான் இருக்கிறது. பணம் உள்ள நேரத்திலாவது கடனை திருப்பிக் கட்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் அந்த நிலையைத் தவிர்க்கலாம்.

**திரு. கே. பி. எஸ். மணி** : சார், உண்மையிலேயே ரெவினியூ அதிகாரிகளுக்கு சௌகரியமான காலங்களிலேதான் வரி வசூலிக்கிறார்கள், சம்பா, குறுவை இந்த இரண்டு மகசூல்கள் காலத்திலும்

சம்பாவுக்கு அடுத்து உழுந்து பயிர் செய்யக்கூடிய காலங்களில் தவிர, விவசாயிகளிடத்திலே பணம் இருக்க முடியாது. **ஆகவே,** தயவுசெய்து சம்பா, குறுவை ஆகிய இந்த இரண்டு சீசன்களிலும், உளுந்து பயிரிடுகிற சீசன்களிலும் கடன்களை நிர்தாட்சண்யமாக வசூல் செய்தால் கூட பரவாயில்லை. ஆகவே, அந்தக் காலங்களில் வரி வசூல் செய்யலாம் என்ற முறையை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்களுடைய யோசனைப்படி கையில் பணம் இருக்கும் நேரத்தில் வரி வசூல் செய்வது பற்றி பரிசீலிக்கலாமென்று நேற்று கேட்ட கேள்விக்குக்கூட பதில் சொன்னேன். பணம் வைத்திருப்பவர்கள் கூட சிலர் வேண்டுமென்றே கட்டாமல் இருக்கிறார்கள். திரு. மணி அவர்கள் சொல்வது போல எல்லா விவசாயிகளும் அந்த நிலையில் இருக்கிறார்களா என்று அறியத் தான் விரும்புகிறேன்.

**திரு. எஸ். முருகையன்:** சார், தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக உணவு தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்வது வட ஆற்காடு மாவட்டம்தான். அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பம்புசெட்டுகளுக்காக 4 ஆயிரம் மனுக்களுக்கு மேல் போட்டு விசாரணை செய்யப்பட்டும் பணம் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதற்காக வட ஆற்காடு மாவட்டத்திற்குத் தனியாக விசேஷ கவனம் செலுத்தி, உடனடியாக பம்பு செட்டுகளுக்கு கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** மின்சாரம் வழங்கும் திட்டத்தில் முதன்மையான இடத்தைப் பெற்றிருப்பது வட ஆற்காடு மாவட்டமாகும் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம். இன்னும் மின்சாரம் வழங்கப்பட வேண்டிய கிராமங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கத்தான் செய்கின்றன. அத்தகைய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க அரசாங்கம் கவனம் செலுத்தித்தான் இப்போதும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. கிட்டத்தட்ட 80 முதல் 90 சதவிகிதம் வரை வட ஆற்காடு மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்கக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

* 483 வினா—திரு. முனு ஆதி : மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965, 1966-ஆம் ஆண்டுகளில் செங்கை மாவட்டத்தில் எத்தனை விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் கடனாக வழங்கப்பட்டுள்ளன ?

(இ) இவற்றில் எத்தனை பம்புசெட்டுகளுக்கு மார்ச்சு 1967 முடிய மின் இலாகாவினரால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன ?

(உ) மீதி பம்பு செட்டுகளுக்கு எப்பொழுது மின்சாரம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது ?





**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) 1965-66—207, 1966-67—784.

(இ) 1965-66—207; 1966-67—561.

(உ) மீதி பம்பு செட்டுகளுக்கு 1967-68-ல் மின்சாரம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம் :** செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கு விவசாயம் பெருகவேண்டுமென்றால், கிணற்றிலிருந்து தண்ணீரை மேலே எடுத்துத்தான் விவசாயத்தைப் பெருக்கமுடியுமென்ற நிலை இருப்பதாலே இன்றையதினம் பல மனுக்கள் பிளாக் டெவலப்மென்ட் ஆபீஸர்களிடமே தேங்கிக் கிடக்கின்றன. அதற்குக் காரணம் இதற்காக ஒதுக்கிய பணம் செலவாகிவிட்டது, ஆகையினால் வருகிற ஆண்டிலே பார்க்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே அந்தச் சிக்கலான நிலைமையைப் போக்குவதற்குக் கூடுதலாகப் பணம் ஒதுக்கி, அட்ஹாக் கிராண்ட் என்றாவது ஒதுக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இன்றைய நிலையில் அரசாங்கத்தின் நிதிநிலை சரியில்லை. மத்திய சர்க்கார் 3 கோடி ரூபாய் மின்சாரத்திற்காகக் கொடுப்போம் என்று வாக்களித்திருக்கிறார்கள். சமீபத்திலே திரு. அண்ணாசாகிப் சிண்டே அவர்கள் மதுரையிலே நீர்ப்பாசனத்திற்கு என்று 3 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் கொடுக்கும் என்று வாக்களித்திருக்கிறார்கள். அது வந்தால், கூடுதலாகக் கொடுப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, கிணற்றுக்குக் கடன் கொடுக்கப்பட்டு, கிணறு எடுத்த பிறகு மீண்டும் மின்சார பம்புசெட்டுக்கு என்று தனியாக மனுக்கள் போட வேண்டியிருக்கிறது. கிணற்றுக்குத் தனியாகவும், பம்புசெட்டுக்குத் தனியாகவும் அனுமதி கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி செய்யாமல் கிணறு தோண்டுகிற பொழுதே மின்சார பம்புசெட்டுக்கும் சேர்த்து ஒன்றாக மனுப் போடுவதற்கும், அதற்கு ஒன்றாகவே அனுமதி வழங்குவதற்குமான திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** கிணற்றுக்குத் தனியாகவும், மின்சாரத்திற்குத் தனியாகவும்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். இரண்டிற்கும் ஏக காலத்திலே அனுமதி கொடுப்பது என்பது சாத்தியமில்லை. கிணற்றிலே தண்ணீர் வராமல் இடையிலே பாறை வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டால் அதைக் கைவிடக்கூடிய நிலைமையிருக்கலாம் என்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அப்படியிருப்பதால், இரண்டிற்குமாகச் சேர்த்து நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது.

**திரு. க. மு. ராசகோபால் :** பல ஒன்றியங்களிலே ஒதுக்கிய பணம் செலவழிக்கப்படாமல் அப்படியே இருக்கிறது. ஆனால் பல ஒன்றியங்களிலே ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட்டு பணம்

இல்லாமல் இருக்கிறார்கள். ஆகையினால் பணம் செலவழிக்கப் படாமல் இருக்கிற இடங்களிலிருந்து பணம் தேவைப்படும் இடங்களுக்கு ஒதுக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி ஒதுக்கிய பணம் செலவழிக்கப் படாமல் எங்கே இருக்கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. நா. காசிராமன்** : தலைவர் அவர்களே, பம்புசெட்டுகளைப் பற்றிக் கேட்கிறேன். மின்சார பம்புசெட்டுகளின் விலையில் எத்தனை சதவீதம் கடன் கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : முழுத் தொகையும் கடனாகத்தான் கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. விநாயகம்** : செங்கற்பட்டு மாவட்டத்திலே தெற்குப் பகுதியிலே தண்ணீர் இல்லாமல் ஒரு பாலாறு ஓடுகிறது; வடக்குப் பகுதியிலே தண்ணீர் இல்லாத ஆறும் இல்லை; எந்த ஆறும் இல்லை. ஆகவே திருத்தணித் தாலுகாவைப் பொறுத்தவரையிலும் தனிச் சலுகை கொடுத்து அதிகமாகப் பணத்தை ஒதுக்குவதற்கு முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : முன்பகுதிக் கேள்விக்கும் பின்பகுதிக் கேள்விக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. பின் பகுதிக் கேள்வியைப் பொறுத்தவரையில் நான் அந்தத் தொகுதிக்குச் சென்று வந்தேன் . . .

**திரு. கே. விநாயகம்** : மலையைப் பார்த்து வந்திருப்பீர்கள் . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : மலையையும் காட்டையும் பார்த்து வந்தேன் . . .

**திரு. கே. விநாயகம்** : அங்கே காடு இல்லை . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : அங்கே காடு இல்லை என்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்களுடைய தொகுதியை நன்றாகச் சுற்றிப் பார்க்க வேண்டும். இரண்டாவது கேட்ட கேள்வியைப் பற்றி அந்த யூனியன் சேர்மனிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது. அந்த கோரிக்கையைப் பரிசிலனை செய்யவேண்டுமென்று கருதுகிறேன். திரு. விநயகம் அவர்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அது ஆந்திராவுடன் சேரவேண்டியதா அல்லது தமிழகத்தினுடைய பகுதியாக இருக்கவேண்டுமா என்ற பிரச்னையிலேயே அது பின்தங்கிய பகுதியாக இருந்திருப்பதாலே, கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்தாலும், ஒத்துழைக்காவிட்டாலும், அந்தத் தொகுதிக்கு நன்மை செய்யவேண்டுமென்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

**திரு. கே. விநாயகம்** : காடு என்றால் என்ன ? எந்த அளவுக்குச் செடி வளர்ந்தால் காடு என்று சொல்ல முடியும் என்று விளக்க முடியுமா ?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : காடு என்பது அடர்த்தியாகவும் இருக்கிறது, இல்லாமலும் இருக்கிறது. காட்டு இலாகாவுக்குச் சொந்தமானவை அழிக்கப்பட்டிருந்தாலும்கூட, காடு உற்பத்தியாகவேண்டுமென்ற கருத்தில்தான் செடிகள் நடப்பட்டு வருகின்றன. அந்த இடத்திற்குக் காடு என்றுதான் பெயர். கனம் அங்கத்தினர் அவர்கள் பூகோளப் பாடத்தைப் படித்துவிட்டு அடர்த்தியாக இருப்பதுதான் காடு என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு பிரிந்தபொழுது துர்ப்பாக்கிய வசமாக காடுகள் இல்லாமல் இருந்தாலும்கூட, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் காடு வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

* 484 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government propose to increase the subsidy in the quantum of financial assistance given to the ryots, to enable them to purchase oil engines so as to facilitate early utilisation of filter-point wells where supply of electricity is not available?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இது ஆராயப்பட்டு வருகிறது.

**திரு. கே. விநாயகம்** : இந்தக் கேள்வியினுடைய பதிலைச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : இந்தத் திட்டம் ஆராயப்பட்டு வருகிறது.

**திரு. கே. விநாயகம்** : இந்தத் திட்டத்திற்காகவென்று எவ்வளவு ஒதுக்கி வைப்பதாக அரசாங்கத்திற்கு யோசனை இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : கனம் அங்கத்தினர் அவர்கள் இத்திட்டத்திற்கு ஃபினான்ஷியல் அஸிஸ்டென்ஸ் எவ்வளவு என்று தான் கேட்டார்கள். அந்த விவரம்தான் இருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

**திரு. கே. விநாயகம்** : இந்த விஷயத்தைப்பற்றிய தகவல் அமைச்சரிடம் இருந்தால் அதை இந்தச் சபைக்குச் சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி** : 3,500 ரூபாய் கடன் வழங்கப்பட்டு வந்ததை இப்பொழுது 4,000—ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதில் 10 சத விகிதம் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. அதை 25 சத விகிதம் ஆக உயர்த்தலாமா என்பது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது. அதுதான் ஆராயப்பட்டு வருகிறது என்று சொன்னேன்.

[1967 நவம்பர் 28

* 485 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி : மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராமங்களில் கிணறு வெட்டுவதற்கு லோன் தொகைகள் தவறாக பயன் படுத்தப்படுவதால் அரசுத் துறையிலேயே கடனை ரொக்கமாகக் கொடுக்காமல் அதற்குப் பதிலாக கிணறுகளை அரசாங்கமே தோண்டி கொடுக்கும் திட்டம் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இத்திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, கிராமங்களுக்குத் தரக்கூடிய கிணறு வெட்டு லோன், என்னுடைய பகுதியைப் பொறுத்த வரையிலும், கிணறு வெட்டுகிறபொழுது கற்கள் நிறைய இருப்பதால் 4-வது அல்லது 5-வது கஜம் வெட்டில் பாறைகள் வருகின்றன. ஆகையால் விவசாயிகள் தோண்ட முடியாத நிலை ஏற்பட்டு கைவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. சர்க்காரிடமிருந்து வாங்கிய லோன் முழுவதையும், 2 ஆயிரம் ரூபாயையும் உடனே கட்டக்கூடிய நிர்ப்பந்தமான நிலை இருக்கிறது. அதை மாற்றிச் சர்க்காரே கிணறு வெட்டித்தரக்கூடிய நிலையில் அதற்காக ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இதற்காக நியமிக்கப்படும் அரசாங்க ஊழியர்கள் செலவு அதிகமாகும் என்பதால் இத்திட்டம் கைவிடப்பட்டது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டபடி இல்லாமல் பாறை வராமல் இருக்கக்கூடிய வகையில், முன்னமேயே வாட்டர் டிவைனர் மூலம் எந்தப் பகுதியில் வாட்டர் இருக்கிறது என்பதை நன்றாகப் பரிசீலனை செய்தபிறகு இந்தத் திட்டத்திலே ஈடுபடுவது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவரவர்களே, கிணறு வெட்டுவதற்கு எங்கள் பகுதியிலே அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படுகிற போர் போடுகின்ற வேலை சரியாக நடைபெறவில்லை. அந்தப் பகுதியிலே 100 அடி, 150 அடி வரையிலும் தோண்ட வேண்டியிருக்கிறது. ஆகையினால் நல்ல இயந்திரங்களை வாங்கிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா? இப்பொழுது உள்ள இயந்திரங்கள் போர் போடுவதற்கு, ஒரு குழி போடுவதற்குக்கூட 3 மாதம், 6 மாதம், ஒரு வருஷம் என்று ஆகிறது. கோவையிலே வெளிநாட்டிலே இருந்து சில இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு குறைந்த நேரத்தில் 20 அடி என்ற அளவுக்கு வேலையை முடிக்கிறார்கள்; இரண்டாயிரம், மூன்று ஆயிரம் ரூபாய் என்று சம்பாதிக்கிறார்கள். ஒரு நாளிலேயே போர் போடுகின்ற வேலை முடிந்துவிடுகிறது. ஆகவே நல்ல இயந்திரங்களைக் கொண்டுவர ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் முதலிலே கேட்ட கேள்வியில் வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களை வரவழைக்க வேண்டுமென்று சொன்னார்கள்.





இரண்டு இயந்திரங்களின் விலை ரூ. 23 லட்சம் வரை ஆகிறது. இதைத் தவிர சர்க்கார் கொண்டுவரும் இயந்திரங்கள் சரியாக இயங்கவில்லை என்று சொன்னார்கள். எந்தப் பகுதியில் சரியாக இயங்கவில்லை என்று அவர்கள் சொல்லவேண்டும். அவர்களுடைய கிணற்றைப் பார்க்கக்கூடிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே கிணறு வெட்டுவதிலே அதிகமான சங்கடங்கள் இருப்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது.

திரு. க. ர. நல்லசிவன் : கிணறுகளைச் சர்க்காரே வெட்டிக் மு. ப. 10-00
கொடுக்காவிட்டாலும் தண்ணீர் எந்த இடத்தில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துக் கொடுக்கும் திட்டத்தையாவது சர்க்கார் மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது வாட்டர் டிவைனர்ஸ் எங்கு பார்த்தாலும் இருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் விரும்பினால் அத்தகைய நிபுணர்கள் பட்டியலைத் தரத் தயாராக இருக்கிறேன். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தண்ணீர் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்கக் கூடிய ஆற்றலுள்ளவர்கள். அவரை அவருடைய செலவிலேயே திரு. நல்லசிவம் அவர்களுடைய தொகுதிக்கு அழைத்துச் செல்லலாம். நஷ்டம் ஏற்பட்டாலும் திரு. கருத்திருமன் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

திரு. ஆர். நாகசுந்தரம் : கிணறுகளுக்காகக் கடன் கொடுக்கும் போது எப்படி வீடு கட்டுவதற்காக மூன்று நிலைகளில் மூன்று தவணைகளாகக் கடன் கொடுக்கப்படுகிறதோ அதே முறையில் இதற்கும் கொடுப்பதற்கு தக்க யோசனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அந்த முறையைத்தான் கையாண்டு வருகிறோம்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : பைலட் ஸ்கீமாக கம்யூனிடி வெல் வெட்ட திட்டம் வகுக்கப்பட்டு பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகச் சொன்னதாகத் தெரிகிறது. அரை ஏக்கர், ஒரு ஏக்கர் உள்ள சிறு நிலச்சுவான்தார்களுக்கு இந்த மாதிரி கம்யூனிடி வெல் வெட்டுவது மிகவும் அவசியமானது என்ற காரணத்தால் அந்தத் திட்டத்தை மேற்கொள்ள சர்க்கார் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சமுதாய கிணறுகளை வெட்டும் திட்டத்தைக் கைவிட்டதாக நான் குறிப்பிடவில்லை. சமுதாய கிணறுகளை வெட்ட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். அதற்காக குறிப்பிட்ட பகுதியின் பஞ்சாயத்து யூனியன் தலைவரும், சட்ட மன்ற உறுப்பினரும் சேர்ந்து 1 ஏக்கர், 2 ஏக்கர் என்று குறைவான நிலம் வைத்திருப்பவர்களில் பத்து இருபது பேரைச் சேர்த்து கிணறுவெட்டுவதற்கான இடத்தைக் குறிப்பிட்டால் கிணற்றை வெட்டி அதிலே பம்ப் செட் போட்டு இரண்டுக்கும் ஆன செலவை எந்தத் தண்ணீர்த் தீர்வை முறையின்

[1967 நவம்பர் 28

(எ) 1964-65-க்கு உதவித் தொகை வழங்கி 1965-66-க்கு உதவித்தொகை வழங்காமல் நிறுத்தப்பட்ட மாணவர்கள் இவ்வாண்டு பரிட்சை எழுத கலந்து கொள்ள முடியாது தடுக்கப்பட்டிருப்பது பற்றி அரசுக்கு தெரியுமா?

(ஐ) ஆம் எனில், இம்மாதிரி தடுக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கவும் பரிட்சையில் கலந்து கொள்ள அனுமதிக்கவும் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**

| | 1964-65 | 1965-66 | 1966-67 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| (அ) தமிழக அரசு உதவித் தொகைகள். | 70,49,900 | 72,79,000 | 82,23,500 |
| (இ) இந்திய அரசு உதவித் தொகைகள் (பொருளாதார வகையில் பின் தங்கிய நிலையில் உள்ள மாணவர்கள்). | 14,84,000 | 14,84,000 | 14,84,000 |
| **தமிழக அரசு :** | | | |
| மெட்ரிக் முன் படிப்பு .. | 51,427 | 50,202 | 54,303 |
| மெட்ரிக் மேற்படிப்பு .. | 26,005 | 31,701 | 36,030 |
| மொத்தம் .. | 77,432 | 81,903 | 90,333 |
| **இந்திய அரசு :** | | | |
| மெட்ரிக் மேற்படிப்பு மட்டும் | 9,791 | 10,912 | 10,351 |
| (உ) தமிழக அரசு : | | | |
| மெட்ரிக் முன் படிப்பு | 37,150 | 37,258 | 43,997 |
| மெட்ரிக் மேற் படிப்பு | 8,950 | 13,270 | 14,931 |
| மொத்தம் .. | 46,100 | 50,528 | 58,928 |
| இந்திய அரசு : | | | |
| மெட்ரிக் மேற்படிப்பு மட்டும் | 7,915 | 8,692 | 8,019 |

(எ) விதிகளின்படி தகுதியுள்ள எந்த மாணவனின் மனுவும் நிராகரிக்கப்படவில்லை. 1966-67-ம் ஆண்டில் பரீட்சை எழுத கலந்து கொள்ள முடியாமல் எந்த மாணவனும் நிறுத்தப்படவில்லை.

(ஐ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதுரை மருத்துவக் கல்லூரியில் ஆர். சேது என்ற மாணவர் 1965-ல் இந்தி எதிர்ப்பு போராட்ட காலத்தில் சிறைபடுத்தப்பட்டு பாதுகாப்பு கைதியாக இருந்த காரணத்தினால் அவருக்கு அரசாங்க உதவி, ஸ்காலர்ஷிப் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது அரசுக்குத்



1967 நவம்பர் 28]

தெரியுமா? அந்த மாணவரின் நிலையை அனுதாபத்தோடு பரிசீலனை செய்து அவருக்கு உதவி நிதி கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சேது என்ற மாணவர் 1964-65-ல் இயக்குநர் அவர்களுக்கு மனு ஒன்றைத் தந்திருக்கிறார்கள் உபகாரச் சம்பளம் தரவேண்டுமென்று. 1965-ல் அவர் கல்லூரியில் சரியானமுறையில் அதிக நாள் கலந்து கொள்ளவில்லை என்ற காரணத்தினால் டீன் அவர்கள் அவர்களுக்கு உபகாரச் சம்பளம் தருவதைத் தடுத்திருக்கிறார்கள். மீண்டும் அவர் இரண்டாவது முறையாக 1967-ம் ஆண்டு ஏப்ரல் பரீட்சைக்கு கலந்து கொள்ளவேண்டுமென்று மனு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பரீட்சையில் அவர் கலந்து கொள்ளவில்லை. மேற்கொண்டு அவர்களைப் பற்றி எந்தத் தகவலும் இந்த இலாகாவிற்குக் கிடைக்கவில்லை.

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் : இந்த உதவித் தொகை கல்வி ஆண்டு இறுதியில் மாணவர்களுக்கு கிடைத்து வருகிறது. அதை ஆரம்ப காலத்தில், ஜூலை, ஆகஸ்டு மாதத்தில் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த ஆண்டு அப்பேர்ப்பட்ட காலதாமதமாகாமல் ஆண்டு முதலிலேயே தருவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை ஒதுக்குவதை மறுபரிசீலனை செய்து எல்லா வகுப்பினரும் வருமான அடிப்படையில் உதவித் தொகை அளிக்கும் வகையில் மாற்றியமைக்கும் திட்டம் அரசினரிடம் உண்டா? அரசினரின் யோசனையிலாவது இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட திட்டம் எதுவும் இன்றைக்கு யோசனையில் இருக்கவில்லை.

திரு. கே. போஜன் : பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு அரசினர் உதவிப் பணம் அளிக்கும் விஷயத்தில் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து அவர்களுக்கு உதவிப் பணம் அளிப்பதில் கால தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. அப்படி காலதாமதம் ஆவதை தவிர்த்து உடனடியாக விண்ணப்பங்களை பரிசீலித்து உடனடியாக உதவிப் பணம் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : காலதாமதம் பல கோணங்களில் ஏற்பட்டு வருகிறது. கூடுமானவரையிலும் அவைகளைத் தவிர்த்து இந்த ஆண்டு விரைவில் கொடுக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். குறிப்பாக அவர்களது வகுப்பு என்று கூறுவதிலும், பெறுகிற வருமானம் என்பதிலும் பல தவறுகள் ஏற்படுவதால் அவைகளை ஆரம்பத்தில் சரியான முறையில் பரிசீலிக்கவேண்டியிருப்பதால் இருக்கிற காலதாமதம் ஏற்படுகிறது.

[1967 நவம்பர் 28

**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி** : வெளி ஊர்களிலிருந்து வந்து கல்லூரிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு கொடுக்கப் படும் உதவித் தொகை போதாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதைக் கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று மனு வந்துள்ளதா? அரசு அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : இப் போது கொடுக்கப்பட்டு வருகிற உபகாரத் தொகைகள் சென்னைக்கு தனியாக ஒரு தொகையும், வெளி ஊர்களுக்கு தனி யாக ஒரு தொகையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வெளி ஊர்களிலிருந்து சென்னைக்கு வந்து படித்தாலும் அவர்களுக்கு சென்னையில் கொடுக்கிற தொகையும், சென்னையில் இருப்பவர்கள் வெளி ஊர்களுக்குச் சென்று படிக்க நேர்ந்தால் அவர்களுக்கு வெளி ஊர்களில் கொடுக்கப்படும் தொகைதான் இன்று கொடுக்கப் பட்டு வருகிறது.

**திரு. என். வரதராஜன்** : பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் ஒரே பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஹாஸ்டலில் இருப்பவர் களுக்கு ஒரு சலுகையும், ஹாஸ்டலுக்கு வெளியே இருப்பவர் களுக்கு குறைந்த சலுகையும் கிடைக்கும் நிலை இன்று இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதைப் போக்குவதற்கு முயற்சி செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : இந்தச் சம்பளங்கள் இரண்டு வகைப்படுகிறது, ரெஸிடென்ஷியல் அண்ட் நான்-ரெஸிடென்ஷியல் என்று. ஹாஸ்டலுக்குள் தங்கிப் படிப் பவர்களுக்கு ஒரு தொகை, வெளியே தங்கிப் படிப்பவர்களுக்கு ஒரு தொகையாகத்தான் இன்று நிர்ணயித்து தரப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம்** : பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு இப்போது எந்த அடிப்படையில் கல்வி உதவித்தொகை ஒதுக்கப் படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு இன்று அவர்கள் பெறுகிற வருமானத் தொகையை வைத்து மத்திய அரசு தருவதாகயிருந் தால் ஆண்டு ஒன்றுக்கு 300 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் இருப்பவர்களுக்கு, பின்தங்கிய வகுப்பில் இருப்பவர்களுக்கு, இன்று அவர்களுக்கு உபகாரச் சம்பளம் தரப்படுகிறது. மாநில அரசு பின்தங்கிய வகுப்பினருக்கு இதற்கு முன்னால் 1,500 ரூபாய் வருமான எல்லையாக இருந்ததை இன்று இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு அந்த வருமான எல்லை 2,000 ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது. எனவே இந்த வருமானத்தை முன்னிட்டுத்தான் அந்தத் தொகைகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கரு. சீமைச்சாமி** : பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு இந்த உதவிப் பணம் அளிப்பதில் முன்பு மாவட்ட கலக்டர்கள் 10 சதவிகிதம் அங்கு சாங்க்ஷன் செய்யலாம் என்றிருந்தது.



1967 நவம்பர் 28]

இப்போது அந்த அதிகாரம் எடுக்கப்பட்டு விட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் கலக்டரிடம் இதுபற்றி சொல்கிறபோது அமைச்சர் களிடம் சொல்லுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே முன் பிருந்தது மாதிரி 10 சதவிகிதம் கலக்டர் கொடுக்க அவ்வதி காரத்தை மீண்டும் கொடுக்க உத்தேசமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : அம் முறை இருந்ததில் பல தவறுகள் ஏற்பட்டு சரியான தகவல் பேரில், தகுந்த விளக்கங்கள் பேரில் தராமல் மீண்டும் மாணவர்களிட மிருந்து கொடுத்த பணத்தைத் திரும்ப வாங்குகிற தவறுகள் ஏராளம் ஏற்பட்டு இருப்பதை உத்தேசித்துத்தான் இப்போது சர்க்காரே முழுப் பரிசீலனை செய்து அந்த முழுத் தொகையையும் ஒதுக்கும் முறையை ஏற்படுத்தியிருக்கிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது** : வாழ்க்கைச் செலவினங்களின் புள்ளி கூடியிருப்பதை நம் அரசு உணருகின்றபோது மாணவர் களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகையை வாழ்க்கைச் செல வினப் புள்ளி அடிப்படையை வைத்து உயர்த்திக் கொடுக்க யோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : இது சம்பந்தப்பட்ட கேள்வியில்லை என்றாலும் அடுத்து இதைத் தொடர்ந்து கேள்வி வருகிறது. அதுகுறித்து இப்போது அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு வருகிறது.

* 487 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :
திரு. கே. பி. எஸ். மணி : } மதிப்பிற்குரிய தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசன மாணவர்களுக்கு வழங்கப்படும் ரெசிடென்சியல், நான்-ரெசிடென்சியல் ஸ்காலர்ஷிப்புகள், அம்மாணவர்கள் செலுத்த வேண்டிய சம்பளம், தனிக் கட்டணங்கள (Special fees) ஆகியவற்றிற்குப் போதாமல் தங்கள் கைப்பணம் கொடுக்க வேண்டியுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இக்குறையை நிவர்த்திக்கும் உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : (அ) & (இ) மெட்ரிக் படிப்பிற்கு முந்திய வகுப்புகளுக்கு, தகுதியுள்ள வகுப்பினர்க்கு அளிக்கப்படும் உதவித்தொகை போதுமானதாக இல்லை என்பது பற்றிய புகார் எதுவும் வரவில்லை. எனினும், மெட்ரிக் மேற்படிப்பிற்கான உணவு, உறைவிடக் கட்டணங்களை உயர்த்த வேண்டுமென முறையிடப்பட்டுள்ளது. உணவு, உறை விடக் கட்டணங்களை உயர்த்துவது பற்றிய ஹரிஜன நலத்துறை நெறியாளரின் செயற்குறிப்பு அரசின் நாட்டத்தில் உள்ளது.

**திரு. கே. விநாயகம்** : இந்தக் கேள்வி ஹரிஜன மாணவர்களைப் பொறுத்தது. முந்திய கேள்வி பின்தங்கிய வகுப்பு மாணவர்களைப் பற்றியது, பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் நலனை

உத்தேசித்து அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கமிட்டியில் ஏற்கனவே ஒதுக்கி வைக்கிற இந்தப் பணம் போதாது என்று சொல்லி குறைந்தது ஒரு கோடி ஒதுக்க வேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். அதுபற்றி அரசாங்கம் யோசித்ததா? அதில் ஏதாவது அதிகப்படுத்திக் கொடுக்க முடியுமா? பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் 50 சத விகிதம் மார்க் வாங்கினால் போதும், அவர்களுக்குத் தருகிறார்கள். மோஸ்ட் பாக்வேர்ட் என்று சொல்லுகிறவர்களுக்கு அவர்கள் 45 சத விகிதம் மார்க் வாங்கினால் போதும் என்று இருக்கிறது. அதை சிறிது உயர்த்தி மார்க் 40 வாங்கினாலும் தரப்படும் அல்லது 45 வாங்கினாலும் தரப்படும் என்று திருத்தியமைக்க முடியுமா? மேலும் மனு போட்டு அதில் சின்ன தவறுகள் ஏற்பட்டால் ஹரிஜன நல இலாகாவிலிருந்து திரும்பி அந்த மனுக்களை ப்ரின்சிபாலுக்கு அனுப்புகிறார்கள். ப்ரின்சிபால் அதை மாணவர்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை. மாணவர்கள் நினைக்கிறார்கள், தங்களுக்கு வரும் வரும் என்று கடைசிவரை இருக்கிறார்கள். அவர்களுக்கு நடுவே ஏற்பட்ட சிக்கல்கள் தெரியாமல் கடைசி நேரத்தில் அதிருப்தி அடையும் நிலை ஏற்படுவதால் நேரடியாக டைரக்டர் ஆஃப் ஹரிஜன் வெல்பேர் இந்த மனுக்களை மாணவர்களுக்கே அனுப்ப வேண்டுமென்று திருத்தியமைக்கப்படுமா?

THIRU S. BALASUBRAMANIAN : On a point of order. I want to know how many supplementary questions can a member ask at a time.

THIRU K. VINAYAKAM : It depends upon the ability of the member.

***மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :*** *கனம் உறுப்பினர் அவர்கள் பெயரிலேயே 'வினா' என்று இருப்பதால், அவர் எவ்வளவு வினாக்கள் வேண்டுமானாலும் கேட்கலாம்!*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :*** *தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பினர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கவேண்டுமென்று கூறப்பட்ட யோசனையைப் பற்றி நடவடிக்கை ஏதாவது எடுக்க இருப்பதாகத் தகவல் இருக்கவில்லை. இருந்தாலும் இன்றைக்கு இருக்கிற தொகைகள் விலைவாசி ஏற்றத்தின் காரணமாகக் குறைவாக இருப்பதை முன்னிட்டு அதை அதிகப்படுத்தவேண்டுமென்று அரசு பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது. அதில் 40 மார்க்கா, 45 மார்க்கா என்றால், அப்போது பரிசிலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வரும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.*

***திரு. கே. பி. எஸ். மணி :*** *ஸார், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று இரண்டு வகுப்புகள் இருக்கின்றன. அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் முதலியவைகள் கொடுப்பதற்கென்று இந்த இலாகா இருக்கிறது. இந்த இரண்டு*





*வகுப்பினரும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அல்லது இந்தியா பூராவையும் எடுத்துக்கொண்டாலும் 65 சத விதம் பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, மொத்த வருமானத்தில் 65 சத விதம் அவர்களுக்குச் செலவழிக்கப்படவேண்டும். இந்தக் கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்ற முயற்சி செய்யுமா? இல்லையென்றால், ஓரளவுக்காவது, மொத்தத்தில் 50 சத விதம் அளவுக்காவது உதவி செய்து, அவர்களுடைய கல்வி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு முயற்சி செய்யுமா?*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :*** *தலைவர் அவர்களே, மக்கள் தொகையின் அடிப்படையில், அதற்கேற்ற விகிதாசாரப்படி அனைத்துக்கும் உதவி செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இன்றைக்குக் கேள்வி வந்திருப்பது கல்விக்குத் தரப்படுகிற சலுகை குறித்தும், அதற்கு ஒதுக்கப்படுகிற தொகை குறித்தும் ஆகும். அதுவும் பல்வேறு பகுதிகளாக மக்கள் பிரிந்து, தொகைகளும் பல்வேறு துறைகளுக்கானதாக இருப்பதால், பிற்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று பல கூறாகப் பிரித்துத் தரப்படுகிறது. இன்றைக்கு அப்படிப் பிரித்துக் கொடுக்கும் தொகையும் ஓரளவுக்கு அதிகமாக இருக்கிறது என்றாலும், இதை மேலும் அதிகமாக்கவேண்டுமென்ற முயற்சியில் இந்த அரசு மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் அதிகத் தொகை கொடுக்கும் நிலைமை ஏற்படுமானால், நிச்சயமாக கனம் உறுப்பினர் எண்ணம் நிறைவேற்றப்படும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.*

***திரு. நா. கிருட்டிணன் :*** *தலைவர் அவர்களே, இத்தகைய சலுகை பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், ஹரிஜன மாணவர்களுக்கும் வழங்கப்படுவதன் நோக்கமே அவர்கள் பொருளாதாரத் துறையில் பின் தங்கி இருக்கிறார்கள் என்றுதான். ஆனால் இத்தகைய சலுகைகளின் மூலம் கல்லூரி ஆண்டின் முடிவில் தான்—ஜனவரி, ஃபிப்ரவரியில் தான்—அவர்களுக்குப் பணம் கிடைக்க இது வரையில் வழி வகுத்துத் தந்திருக்கிறார்கள். இந்த அரசாவது உரிய காலத்தில்—ஜுலை, ஆகஸ்ட் மாதத்தில்—கொடுக்க வழி செய்யுமா? என்று அறிய விரும்புகிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :*** *இதற்குரிய பதிலை நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன் என்றாலும், கொடுக்கப்படுகிற தகவல்கள் தவறாக இருந்தால் பரிசிலனை செய்ய காலதாமதம் ஆகிறது. பொறுப்புள்ள, உறுப்பினர்கள் போன்றவர்கள், மாணவர்கள் தகவல் தரும்போது பக்கத்தில் இருந்து சரியான தகவல் கொடுக்க ஏற்பாடு செய்தால், விரைவில் கொடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு அதுவும் துணையாக இருக்கும்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *இன்னும் ஆறு வினாக்கள் இருக்கின்றன. இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் அவற்றை முடிக்க வேண்டும்.*

திரு. எல். கணேசன் : தலைவர் அவர்களே, அரைச் சம்பளம் முதலியவற்றில் தனியார் கல்லூரிகளில் சில ஒழுங்கீனங்கள் நடப்பதாக ஏதேனும் புகார்கள் வந்திருக்கின்றனவா? குறிப்பாக அதிராம்பட்டணம் கல்லூரியில் மாணவர்களுக்கு அரைச் சம்பளம் வழங்குவதில் கல்லூரி நிர்வாகிகள் மோசடி செயவதாகப் புகார்கள் ஏதேனும் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது பற்றி இது வரையிலும் எந்தப் புகாரும் வரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால் கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக எழுதித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் விடுதிக் கட்டணம் கூடுதலாக இருக்கிறது என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை என்று கூறினார்கள். அப்படி கவனத்திற்கு கொண்டுவரப்பட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது அது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அடுத்த ஆண்டு துவக்கத்திலே ஓரளவு உயர்த்திக் கொடுக்கப்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, does this Ministry realise that all these theoretical or practical advantages that have been given to the Harijan pupils all these years have not touched even the fringe of the problem, because there is such vast disparity between Harijan pupils and pupils of other communities? In the 38th Division represented by the Minister, there are only three Graduates whereas in other places there are 600 to 1,000 Graduates in one small division. In view of this, will the Minister for Harijan Welfare or the Chief Minister come forward and tell us whether the Government will start at least one hostel in every district headquarters where meals and lodging are given, as that will be a real boon to the people who have been depressed all these years?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது சம்பந்தப்பட்ட கேள்வி இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அக்கறையோடு கேட்பதால், சென்னையிலேயே இன்றைக்குக் கல்லூரி மாணவர்களுக்கு எம். சி. ராஜா ஹாஸ்டல் என்று மிகப் பெரிய விடுதி இருக்கிறது, அதில் ஏராளமான மாணவர்கள் தங்கிப் படிக்க வசதி இருக்கிறது, ஒரு குறிப்பிட்ட வட்டத்தைக் குறித்துக் கூறினால் அது குறித்துச் சர்க்கார் எந்த வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றே கூறிக் கொள்ளுகிறேன்.





## அரசாங்க வழக்குரைஞர்கள்

*488 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் மாவட்டவாரியாக உள்ள Government Pleaders, Public Prosecutors, Assistant Public Prosecutors எத்தனை பேர்கள்?

(இ) அவர்களுக்கு சம்பளமாக அல்லது கேஸ்களின்மீது கட்டணமாக ஏதேனும் கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இம்மாநிலத்தில் உள்ள அரசாங்க வக்கீல்கள், அரசாங்க வழக்குரைஞர்கள், அரசாங்க உதவி வழக்குரைஞர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை காட்டும் விவர அறிக்கை * ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) அரசாங்க வக்கீல்களுக்கும் அரசாங்க வழக்குரைஞர்களுக்கும் அவர்கள் நடத்துகின்ற வழக்குகளுக்கென கட்டணம் அளிக்கப்படுகிறது. வழக்குரைஞர் கட்டணங்களை முறைப்படுத்துகின்ற நிலை ஆணைகள் வழக்குரைஞர் கட்டணவிதிகள் ஆகியவற்றின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வீதங்களில் அக்கட்டணங்கள் அளிக்கப்படுகின்றன.

அரசாங்க உதவி வழக்குரைஞர்களும் அரசாங்க உதவி வக்கீல்களும் மட்டுமே முழு நேர அரசாங்க ஊழியர்களாக உள்ளனர். அவர்களுக்கு மட்டுமே மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், இந்த கவர்ன்மெண்ட் ப்ளீடர், பப்ளிக் ப்ராஸிக்யூட்டர், அஸிஸ்டண்ட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் எல்லாம் பல ஆண்டுக் காலத்திற்கு முன்னால் நியமிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டதாகும். அப்படி நியமிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட காலத்தைவிட இப்போது பார்த்தால் ஒன்றுக்குப் பத்து மடங்கு வழக்குகள் அதிகமாகியுள்ளன. அப்படி இருக்கும்போது அதையும் அதிகப்படுத்துவதற்கான உத்தேசம் உண்டா? இன்றைக்கே நூற்றுக்கணக்கான வழக்குகள் வருஷக் கணக்கிலே தீராமல் இருக்கின்றன. ஆகவே இந்த பப்ளிக் ப்ரொஸிக்யூட்டர், அஸிஸ்டன்ட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர், கவர்ன்மெண்ட் ப்ளீடர் போன்ற பதவிகளை அதிகப்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்குரைஞர் எண்ணிக்கை குறைந்து இருப்பதால் வழக்குகள் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று இந்த அரசு ஒத்துக்கொள்ளவில்லை. அப்போதைக்கப்போது எத்தனை வழக்குகள் வருகின்றன, எத்தனை வழக்குரைஞர்கள் போடவேண்டுமென்று நீதி மன்றங்கள் சிபாரிசு செய்கின்றன. மு.ப. பகல் 10-30
அந்தச் சிபாரிசை அரசு ஏற்றுக் கொள்ளுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா 489-வது எண்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 488-வது கேள்வியின் கீழ் மற்றொரு துணைக்கேள்வி கேட்க விரும்புகிறேன்.

* 429–430-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதிய அளவு துணை வினக்கள் கேட்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறேன். தங்களுக்கு இன்றைக்கு ஏறத்தாழ 20 வினுக்கள் அனுமதிக்கப்பட்டிருக் கின்றன. மற்றவர்களும் வினுக்கள் கேட்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இது முக்கியமான கேள்வி. இந்தக் கேள்வியின்கீழ் இறுதி துணை வினுவைக் கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் அவர் கள் இறுதித் துணை வினுவைக் கேட்க அனுமதிக்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : சார், பாய்ண்ட் ஆப் ஆர்டர், இங்கே உட்கார்ந்திருக்கும் நாங்கள் ,இரண்டு பேர்கள் நீண்ட தாடிவைத் திருந்தும் சபாநாயகரின் கவனத்தை எங்களால் இழுக்க முடிய வில்லை. மதிப்பிற்குரிய கோதண்டராமன் போன்றவர்கள் அடிக்கடி வினுக்கள் கேட்கிறார்கள். மேற்கொண்டு வினக்களைக் கேட்க உங்களைக் கவர நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் அவர்களைத்தான், அந்த நினைவில் வைத்துக் கொள்ள வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ள முடியும். (சிரிப்பு)

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் விஜயகுமும், மணியும் கேட்ட அளவுக்கு நான் கேள்விகள் கேட்கவில்லை. இருந்தும் அதிகம் கேள்விகள் கேட்ட தாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சர்க்கார், பல மாவட்டங்களில் குறிப்பிட்ட காலம் முடிந்ததற்குப் பிறகும்கூட 2, 3 மாதம் ஆகின்றது என்று நினைக்கிறேன். என் அங்கு இந்த வழக்குரை ஞர்கள் நியமிக்கப்படவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்குரைஞர்களுக்கு அந்தக் காலம் முடிந்தவுடன் அதற்கான திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பிவிடுவார். புதிய அரசு பதவி ஏற்ற பிறகு மாவட்ட நீதிபதியையும் கலந்து முடிவு செய்கிறது. குறிப் பாக ஒரு மாவட்டத்திலே காலதாமதமாகக் காரணம் இருக் கலாம். உதாரணத்திற்கு வடார்க்காடு மாவட்டத்தில் ஏற்கனவே ஒரு வழக்குரைஞர்: இன்றைக்கு 2 வழக்குரைஞர்கள். வேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் அது பற்றிச் சொல்லியதாகவே கருதுகிறேன்.



* 489 Q.—THIRU A. CHIDAMBARANATHA NADAR: Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) whether the posts of Public Prosecutors have been elevated to Gazetted ranks; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : இன்றுள்ள சர்க்கார் சிக்கன மாக நடப்பதை உண்மையிலேயே வரவேற்கிறேன். ஆனால் சிக்கன மாக நடக்கும் சர்க்கார் திடீரென்று ஒருநாள் காலையில் 'கெஜட்' பதவியில்லாத அதிகாரிகளை 'கெஜட்டெட்' பதவியாக ஆக்கிக் கொண்டதற்கு இருக்கக்கூடிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினருடைய கேள்வி 'பப்ளிக் ப்ராசிக்கியூட்டர்' கெஜட்டெட் பதவியாக ஆக்கப்பட்டார்களா, இல்லையா என்பது. பப்ளிக் ப்ராசிக்கியூட்ட ரில் கெஜட்டெட் ரேங்க் என்பது கிடையாது. . அஸிஸ்டெண்ட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் போஸ்டு என்பது கெஜட்டெட் பகுதி ஆக்கப்பட்டிருக்கிறது. இதை இந்த அரசு செய்யவில்லை. முன்னாலே இருந்த அரசாங்கம் செய்தது.

திரு. ஏ. சிதம்பரநாத நாடார் : என்னுடைய கேள்வியில் 'அஸிஸ்டெண்ட் ப்பளிக் ப்ராஸிகியூட்டர்' என்று கொடுத்திருந் தேன். அதைத் தமிழில் 'அரசாங்கக் குற்ற விசாரணை வழக் குரைஞர், என்று மாற்றியிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆங்கிலத்தில் என்னிடத்தில் உள்ள கேள்வியில் "Whether the posts of Public Prosecutors have been elevated to Gazetted ranks என்றிருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னபடி 1, 2-ஐப்பற்றி ஏற்கனவே இருந்த அரசாங்கம் சப்-மாஜிஸ்ட்ரேட் ரேங்குகளை உயர்த்த முடிவு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் தன் னுடைய வினுவில் அசிஸ்டெண்ட் பப்ளிக் ப்ராசிக்யூட்டர் என்று கொடுத்திருந்ததாகக் கூறினார்கள். இதோ இருப்பது தாங்கள் எழுதியனுப்பிய வினு; தங்களுடைய கையெழுத்திலிருக்கிறது. இதில் 'பப்ளிக் ப்ராசிகியூட்டர்' என்று தான் இருக்கிறது. 'அசிஸ் டெண்ட்' இல்லை.

THIRU A. CHIDAMBARANATHA NADAR: I am sorry, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய வருத்தத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன்.

THIRU A. CHIDAMBARANATHA NADAR: Sir, now I want to make a complaint. My name is Chidambaranatha Nadar but my name is mentioned in two places in the list of questions for to-day as "Chidambaranathan Nadar".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள், மிக முக்கியமானதென்று கருதுகிற ஒரு காரியத்தைச் சொன்னார்கள். சிதம்பரநாத நாடார் என்று இருப்பதற்குப் பதிலாக சிதம்பர நாதன் நாடார் என்று இருப்பதாகச் சொன்னார்கள். 'ன்' சேர்ந்து விட்டதாகச் சொன்னார்கள். பேரவைச் செயலாளர் அவர்கள், இது மிக முக்கியமான காரியமாக இருப்பதால், உன்னிப்பாகக் கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டத் தொடக்கத்தில் தள்ளி வைக்கப்பட்ட வினாக்கள் இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன. வினா எண். 470.

### *I.A.S. Officers*

* 470. *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any special pay is being given to the officers in the Indian Administrative Service Cadre in the Secretariat;

(*b*) whether the special pay is also given to the Non-Indian Administrative Service Officers holding similar posts; and

(*c*) whether the Government have any proposal to discontinue the payment of this special pay as a measure of economy?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இல்லை.

**திரு. ஏ. எம். ராஜா :** தலைவரவர்களே, இந்தியை ஆட்சி மொழியாக்கி, வடநாட்டு ஐ.ஏ.எஸ். காரர்களால் வடநாட்டு ஏகாதிபத்தியத்தில் தமிழகத்தைச் சிக்க வைக்க மேற்கொள்ளப்படும் இந்த நேரத்தில் மாநில சர்க்கார் சிபாரிசு செய்யும் ஐ.ஏ.எஸ். விகிதத்தை உயர்த்த அனுமதி கோரி மத்திய சர்க்காரிடம் வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவரவர்களே, கேள்வி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்குச் சில சந்தர்ப்பங்களிலே தனிச் சம்பளம் தரப்படுவதைப்பற்றி. நண்பர் இப்பொழுது கேட்டிருக்கிற கேள்விக்கும், மூலக் கேள்விக்கும் தொடர்பில்லை.

**திரு. நா. காசிராமன் :** தலைவரவர்களே, ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்குத் தனிச் சம்பளம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தகுந்த காரணத்தை முன்னிட்டுத்தானே அவ்வாறு கொடுக்கப்படுகிறது. அதைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இந்தக் காரணங்கள் என்று இப்பொழுது கருதப்படும் காரணங்களுக்காக அந்தத் தனிச் சம்பளம் தரப்படுகிறது. அதில் அதைப்பற்றி மறுபரிசீலனை தேவை என்ற கருத்தும் சர்க்காரிடம் இருந்து கொண்டிருக்கிறது.





*471 வினா.—**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரெவின்யூ இலாக்கா அல்லாத இதர இலாக்காக்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டிய இடங்கள் எத்தனை ?

(இ) அவைகளில் இதுவரை நிரப்பப்பட்ட இடங்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) வருவாய்த் துறை அல்லாத பிற துறைகளில் 48 பதவிகளுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், அவை இம் மாநிலத்திற்குரிய ஐ.ஏ.எஸ். தொகுதியில் சேர்க்கப்பட்டவையாகும்.

(இ) அவற்றில் 43 பதவிகளில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். எஞ்சிய ஐந்து பதவிகள் நிர்வாகக் காரணங்களினால் நியமிக்கப்படவில்லை.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவரவர்களே, தொழில் நுட்ப இலாகாக்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிப்பதால் நிர்வாகம் திறமையாகச் செயல்படவில்லை என அரசாங்க நிர்வாகத்தில் அனுபவம் பெற்றவர்கள் கூறுவதால், தொழில் நுட்ப இலாக்காக்களில் இனியும் அல்லது இனிமேலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தொழில் நுட்ப இலாக்காக்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருப்பதால் அவர்கள் திறமையாக வேலை செய்ய முடியவில்லை என்று நிர்வாகத்தில் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இனிவரும் அதிகாரிகளுக்குத் தொழில் நுட்பப் பயிற்சியும், பழக்கமும் ஏற்படச் செய்ய வேண்டும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத் தொழில் நிலையங்களிலே போட்டிருப்பதால் வேலை குந்தகப்பட்டதாகத் தகவல் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் செலக்ஷனில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பது அரசாங்க பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தனிக் கேள்வி போட்டால் எல்லா விவரங்களும் தரப்படும்.

* 472 *Q.*—DR. HABIBULLAH BAIG : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that only an I.A.S. Officer must hold the post of Director of Printing and Stationery; and

(*b*) if so, the reasons for a Non-I.A.S. Officer holding the said post?

THE HON. THIRU C. N. ANNADURAI : (*a*) The post of Director of Stationery and Printing, Madras, is an Indian Administrative Service Cadre post. Non-Indian Administrative

Service Officers can also be appointed to the above post with the concurrence of the Union Public Service Commission and the Government of India.

(b) The present incumbent of the post has been temporarily promoted to officiate in the Indian Administrative Service Cadre and he is being continued in the post with the concurrence of the Union Public Service Commission and the Government of India.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) தமிழக எழுது பொருள் அச்சக இயக்குநர் பதவி ஐ.ஏ.எஸ். தரப் பதவியாகும்; மத்திய அரசுப் பணியாளர்த் தேர்வுக் கழகத்தின் இசைவையும் மத்திய அரசின் இசைவையும் பெற்று இப் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அல்லாத அதிகாரிகளையும் நியமிக்கலாம்.

(இ) இப்போது இப் பதவியை வகித்து வருபவர் ஐ.ஏ.எஸ். தரத்துக்குத் தற்காலிகமாய்ப் பதவி உயர்வு பெற்றுள்ளார். மத்திய அரசுப் பணியாளர்த் தேர்வுக் கழகத்தின் இசைவையும் மத்திய அரசின் இசைவையும் பெற்று அவர் அப் பதவியில் நீடிக்கப்பட்டு வருகிறார்.

DR. HABIBULLAH BAIG : Is there any proposal for transferring the Officer?

THE HON. THIRU C. N. ANNADURAI : The answer is that is being continued.

*Pay and allowances of Judges*

*473 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to enhance the pay and house rent allowances for District Judges, Subordinate Judges, District Munsifs and Magistrates; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டிய கேள்வி இது. என்னிடமும் விடை இருப்பதால் நானே பதிலளித்து விடுகிறேன்.

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவடைகின்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]





## 2. எதிர்க்கட்சித் தலைவரின் விளக்க அறிக்கை.

இந்தியப் பிரதமரின் தமிழகச் சுற்றுப்பயணச் செலவின் பகுதியை காங்கிரஸ் கட்சி ஏற்றல்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன். இரண்டு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது பாரதப் பிரதமர் அவர்கள் 1967 ஜனவரியில் தமிழ் நாட்டிலே தேர்தல் சுற்றுப் பயணத்திற்கு வந்த பொழுது ஆன செலவு 1,10,774 ரூபாய் என்றும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் அந்தத் தொகை கேட்கப்பட்டு அவர்கள் இன்னும் கொடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். இது விஷயமாக ஏற்கனவே, மறைந்த நேருஜி அவர்களும், லால் பகதூர் சாஸ்திரி அவர்களும் தேர்தல் பிரச்சார நேரத்தில் வந்த சமயங்களிலே அவர்கள் தேர்தல் சுற்றுப்பயணத்துக்காக ஏற்பட்ட நியாயமான செலவுகளை அவ்வப்பொழுது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கொடுத்து வந்திருக்கிறது. இப்பொழுதும் கூட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தேர்தலுக்கான நியாயமான செலவுகளைக் கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் இது விஷயமாக பிரதமக் காரியதரிசி அவர்களிடம் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி இந்த மொத்தத் தொகையான 1,10,774 ரூபாயில் தேர்தலுக்கான நியாயமான செலவுத் தொகையை மேடை அலங்காரங்கள், விளக்குகள் இவைகளுக்கான செலவுத் தொகையை-செக்யூரிடி அரேன்ஜ்மெண்டுகள் போக மீதித் தொகையை—எடுத்துச் சொன்னால் அந்தச் செலவுத் தொகையைப் பூரணமாக ஏற்றுக் கொள்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, பிரதமக் காரியதரிசி அவர்களிடமிருந்து இதுவரை எந்தவிதமான பதிலும் வராத காரணத்தால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தேர்தலுக்காக ஆன செலவைக் கட்டவில்லை. ஆக இது விஷயமாக எந்த விதமான தப்பபிப்பிராயமும் யாருக்கும் நிச்சயமாக இருக்கக் கூடாது. ஆகவே, செக்யூரிடி அரேன்ஜ்மெண்ட்ஸ்க்கு ஆன செலவுப் பணம் நீங்கலாக மீதிப் பணத்தைச் சொல்லுவார்களானால்—எவ்வளவு ரூபாய் அவர்கள் சொன்னாலும்—அதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக இது விஷயமாக பிரதமக் காரியதரிசி அவர்கள் நியாயமாகத் தேர்தலுக்காக எவ்வளவு தொகை செலவானது என்பதைத் தம் பதிலின் மூலமாக அனுப்புவார்களேயானால் அதைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிச்சயமாகக் கொடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பிரதம மந்திரியினுடைய தேர்தல் சுற்றுப் பிரயாணச் செலவினத்தில் நியாயமான அளவினை கொடுப்பதாகச் சொன்னார்கள். அதிலே 'நியாயமான' என்பதை விட 'தேர்தலுக்கு மட்டும் தொடர்புடைய' என்று அதைத்

திருத்திக் கொள்வார்களேயானால் அது சரியாக இருக்கும். மேடைச் செலவு. அங்கே போடப்பட்ட விளக்குச் செலவு, ஒலி பெருக்கிச் செலவு, இவைகளை எல்லாம் தேர்தல் சுற்றுப் பயணச் செலவிலே சேர்க்கப்பட வேண்டுமென்றும், பாதுகாப்பு அளிக்கப் பட்ட செலவினத்தை அதிலிருந்து எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். பெரிய கட்சியைச் சேர்ந்தவர்கள் தாராளமாகக் கொடுக்கலாம். நிரம்பப் பணம் இருப்பதாகச் சொல் கிறார்கள். (திரு. கே. விநாயகம் : பணம் எங்கே இருக்கிறது?) பெரிய பண முதலாளிகளெல்லாம் பணம் கொடுப்பதாக அவர்களே அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். (குறுக்கிடு) கனம் அங்கத்தினர் அவர்கள் பணம் இல்லை என்கிறார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினுடைய வரவு-செலவுக் கணக்கைப் பரிசீலிக்க எனக்கு 6 மாதம் கொடுத்தால் எவ்வளவோ இலட்சம் ரூபாயை அதிலே நியாயமான முறையிலே மிச்சப்படுத்திக் காட்டலாம் என்றாலும் அவர்களாக அதைப் பற்றி பிரதமச் செயலாளர் அவர்களுக்கு எழுதி இருப்பதாலே அவர் தருகின்ற தகவலை ஆராய்ந்து, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன யோசனையை நான் விவாதிக்க இருக்கிறேன். எனக்கு எப்பொழுதும் அவர்கள் அந்தப் பணத்தை கொடுப்பார்கள் என்பதிலே நம்பிக்கையுண்டு.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினா-விடை நேரத்தின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர் தன்னுடைய பெயர் சிதம்பரநாத நாடார் தான் என்றும் 'ன்' இருக்கக் கூடாது என்றும் சொல்லி யிருப்பது குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி நான் செய லாளர் அவர்களுக்குக் கட்டளையிட்டேன். அதை மாற்றிக்கொள்ள வேண்டிய வகையில், செயலாளர் அவர்கள் இப்பொழுது என்னிடத்திலே ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். உறுப் பினர் அவர்கள் கொடுத்த வினா முன்னறிவிக்கையின் தலைப்பிலே 'சிதம்பரநாதன்' என்று 'ன்' சேர்த்துத்தான் போடப்பட்டிருக் கிறது. அதே மாதிரி, வருகைப் பதிவேட்டிலும் அப்படித்தான் பெயர் இருக்கிறது. எனவே எதிர்க்கட்சி உறுப்பினர், தன்னுடைய பெயரான 'சிதம்பரநாதன் நாடார்' என்பதை, 'சிதம்பரநாத நாடார்' என்று மாற்றிக் கொள்ள விரும்பினால், செயலாளர் அவர் களுக்கு எழுதி அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

### 3. அறிவிப்புகள்

#### ( ) உறுப்பினர் விடுதலை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* முன்பு கைதாகியிருந்த உறுப் பினர், திரு. மருதாசலம் அவர்கள் மீதுள்ள நடவடிக்கை கைவிடப் பட்டு இருப்பதாகவும், அவர்கள் விடுதலை செய்யப்பட்டு இருப்ப தாகவும், கோவை சப்-மாஜிஸ்திரேட்டிடமிருந்து தந்தி மூலம் செய்தி வந்திருக்கிறது, என்பதை இப்பேரவைக்கு நான் அறிவிக் கிறேன்.



#### ( ii ) அரசினர் நூல்நிலையக் குழுவிற்குத் தேர்தல்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அரசினர் நூல்நிலையக் குழுத் (State Library Committee) தேர்தலுக்காக திரு. எம். எஸ். மணி அவர்களின் பெயர் மட்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிரப்பப்பட வேண்டிய ஒரு வெற்றிடத்திற்கு ஒருவர் பெயர் மட்டுமே முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், திரு. எம். எஸ். மணி அவர்கள், அரசினர் நூல்நிலையக் குழுவிற்கு (State Library Committee) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக, நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அடுத்து, உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா கொண்டு வந்த ஒற்றிவைப்புத் தீர்மானம். அவர் அவையில் இல்லாத காரணத்தால், அவையின் அனுமதியுடன் அத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப் படுகிறது.

*திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்.*

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir, to know more about the regulations of this House. If a Member who has tabled a resolution or an adjournment motion is not present in the House, is it incumbent upon the Speaker or the House to permit any other member to raise it? Automatically it lapses, that is my impression.

*திரு. சோ. அழகர்சாமி :* ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார், நான் கூட ஒற்றிவைப்புத் தீர்மானத்திலே கையெழுத்திட் டிருக்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* உங்களுடைய கையெழுத்தைக் கவனிக்கவில்லை. உறுப்பினர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் படிக்கலாம்.

### 4. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

#### (i) சர்க்கரை விலை உயர்வு

*திரு. சோ. அழகர்சாமி :* சர்க்கரையின் விலை மிக உயர்ந் துள்ளது. அதைத் தொடர்ந்து ஓட்டல்களிலே, காபி, டீ விலையும் மிகவும் அதிகமாக உயர்ந்து விட்டது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்ற காரணத்தால், அதை இந்த மன்றத் திலே விவாதிக்கும்பொருட்டு, இந்த அவையின் மற்ற நடவடிக்கை களை ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* விலை உயர்வைப் பற்றி ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டு வர முடியாது என்று ஏற்கனவே பேரவைத் தலைவர்கள் தீர்ப்பு அளித்திருப்பதற்கு இணங்க, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ii) இராமநாதபுரம் மாவட்டத்தில் திறந்த சந்தையில் உணவு தானியங்கள் கிடைக்காமை

திரு. சா. மெய்யப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, காரைக்குடித் தொகுதி எல்லையிலும், திருவாடானைத் தொகுதி எல்லையிலும், இராமநாதபுரம் மாவட்டத்துக்குள் நடமாடும் நெல் தானியங்களை தஞ்சாவூர்ப் பகுதி நெல் என்று நடவடிக்கை எடுப்பதால் தானியங்கள் திறந்த சந்தைக்கு வராமல் பதுக்கப்பெற்று, விலையேறியிருப்பதைப்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்கக் கோரி என்னுடைய ஒற்றி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

இதற்கு முன்னர் 1½ மாதங்களுக்கு முன்பு இம்மாதிரியாக விலை ஏறிவிட்டது என்று கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கும், மற்றும் உணவு அமைச்சர் அவர்களுக்கும், சட்ட அமைச்சர் அவர்களுக்கும் தந்தி மூலம் எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். இப்பொழுது விற்கின்ற விலை என்னவென்ருல் படி அரிசி ரூ. 2.20 என்று விற்கிறது. அதுவும் அந்த அரிசியைப் பிடித்தால் கொழுக்கட்டை பிடிக்கிறமாதிரி இருக்கிறது. இது ஒரு முக்கியமான பிரச்சினை, அவசரமான பிரச்சினை, கிராமப்புறத்துப் பிரச்சினை, ஆகவே, இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இதை அரசினரின் கவனத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். எனவே, அவர்களுடைய எண்ணம் நிறைவேறிவிட்டது. ஆனல், இது அரிசினரின் சாதாரண அன்ருட நடவடிக்கைகளுக்கு உள்பட்ட ஒரு காரியமாக இருக்கிறது என்ற காரணத்தினல் இதை விவாதிப்பதற்கு இந்தப் பேரவையின் அலுவல்கள் தள்ளிவைக்கப்பட வேண்டியதில்லை என்று கூற வேண்டியவனுக இருக்கிறேன்.

### 5. கவன ஈர்ப்பு

### பொற் கொல்லர்களின் இன்னல்கள்

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance namely, the plight of the goldsmiths who are being suddenly harassed for repayment in lumpsum of loan amounts advanced to them by the Government in instalments and the need to write off the loan amounts due from them.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Mr. Speaker, Sir, the loans sanctioned to displaced goldsmiths are recoverable in 12 half-yearly instalments commencing two years after the date of disbursements of the second instalment of the loan. If the loans are misused or not properly utilised for the purpose for which the loan was sanctioned, the Assistant Directors of Industries and Commerce who are the loan sanctioning authorities foreclose the loans and take steps to recover the entire dues. As per the personal security bond executed by the loanees, the



loan is liable to be recovered by resorting to the provisions of the Madras Revenue Recovery Act, 1864 without prejudice to other modes of recovery.

The Government are fully aware of the poor plight of the displaced goldsmiths. They have already ordered as early as in October 1966 as follows in regard to recovery of loans from displaced goldsmiths :—

(*a*) recovery should continue to be effected from all borrowers who are in a position to repay the loans in instalments on the due dates ;

(*b*) requests for postponement of recovery may be granted in all deserving cases; and

(*c*) where, in any specific bad case, coercive action to effect recovery is called for, it should be reported to Government for orders as to whether such action should be started so as to enable the Government to scrutinise all such cases carefully and to ensure that there is no undue harassment.

The Collectors and the Director of Industries and Commerce were also again instructed that the above orders should be strictly adhered to. These orders will be in force up to 31st March 1968. If any specific case of harassment is brought to the notice of Government, it will be looked into.

For sanction of loans to goldsmiths the Government of India have advanced interest-bearing loans to the State Government. So far they have advanced loans to the tune of Rs. 230.06 lakhs. As these loans are repayable to the Government of India with interest, it will not be possible for the State Government to waive recovery of such a huge amount and write off the loans due from the displaced goldsmiths.

DR. H. V. HANDE: Sir, in view of the fact that this Government are not able to collect the loan instalments from the goldsmiths who are in a pitiable plight, will they write to the Central Government to waive at least the interest on the loan?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதைப்பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் மத்திய அரசு கடனையும் கேட்கிறது, கடனுக்கான வட்டியையும் கேட்கிறது, கடனையும், வட்டியையும் திரட்டி அவர்களுக்குத் தர வேண்டியவர்களாக இருக்கிருேம். இதுபற்றி மத்திய அரசுக்கு எழுதப்பட்டிருக்கிறது. அதனுடைய பதில் வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

DR. H. V. HANDE: Sir, there is an understanding between the Central and State Governments under which if the loans are irrecoverable and if the State Government write to the Central Government for a write-off, the Central Government will accept the proposal. As the plight of the goldsmiths are so bad that

[Dr. H. V. Hande] [1967 நவம்பர் 28

they are not able to reconstruct their lives and are not able to pay back the loans, will this Government persuade the Central Government to write off the loan?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கொடுக்கமுடியாதவர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்ற முறையிலே தான் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான பதில் வந்ததற்குப் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 6. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

THIRU S. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the Report on the action taken by the Government on the recommendations of the Committee on Estimates contained in the Report on Industrial Estates.

### 7. அரசினர் மசோதாக்கள்

### 1967-ம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 19/1967)

* THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker, Sir, I move—

'That the Hindu Marriage (Madras Amendment) Bill *, 1967 (L.A. Bill No. 10 of 1967), as amended by the Joint Select Committee be taken into consideration.'

Sir, as the hon. Members are aware, this Bill was introduced in the Assembly on the 17th July 1967. Subsequently with the concurrence of both the Houses, it was referred to a Joint Select Committee.

The following are the important changes made by the Joint Select Committee :—

(1) The words "*seerthirutha marriages*" have been substituted for the words "similar marriages" occurring in the marginal heading to the proposed new section 7-A, so as to make it conform to the first paragraph of the preamble.

(2) While considering the suggestion of the Government of India, that the Bill should be modified so as to ensure adequate proof of marriage and for this purpose that solemnization of the marriage should be made in the presence of a gathering of relatives, friends or other persons, the Committee decided not to specify the number of persons, that should be present at the solemnization of the marriage or to use the word 'gathering' and that it would be sufficient if provision is made for the solemnization of a *suyamariyathai* marriage in the presence of relatives, friends and other persons so as to ensure wider publicity for the marriage and to prevent the solemnization of the marriage in secluded places.

* Published at pages 75-77 of the *Fort St George Gazette* Extraordinary, dated 24th November 1967



1967 நவம்பர் 28] [Thiru S. Madhavan]

(3) The Committee decided to substitute the word "declaring" for the words "saying to the other" and to delete the word "lawful".

(4) One notable change made by the Committee based on the suggestion of the Government of India, is that in every marriage to which the new section applies, there should be a declaration by the parties, accompanied by exchange of garlands, or rings or by the tying of the thali.

(5) To place the matter beyond doubt that a marriage which is void on any other ground mentioned in the Hindu Marriage Act, 1955, should not be rendered valid by the Bill, the Committee decided to insert the expression "but subject to the other provisions of this Act" in clause (*a*) of sub-section (2) of the new section.

Sir, I commend the motion for the acceptance of the House. 11-00 p.m.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker Sir, I want to say a few words regarding the Bill which is before the House. The provisions embodied in this Bill are generally acceptable. But there are certain difficulties which may be considered by this House as well as by the Hon. Minister.

The first point which I would like to place before this House for consideration is the registration of marriages. A register of marriages, whether they are solemnised under the suyamariyathai or seerthirutha form or in the orthodox form, should be maintained so that it may be available as evidence of proof of marriage at subsequent legal proceedings, if any, and this would obviate many of the legal difficulties.

Under the Hindu Marriage Act, marriage registrars are appointed and necessary rules are framed. It will be advantageous if marriage registrars are appointed for the enforcement of this legislation also. If somebody challenges the validity or form of marriage, it will be helpful if there is some record maintained by the Government or by some public authority. This aspect may be considered even at a later stage. Incidentally I may draw attention to the Nayar Act which is in force in the Kanyakumari District, in which there is provision for parties who want to contract a marriage to give intimation to the village officer and fill up and give two forms to him which are entered in a register maintained by him. Because village officers are available in all parts of the country, they may be given the power of registering marriages. There should be an easy and not a cumbersome procedure. It is better that marriages are registered in this manner.

Another point which I want to emphasise is this. This Bill will have to be reserved for assent of the President of India under article 254(2) of the Constitution. There is the Hindu Marriage Act passed by Parliament. This Bill amends that Act by the

addition of a new section 7-A. If there is anything in this Bill repugnant to that Act, it will become void to the extent of repugnancy. But to the best of my knowledge there is no repugnancy. But it is for the law courts to decide.

This Bill will have far-reaching effects because the marriages are made valid even from earlier, that is, from the date of solemnisation. Vested rights would not be divested—this is what the Law Minister has said in the note placed before the Joint Select Committee. If any marriage is declared void by a competent civil court, what will be the effect of it? This is a matter which will have to be considered. Any legislation validating prior marriages may not have the effect of over-riding decisions, although it is said "Notwithstanding anything contained in section 7 or in any other law or in any judgment, decree or order of any court all marriages shall be deemed to have been good and valid in law".

This is a useful piece of legislation. But great care should be taken to see that the powers conferred by it are not abused. It is always advisable to follow a uniform system so that there may not be any difficulty in the enforcement of the provisions of this Bill.

THE HON. THIRU S. MADHAVAN: With regard to the question raised by the hon. Deputy Leader of the Opposition, I invite attention to sub-clause (3) of clause 2 which says that nothing contained in this section shall be deemed to render valid any marriage referred to in clause (*b*) of sub-section (2), if before the commencement of the Hindu Marriage (Madras Amendment) Act, 1967, such marriage has been dissolved under any custom or law.

THIRU R. PONNAPPA NADAR: If any issues are be gotten from such marriage, what will be the legal position? Will the vested rights be divested? That should also be made specific. Normally vested rights should not be divested by any legislation. Some protection will have to be given to the children born from such marriages, because the children did not commit any mistake.

THE HON. THIRU S. MADHAVAN: I am sorry to interrupt the Deputy Leader of the Opposition. I have made provision for that also. Sub-clause (4) of clause 2 says that "any child of the parties to a marriage referred to in clause (*b*) of sub-section (2) born of such marriage shall be deemed to be their legitimate child".

THIRU R. PONNAPPA NADAR: That is one of the points which will have to be considered. This is a welcome legislation.

Another point which I wanted to bring to the notice of the Law Minister is that marriage is regarded as a samskara or sacrament by the Hindus.



So far as this legislation is concerned, marriage is more or less like a contract and the Hindu law has been whittled down by this legislation. This is a sign of progress and we on this side always welcome progress. There has been a lot of controversy regarding the validation of these marriages and the Madras High Court has held that suyamariyathai marriage is not valid. Just to obviate the difficulty, the present legislation has been brought forward and I congratulate the Law Minister on it.

It may not be possible to maintain a register of marriages under this Act. But provision for it may be made in the rules, so that litigation may not crop up. I think this aspect may be considered by the Hon. Law Minister. I welcome the Bill. With these words I conclude my remarks.

DR. H. V. HANDE: Sir, while welcoming the Bill I wish to offer a few remarks.

As I said already in my speech at the stage of reference of this Bill to a Joint Select Committee, there are a number of Muslims and Christians who are willing to have suyamariyathai marriage, especially in view of the fact that our Chief Minister has been responsible for instilling in the minds of people the famous expression *Paguththarivu* or self-respect. A number of people who are the followers of our Chief Minister have come and told me: 'I am a Muslim and I would like to marry a Christian; I am a Christian and I would like to marry a Hindu'. What is the provision made for these people who want to marry according to the suyamariyathai method?

THIRU R. PONNAPPA NADAR: This Bill applies only to marriage contracted between Hindus and Hindus. As for Muslims and others, there is the Special Marriage Act.

DR. H. V. HANDE: The hon. Member is only emphasising my point. No provision has been made for such people. My solution is distinct and clear. The only solution is to legalise all marriages on payment of a nominal fee of two, three or five rupees which may not at all be taxing to the people. In Western countries there is a strict method of legalisation. There is registration for every marriage and so there is no confusion at all. The confusion could have been avoided if the entire Bill had been put aside and another Bill legalising marriages of all communities had been brought forward. I wish the Minister for Law will take it into consideration. There is no hurry and it can be brought after some time. This is my only suggestion in this context.

THE HON. THIRU C. N. ANNADURAI: Mr. Speaker, Sir, the motive behind this Bill is that a sizeable section of the Hindu community do feel that in their marriage and other functions, conventions not necessary or conventions which are meaningless have been imported and that sizeable section have thought about a new form of marriage. This is to legalize that form of marriage.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது அவைமுன் வைத்திருக்கும்படியான சீர்திருத்த அல்லது சுயமரியாதைத் திருமண மசோதாவை நான் வரவேற்கிறேன். ஏற்கனவே இந்த மசோதா இங்கே அறிமுகமான சமயத்திலேயே நாம் சில விஷயங்களைச் சொன்னோம். பொறுக்குக் கமிட்டிக்குச் சென்று அது மீண்டும் சில முறைகளிலே திருத்தப்பட்டு இங்கே இப்பொழுது வந்திருக்கிறது.

நம்முடைய சமுதாயத்திலே இந்தக் கல்யாண விஷயங்களிலே பொருளாதாரம் குறைந்து வருகிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏற்கனவே பேசின சமயத்திலேயேயும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். எத்தனையோ சொத்து சம்பாதித்துச் சேர்த்தாலும், கடைசியில் வீடு கட்டுவதிலேயோ அல்லது கல்யாணம் செய்வதிலேயோ அது இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது. இப்பொழுது இருக்கும்படியான சீர்திருத்தத் திருமணம் என்றால் என்ன? சுயமரியாதைத் திருமணம் என்றால் என்ன? ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பினால் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியது முறை ஆகிறது. முன்பெல்லாம் இரு சாராருடைய பெற்றோர்களும் சேர்ந்து, அவர்கள் தங்களுடைய மக்களுக்குத் திருமணம் செய்து வைக்கும்படியான ஒரு முறை இருந்தது. இந்த மசோதாவில் சீர்திருத்தத் திருமணங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தை நான் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இப்பொழுது காலம் போகிற போக்கில், பெற்றோர்களுக்குப் பொறுப்பு இல்லாமலேயே, மணமகன், மணமகள் ஆகிய இருவருக்குமுள்ள பொறுப்பும் கடமையும் அதிகமாகிவரும் இந்தச் சமயத்தில், இதுமாதிரித் திருமணங்கள் மிகவும் அவசியமாகும். திருமணங்களில் ஆடம்பரச் செலவுகள் முதலியவைகளையெல்லாம் குறைப்பதற்கு முதலில் சட்டம் போட்டால்கூட அதை நான் வரவேற்பேன். இந்த மசோதாவிலே,

'This section shall apply to any marriage between any two Hindus, whether called *suyamariyathai* marriage or seerthiruththa marriage or by any other name, solemnized in the presence of relatives, friends or other persons . . .'

என்று இருக்கிறது. "நண்பர்கள், உறவினர்கள் அல்லது ஒரு சிலர்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 'ஒரு சிலர்' என்னும் போது, எனக்குத் தெரிந்த வரையில், எத்தனையோ புகார்கள் வந்தன. புரோகிதம் இல்லாமல் நடப்பதுதான் சுயமரியாதைத் திருமணம், அல்லது சீர்திருத்தத் திருமணம் என்பதல்ல. அவர்கள் இஷ்டப்பட்டால், புரோகிதத்தைக்கூட வைத்துக் கொள்ளலாம். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதம் போன்ற பிற மதங்களைத் தழுவுகிறவர்களும் இருக்கிறார்கள். நாடார்கள், முதலியார்கள் போன்ற வகுப்புகளிலிருந்தும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினாலும்கூட, அவர்களுடைய சமூகப் பெயர்களை வைத்து, அவர்களுடைய முறைப்படியேகூட



திருமணம் செய்துகொள்ளுகிறார்கள். மதம் மாறினவர்களாக இருந்தாலும்கூட, வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலுங்கூட, அந்தப் பெயர்களை வைத்து, அந்தச் சட்டங்களின்படியே கூட நடத்திக் கொள்ளுகிறார்கள். எனக்கு ஏற்படுகிற ஒரு அச்சம் என்னவென்றால், சீர்திருத்தக் கல்யாணம், சுயமரியாதைக் கல்யாணம்கூட, ஏதாவது புரோகிதம் வைத்துச் செய்யும்படியான ஏற்பாடுகள் நடக்குமேயானால், அது சீர்திருத்தக் கல்யாணம் அல்ல என்று தீர்மானம் செய்யக் கூடாது. அதேமாதிரி, புரோகிதம் இல்லாமலும் கூடச் செய்துகொள்ளலாம். ஆனால், அதனால் 'அன்-எம்ப்ளாய்மென்ட் ப்ராப்ளம்' பெருகக்கூடும், புரோகிதத்தில் ஈடுபட்டிருக்கும் எத்தனையோ பேர்களுடைய வாயில் மண்ணைப் போடவேண்டாம் என்பது என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** புரோகிதர்கள் விஷயத்தில் கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அக்கறை அதிகமாக இருக்குமானால், புரோகிதர்களை வைத்துச் செய்கிற திருமணத்தில், ஒரு புரோகிதருக்குப் பதிலாக, நான்கைந்து பேர்களை வைத்துக் கொள்ளலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து, புரோகிதத்தை வைத்துக் கொண்டு திருமணம் செய்துகொண்டாலும் அதுவும் சீர்திருத்தக் கல்யாணம் தான் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதற்காக என்னுடைய நன்றி.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** புரோகிதம் வைத்துத் திருமணம் செய்துகொள்ளுகிறவர்களை, 'புரோகிதத்தை நீக்கிவிட்டுத் திருமணம் செய்துகொள்ளுங்கள்' என்று கட்டாயப்படுத்துகிற சட்டம் அல்ல இது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அதை வரவேற்கிறேன். அந்த விளக்கம் நல்ல முறையில், நியாயமான முறையில் அமைந்திருக்கிறது. என் கல்யாணத்தின்போது, இரண்டே நிமிடங்கள்தான் உட்கார்ந்திருப்பேன் என்று சொல்லி, அதன்படி இரண்டே நிமிடங்களில் என் கல்யாணம் நடந்தது. ஆகவே, இதெல்லாம் கூடாது என்று 32 வருடங்களுக்கு முன்னாலேயே சொன்னவன் நான்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இது வைதீகக் கல்யாணமோ அல்லது சுயமரியாதைக் கல்யாணமோ அல்ல; இது அவசரக் கல்யாணம் என்று கருதுகிறேன். (சிரிப்பு).

திரு. பி. ஜி. கருத்திருமன் : அவசரக் கல்யாணம் அல்ல. பழைய முறைக்குப் புதிய வடிவம் கொடுக்கும் வகையில் சட்டத்தைக் கொண்டுவந்தாலும் வராவிட்டாலும், வழக்கத்திலே வந்துவிட்டதைச் சட்ட பூர்வமாக ஆக்குவதற்காக இது செய்யப்படுகிறது. இதைக் கொண்டுவருவது கூட, உயர்நீதி மன்றத்திலே,

இதுமாதிரித் திருமணம் செல்லாது என்ற முறையில் சொல்லியதைக் கருத்தில் கொண்டு தான் செய்யப்படுகிறது. ஆகவே, இந்து மதத்தவருக்காக இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறது. முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் என்றால், ரிஜிஸ்தர் செய்து கொள்ளலாம். கிறிஸ்தவர்களாயிருந்தால் சர்ச்சுக்குப் போய்ச் செய்து கொள்ளும்படியான நல்ல முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

இந்து சமுதாயத்தைப் பொறுத்த வரையில் தொன்றுதொட்டு சில பழக்க வழக்கங்கள் இருந்து வந்திருக்கின்றன. இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். என்னுடைய கட்சியின் உப தலைவர் அவர்கள் சொன்னபடி கல்யாணம் செய்துகொள்ளுபவர்கள் ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டும். யார் கல்யாணம் செய்து கொண்டாலும், இன்னார்தான் மணமகன், இன்னார்தான் மணமகள் என்று பதிவு செய்து கொள்ளவேண்டும் என்ற முறையை இந்தச் சட்டத்தின்கீழ் போடப்படும் விதிகளில் சேர்த்துவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும், அவ்வாறு செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்யாணச் செலவுக்கும் ஒரு உச்ச வரம்பு விதிப்பதுகூட நல்லது என்று நான் கருதுகிறேன். எதெதற்கோ உச்ச வரம்பு செய்துவிட்டோம். நிலவுடைமைக்கு உச்ச வரம்பு செய்து விட்டோம். இன்னும் பலவற்றிற்கு உச்ச வரம்பு செய்து விட்டோம். இப்படி, கல்யாணச் செலவுக்கும் ஒரு உச்ச வரம்பு வைக்கவேண்டும் என்பதிலே நான் மிகவும் தீவிரமாக இருக்கிறேன். ஏற்கனவே நான் சொன்னேன். ஆயிரம் ரூபாய்க்குமேல் யாரும் கல்யாணத்திற்காகச் செலவு செய்யக்கூடாது. பணக்காரர்கள் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்துகொள்ளட்டும். ஆனால், நடுத்தரக் குடும்பத்தார்கள், கௌரவத்திற்காக எத்தனையோ ஆயிரம் ரூபாய்களைக் கடன் வாங்கியும், வாழ்க்கையிலே சேமித்து வைத்திருந்த தொகையையும் கல்யாணத்திற்கே செலவிடும்படியான நிலை இருப்பதால், ஆயிரம் ரூபாய்க்கு மேல் கல்யாணத்திற்காகச் செலவிடக்கூடாது என்று ஒரு உச்ச வரம்பைச் சட்டபூர்வமாக நிர்ணயிக்கும் ஒரு காரியத்தை நாம் செய்து விடுவோமானால், அது நம்முடைய இந்து சமுதாயத்திற்குச் செய்த ஒரு பெருத்த நன்மையாகும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புரோகித முறையைப்பற்றிச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு விளக்கம் அளிக்கும் முறையில் சொன்னேன். யாரேனும் புரோகித முறையில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று விரும்பினால், அவர்களைக் கட்டாயப் படுத்துவது அல்ல; ஆனால், புரோகித முறை தேவையில்லை என்று சீர்திருத்த லட்சியங்களைக் கொண்டவர்கள், செய்துகொள்ளக்கூடிய திருமண முறை, சட்டப்படி செல்லத்தக்கது என்பதை மெய்ப்பிப்பதற்காக இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.



புரோகித முறை என்று சொல்வதானால், முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கூட புரோகித முறை இருக்கிறது, இந்துக்களுக்கு இருப்பதைப் போல. ஆனால், முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் புரோகிதர்கள், அவர்களிலிருந்தே சிலர் இதிலே பயிற்சி பெற்று புரோகித வேலைக்கு வருகிறார்கள். நம்முடைய இந்து சமுதாயத்தில், கனம் கருத்திமன் போன்றவர்களுடைய முன்னோர்கள் ஏதோ ஒரு முறையை ஆதரித்தார்கள் என்று தெரியவில்லை. புரோகிதத்திற்கென்று நமக்குள்ளேயே ஒரு தனி வகுப்பு பிறக்கவில்லை. அதனால், இந்தப் புரோகித முறைக்கும் அந்தப் புரோகித முறைக்கும் அடிப்படையிலே ஒரு வித்தியாசம் அமைந்திருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் அவர்கள் சொல்வதும் சரியான ஒரு விளக்கம்தான். சில சீர்திருத்தத் திருமணங்கள் புரோகித முறையிலும் நடக்கின்றன. புரோகித முறை என்றால், பழைய சம்பிரதாயப் புரோகித முறையைச் சொல்லவில்லை. தமிழ் மரபுப்படி திருமணம் செய்து கொள்ளுவது கூட அண்மையில் நடைபெற்றிருக்கின்றன. திருக்குறள், கம்ப இராமாயணம் போன்ற நூல்களில் காணப்படும் தமிழ் மரபு முறையில் திருமணங்கள் நடத்துவதுண்டு. திருக்குறள், கம்ப இராமாயணத்தை வைத்துத் திருமணம் நடைபெற்றிருக்கின்றது. கம்ப இராமாயணத்தில் கூட, சீர்திருத்தத் திருமணம் ரொம்ப ஜோராக இருக்கிறது. "கண்ணோடு கண்ணினை நோக்கினான்", "அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" என்றெல்லாம் வருகிறது. (சிரிப்பு.)

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கம்ப ராமாயணத்தில் மிகுந்த பற்று வைத்திருப்பதில் தவறில்லை. ஆனால், திருமண நேரத்தில், கஷ்டப்பட்ட ஜோடியைப்பற்றிச் சொல்வது . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அவர்கள் கஷ்டப்பட்ட ஜோடி என்றால், அப்படிப் பார்த்தால் எல்லோருக்கும்தான் கஷ்டம் இருக்கிறது. இராமாயணத்தில் வருகிற ஜோடி அற்புதமாக இருந்த ஜோடி, வாழ்க்கை என்றாலே கஷ்டம்தான். கஷ்டத்தை அனுபவித்து அதிலே வெற்றி காண்பதுதான் இன்பமே தவிர, வெறும் சோம்பேறியாக இருப்பதில் என்ன இன்பம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இராமாயணத்தை நிரம்ப அறிந்திருக்கிறார்கள் என்று தவறாக எண்ணிக்கொண்டிருந்தேன். இராமாயணத்திலே சீதையைப் போன்று கஷ்டப்பட்ட ஒரு பெண் ஜென்மம் வேறு எதுவுமே இல்லை என்று தெரிகிறது. அவர்கள் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய நேரத்தில், வனவாசத்திற்கு அனுப்பப்பட்டார்கள் என்பதாகவும், வனவாசத்திலே கூட, இராவணனால் எடுத்துச் செல்லப்பட்டு சிறைவாசத்திலே வைக்கப்பட்டார்கள் என்பதாகவும், திரும்பி வந்ததற்குப் பிறகு

பாதாளப் பிரவேசம் செய்ததாகவும இராமாயணம் சொல்கிறது. ஆகவே, கஷ்டப்பட்ட ஒரு பெண்ணைப்பற்றிப் பேசி, இந்தக் கல்யாணத்திலே . . . (சிரிப்பு)

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : மிகவும் நன்றி. கனம் முதலமைச்சர் அவர்கள் இராமாயணத்தைப்பற்றி அவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருப்பதற்காக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு அவர்கள் அனுதாபப் படுகிறார்கள். (சிரிப்பு) இந்து சமுதாயத்திற்கே எடுத்துக் காட்டாக இருப்பவர்கள் சீதா பிராட்டியார் அவர்கள்தான். அதைத்தான் நான் சொல்லுகிறேன். எந்தக் கஷ்ட காலத்திலேயும் இன்பத்தைக் காண்பது தான் சிறப்பே தவிர, கஷ்ட காலத்தில் விட்டுவிட்டுப் போவதல்ல.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : இந்து சமுதாயத்தினுடைய பெண் குலத்திற்கே சீதைதான் எடுத்துக்காட்டு என்று அவர்கள் சொல்வார்களானால், தாய்க் குலத்தின்மீது அவர்களுக்கிருக்கும் அக்கறையற்ற தன்மையைத் தான் அது எடுத்துக் காட்டும். சீதை கஷ்டத்தைத் தாங்கிக் கொண்டார்கள்; பொறுத்துக் கொண்டார்கள்; அதற்காக அவர்களுடைய குணத்தைப் பாராட்ட வேண்டும். ஆனால், நம்முடைய இந்து சமுதாயத்திலுள்ள பெண்களுக்கெல்லாம் அதைப்போன்ற கஷ்டங்கள் வந்து கொண்டேயிருக்கும், அவற்றை அவர்கள் தாங்கிக்கொண்டேயிருப்பார்கள் என்று ஆடவர்கள் எண்ணிக்கொண்டிருப்பது சரியல்ல. யாரோ ஒருவர் சொன்ன கதை எனக்கு நினைவிற்கு வருகிறது. இராமாயணம் ஆடவரால் எழுதப்படாமலிருந்து, ஒரு பெண்ணால் எழுதப்பட்டிருந்தால், அது எப்படி எப்படி இருந்திருக்குமோ என்று ஒருவர் சொன்னார்கள். அதைத்தான் நினைவுபடுத்துகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நான் விவாதத்திற்கு இறங்கத் தயாராக இல்லை. நானும், முதலமைச்சர் அவர்களும் விவாதத்திற்கு இறங்கினால் அது முடிய எத்தனை நாட்கள் ஆகுமோ? ஆகவே, அதை இத்துடன் விட்டுவிடுகிறேன்.

ஒரு சமுதாய அமைப்பிலே, அது கிறிஸ்தவ மதமானாலும் சரி, முஸ்லிம் மதமானாலும் சரி—வாழ்க்கையில் கஷ்டம் இருக்கத்தான் செய்யும். நபிகள் நாயகம் அவர்கள் முதலில் எவ்வளவோ கஷ்டப்பட்டார். மேரி அம்மையார் அவர்களும் எத்தனையோ இன்னல்கள் அனுபவித்தார். கஷ்டத்திலே இன்பம் காண்பதற்குச் சகிப்புத் தன்மை வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கஷ்டமே வேண்டாமென்று அனுதாபப்படுகிறார். எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தாலும், கஷ்டத்திலே இன்பம் கண்டு, லட்சியத்திற்காக வாழ வேண்டுமென்பதுதான் வாழ்க்கையின் சிறப்பு அம்சமாகும். இந்த மசோதாவை, சீர்திருத்த முறையிலே கொண்டு வருவதை நான் மனப்பூர்வமாக வரவேற்று, ஆதரித்து சர்க்காரைப் பாராட்டுகிறேன்.





* **மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எல்லாத்தரப்பினரும் ஆதரித்து வரவேற்றமைக்கு முதலில் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் புரோகிதர்களைப் பற்றியும், அவர்களுக்கு வேலையில்லாமல் போவதைப்பற்றியும் நினைவுபடுத்தினார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தக்க பதில் சொன்னார்கள். அதற்கு சட்ட விளக்கத்தைப் பொறுத்தவரையில் புரோகித திருமணம் செல்லுமா, அல்லவா என்பதல்ல. அப்படி புரோகிதத் திருமணம் நடப்பதைத் தடுப்பது அல்ல இந்தச் சட்டத்தின் நோக்கம். ஏற்கெனவே சுயமரியாதைத் திருமணங்கள் நடந்திருக்கின்றன—நடந்துகொண்டு வருகின்றன. அப்படிப்பட்ட திருமணங்களையெல்லாம் சட்டமூலம் செல்லுபடியாக்கவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக புரோகிதத் தொழில் பாதிக்கப்படும் என்று சொல்லும் கருத்து சரியல்ல.

அடுத்தபடியாக, திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று கருத்துக்கள் கூறப்பட்டன. ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்திலே பதிவு செய்வதற்காக மாநில அரசு விதிகள் மூலமாக வழி வகுக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. நாங்கள் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தபோது, இந்தத் திருமணங்களையெல்லாம் பதிவுசெய்ய வேண்டுமென்று வற்புறுத்தினோம். அதற்குப் பின்னால் அரசாங்கத்தின் சார்பிலே அதற்கான விதிகள் போடப்பட்டிருக்கின்றன. நாம் இப்போது போடுகின்ற சட்டம், சுயமரியாதைத் திருமணங்களை ஏற்கெனவே போடப்பட்ட விதிகளின்கீழ் பதிவு செய்து கொள்ளலாம் என்பதற்கு வழி வகுக்கும். இவ்விதிகளின்கீழ் நாங்கள் பதிவுசெய்துகொள்கிறோம் என்று அவர்கள் ஆசைப் பட்டால் அதைத் தடுக்கலாகாது. இப்போது அதற்கான வாய்ப்பு இருக்கிறது. திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்ற கருத்து நல்ல கருத்துத்தான். ஆனால் சுயமரியாதைத் திருமணங்களுக்கு மட்டும் இந்த விதிகள் போட வேண்டும்; மற்றவைகளுக்கு வேண்டாம் என்று சொல்லக்கூடாது. அப்படி வேறுபாடு இருக்கக்கூடாது. எல்லாத் திருமணங்களையும் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற கருத்து வரும்போது யாரும் இதை ஆட்சேபிக்க முடியாது. ஏன் இப்போது அதைக் கொண்டுவரக்கூடாது என்று கேட்கலாம். ஏனென்றால், இப்போது எல்லா இடங்களிலும் பதிவு செய்யக்கூடிய வாய்ப்பு இல்லை. துணைப் பதிவாளர்களுக்கு—சப் ரிஜிஸ்ட்ரார்களுக்கு மட்டும் தான் இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம். மற்றும் கிராம அதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்கலாமா என்ற கேள்வி எழுந்தது. கிராம அதிகாரிகளுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் அது எந்த அளவிற்குப் பயன்படும் என்பது சந்தேகத்திற்குரிய செய்தியாக இருக்கிறது. கட்டாயம் என்று வரும்போது இதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று இருக்கிறோம். திருமணத்திற்குச் சிலர் சாட்சியமாக இருக்க வேண்டும். அப்படி பதிவு செய்தாலும், அது சுயமரியாதைத் திருமணமாக

[திரு. செ. மாதவன்] [1967 நவம்பர் 28

இருந்தாலும், அல்லது சட்டப்படி பதிவு செய்யப்பட்ட திருமண மானாலும், புரோகித முறையில் நடந்த திருமணமானாலும் கூட நீதிமன்றத்திற்கு வரும்போது சாட்சியத்தை வைத்து இதை நிரூபிக்க வேண்டும். திருமணம் என்பது எல்லா திருமணங் களுக்கும் பொருந்தும்.

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அரசியல் பிரிவில் கடைசி பாராவைப் பார்த்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தில் ஏதாவது முரண்பாடு இருந்தால் இந்தச் சட்டம் செல் லுமா என்று கேட்டார்கள். இந்தச் சட்டம் செல்லுமா என்பதை முதலில் நாம் நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் அனுமதிக்காக அனுப்பிப் பின்னால் அனுமதி பெறுகிறோம். அரசியல் விதிமுறை களுக்கேற்ப நாம் பின்பற்றி வரக்கூடிய சம்பிரதாயம் என்ன வென்றால், இந்தச் சட்டம் உருவான உடனே மத்திய அரசுடன் கலந்து பேசுகிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையின்மீது, நான் மத்திய அமைச்சர்களுடன் இதுபற்றி வாதம் செய்தேன். குடியரசுத் தலைவருடைய சம்மதம் இதற்குக் கிடைத்துவிட்டால், இந்தச் சட்டம்தான் செல்லும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

ஏற்கெனவே நீதிமன்றங்களால் செல்லாதவை என்று தீர்ப்புக் கூறப்பட்ட திருமணங்களைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கும் நாங்கள் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லுபடியாகாது என்று தீர்ப்பு வழங்கி யுள்ள திருமணத்தில் குழந்தைகள் பிறந்திருந்தால், அந்தக் குழந்தைகளுடைய உரிமைகள் செல்லுபடியாகக் கூடிய வழி வகைகள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன.

டாக்டர் ஹான்டே அவர்கள், "எல்லாச் சமுதாயத்திற்கும் சேர்த்து ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும்" என்று சொன்னார் கள். அதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தக்க பதில் சொன்னார்கள். அரசியலமைப்புச் சட்டத்திலே ஒவ்வொரு மதத்திற்கும் இன்னின்ன உரிமைகள், இன்னின்ன உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று உரிமைகள் கூறப்பட்டிருக் கின்றன. அப்படி எல்லாச் சமுதாயத்திற்கும் ஒரே சட்டம் கொண்டுவர இயலுமா என்ற கேள்வி எழுகிறது. ஒவ்வொரு மதத்திற்கும் சட்டம் கொண்டு வந்து, திருத்தம் செய்யலாமே யொழிய, எல்லாவற்றிற்கும் சேர்த்து ஒன்றாகச் சட்டம் செய்து விட முடியாது. ஸ்பெஷல் மேரேஜ் ஆக்ட் என்று இருக்கிறது. ஒரு மதத்தில் உள்ளவரும், வேறோர் மதத்தில் உள்ளவரும் சேர்ந்து திருமணம் செய்துகொள்ளும்போது அதற்குத் தனியாகச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின்கீழ் அவர்கள் திருமணம் செய்து கொள்ள இன்றைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சட்டம் இந்து மதத்தினருக்காகக் கொண்டு வரப்படுகிறது. இந்து என்று ஒப்புக்கொள்வோர் விரும்பும் வகையில் சில சீர்திருத்தம் செய்வதற் காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. மதம் மாறி திருமணம் செய்து கொள்பவர்களுக்கு வேறு சட்டம் இருக்கிறது.



1967 நவம்பர் 28] [திரு. செ. மாதவன்]

இந்த மசோதாவை எல்லோரும் ஒருமித்த கருத்தோடு வரவேற்று ஆதரவு தெரிவித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் உள்ள கேள்வி :—

"கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்த 1967-ம் ஆண்டு இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா 19/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு பிரிவுவாரியாக மசோதா ஆய்விற்கெடுத்துக்கொள்ளப் பட்டது.

## பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவை முன்னுள்ள கேள்வி : "2-வது பிரிவு மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.

2-வது பிரிவுக்கு திருத்தம், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள்.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker, Sir, I move the following amendment :—

'In clause (*a*) of sub-section (1) of the proposed new section 7-A, for the word "and" occurring at the end, substitute the word "or".'

THIRU B. MAHADEVAN : Sir, I move the following amendment :—

'In sub-clause 1 (*c*) of the proposed new section 7-A of the Hindu Marriage Act, 1955, *for* the words "the tying" *substitute* the word "wearing" or "adorning".'

THIRU R. PONNAPPA NADAR : Sir, I second the amendment.

**திரு. ப. மகாதேவன் :** தலைவர் அவர்களே, இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதாவை வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கிளாஸ் 1(சி)/செக்ஷன் 7-ஏ-வில் ஆங்கிலத்தில், "by the tying of the thali" என்றிருக்கிறது. அந்த வார்த்தை 'டையிங்' என்பதை எடுத்துவிட்டு, "wearing" or "adorning" என்று இருக்க வேண்டும். தமிழில் 'தாலி கட்டுதல்' என்று இருக்கிறது. பெரியார் ராமசாமி அவர்கள் செய்து வந்த சுயமரியாதைத் திருமணங்களை, நல்ல சீர்திருத்த நோக்கத்தோடு செல்லுபடியாக்க வேண்டுமென் பதற்காகச் செய்யும் நல்ல காரியத்தில் ஈடுபட்டிருக்கிறோம். அக்கினி தேவன், சந்திரன் முன்னிலையில் திருமணம் நடத்தி வைப்பது மட்டுமல்ல. எல்லாத் திருமணங்களிலும் தாலி கட்டப் படுகிறது. 'தாலி கட்டுதல்' என்று சொல்லும்போது, ஏதோ காளை மாட்டை வாங்கும்போது கயிறுகட்டுவதுபோல் என்ற நோக்கம் இருக்கிறது. இது பெண்களுடைய மரியாதைக்குப் பங்கம் ஏற்படு

[திரு. ப. மகாதேவன்] [1967 நவம்பர் 28

கிறது. அவர்களுக்கு அவமரியாதை ஏற்படுகிறது. ஆகவே கட்டுதல் என்ற வார்த்தையை எடுத்து விடவேண்டும். அதறகாகத் தான்
for the words "the tying", substitute the word "wearing"
மு.ப. 11-30 or "adorning" என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஆங்கிலத்தில் இருந்து தமிழில் அழகான முறையில் மொழி பெயர்க்கிறார்கள். முதலில் என்னவோ போல் இருந்தால் பிறகு பார்க்கிறபோது மிகச் சிறப்பான வார்த்தைகளாக அமை கின்றன. உதாரணமாக பனிமனை என்பதை முதலில் பார்த்த போது 'இது என்ன பரங்கிமலைக்குப் பக்கத்தில் இருக்கிறதா ?' என்று கேட்கத் தோன்றிற்று. ஆனால் 'வொர்க்ஷாப்' என்பதற்கு 'பனிமனை' என்கிற வார்த்தை எவ்வளவு சிறப்பாக அமைந்திருக் கிறது என்பதை இப்போது நாம் உணர்ந்துகொள்ள முடியும். அது போல ஆங்கிலத்தில் (put) என்பதற்கு மோதிரம் போடுதல் என்பது சிறப்பாக இல்லை. மோதிரம் அணிவித்தல் "wearing" or "adorning" என்பதாக இருக்கலாம். இப்படி சுயமரி யாதைத் திருமணச் சட்டத்தை நாம் நிறைவேற்றுகிறபோது தாலி கட்டுதல், மோதிரம் போடுதல் என்கிற வார்த்தைகள் எல்லாம் அமையுமானால் யாருடைய திருவடிக்கு இந்தச் சட்டத்தைச் சூட்ட விரும்புகிறோமோ அவரே இதை காட்டுமிராண்டி என்றுதான் சொல்வார்கள். தாலி என்று சொல்கிறபோது எல்லாவகையான சுயமரியாதைத் திருமணங்களிலும் ஒரேவகையான தாலி உபயோ கிப்பது இல்லை. நமது முதல் அமைச்சர் அவர்களுக்கும், மற்றவர் களுக்கும் தெரியும். நான் தலைமை தாங்கி நடத்தி வைத்த ஒரு சீர்திருத்தத் திருமணத்திலே முதல் அமைச்சர் அவர்களுடைய திருவுருவம் பொறிக்கப்பட்ட தாலியைப் பார்த்தேன். இதுபோல தாலியும் ஒருவகையாகவே இல்லாது மாறுபடுகிறது. ஆகவே கட்டுதல் என்ற வார்த்தை தன்மான உணர்ச்சிக்கு ஏற்றதல்ல. கட்டோடு பிடிக்காத வார்த்தை. இப்படி எதிர்க்கட்சிக்காரன் சொல்கிறானே என்று தட்டிக்கழிக்காது அதை நீக்கவேண்டும். நாம் செல்லுடியாக்கத்தக்கதாகச் செய்வது சுயமரியாதைத் திரு மணம். திரு என்ற சொல்லே உயர்வு நவிற்சியைக் குறிப்பது. மணத்திலே எத்தனையோ வகை. மல்லிகை மலரின் மணம் ஒருநாள் நிற்காது. பன்னீரைத் திறந்து வைத்தால் ஒரு நாளில் தண்ணீராக ஆகிவிடும். அதுபோல அத்தர் மணம் போன்ற மணங்கள் எல்லாம் அதிகநாழி நிற்காது. ஆனால் திருமணம் என்பதுதான் காலத்தைக் கடந்து நிற்பது. எல்லாக் காலத்தும் புகழ் பரப்பி மணந்து நிற்பது. காந்திஜி, நேருஜி, அப்பிரகாம் லிங்கன், நமது முதல் அமைச்சர் அவர்களுடைய புகழைப்போல காலம் கடந்து, நிலம் கடந்து என்றும் நிலைத்திருப்பது. அதனால் தான் ஈதல் இசைபட வாழ்தல் என்று வள்ளுவர் கூறினார். புகழ் பரப்பி வாழ்வது தான் வாழ்க்கை. அந்தவகையில் சுயமரியாதைத் திருமணத்தைச் செலவுபடியாகத்தக்கதாக நாம் செய்கிற கைங்கர்யத்தில் நான் குறிப்பிட்டது போன்ற சில சொற்களை, வார்த்தைகளை மாற்றினால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.



1967 நவம்பர் 28]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** கனம் உறுப்பினர் அவர்கள் தாலி அணிவதில் உள்ள கருத்து பல இடத்தில் அருவருக் கத்தக்கது என்று கருதுவதாகவும், பெண் இனத்தின் தன்மான உணர்ச்சிக்குக் கேடு விளைவிப்பதாகக் கருதுவதாகவும் குறிப் பிட்டார்கள். அதைக் கேட்டு உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைந்தேன். அப்படிப்பட்ட கருத்துக் கொண்டவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சியில் இருப்பது நாட்டுக்கு நல்ல எதிர்காலம் இருப் பதைக் காட்டுவதால் வரவேற்கிறேன்.

இந்தச் சட்டத்தில் தாலி கட்டித்தான் தீரவேண்டுமென்று சொல்லவில்லை. அல்லது, அல்லது என்பதாக மூன்று பிரிவுகள் இருக்கின்றன. தாலியும் கட்டலாம், அல்லது இப்படியும் செய்ய லாம், அல்லது இப்படியும் செய்யலாம் என்பதாக மூன்று பகுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்றையும் செய்யலாம். அல்லது அந்த மூன்றில் ஒன்றைச் செய்தாலே போதும் என்று குறிப்பிடப்பட் டிருக்கிறது. ஆகவே நம்முடைய நண்பரைப் போன்ற கருத்து உடையவர்கள் தாலி கட்டாமலேயே திருமணம் செய்துகொண் டாலும் அது இந்தச் சட்டத்தின்படி செல்லுபடியாகக் கூடியது தான். நம்முடைய நண்பருடைய கருத்தைக் கேட்ட அந்தக் கட்சியில் உள்ளவர்கள் இனி தாலி கட்டாமலேயே திருமணம் செய்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த திருத்தத்தைப்பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். தாலி கட்டுவது கட் டாயம் அல்ல. இந்துச் சட்டத்தின் அமைப்பை பார்க்கும்போது இலக்கியங்களின் அடிப்படையில் அமைக்கப்படவில்லை என்பது தெரியும். பிற்காலத்தில் தமிழகத்தில் அந்த அந்த முறைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒரு முறை தாலி கட்டுவது. ஆகவே தான் இப்படிச் செய்யலாம், அல்லது அப்படிச் செய்யலாம் என்பதாக 'ஆர்', 'ஆர்' என்பதாகப் போடப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சுயமரியாதை நோக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். சுயமரியாதை நோக்கத் தைப்பற்றி அவர் உணர்ந்து ஆதரித்துப் பேசியதற்காகப் பாராட்டுகிறேன். கட்டுவது என்ற சொல்லைப்பற்றி நானே அதிகாரிகளுடன் பரிசீலனை செய்து பார்த்தேன். அந்தச் சொல் எனக்கே பிடிக்கவில்லை. ஆயினும், அவர்களுக்கே தெரியும் சட்ட நுணுக்கங்கள் பல கால கட்டத்தில் குறிப்பிடப்பட்டு வந்துள்ள வார்த்தையை எடுத்துவிட்டு வேறு வார்த்தை போடுவது வேறு பொருள் செய்துகொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துவிடப் போகிறதே என்பதற்காகத்தான் அந்த வார்த்தை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பல யோசனைகளுக்குப் பிறகே இது போடப்பட்டுள்ளது. தமிழ் மொழி பெயர்ப்புச் செய்கிறபோது நல்ல வார்த்தை போடப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. மகாதேவன் அவர்கள் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

*அரசினர் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

*பிரிவு 2, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

*முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.*

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

" That the Hindu Marriage (Madras Amendment) Bill, 1967 (L.A. Bill No. 19 of 1967), as amended be passed ".

*தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா திருத்தப்பட்டபடி சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.*

### (ii) *1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 13/1967)*

*THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker, Sir, I move—

" That the following recommendations made by the Madras Legislative Council to the Indian Stamp (Madras Amendment) Bill, 1967 (L.A. Bill No. 13 of 1967) be taken into consideration".

*Clause* 8.

In sub-section (3) of the proposed section 47-A, add the following proviso, namely :—

' Provided that nothing in this sub-section shall apply to any instrument registered before the date of the commencement of the Indian Stamp (Madras Amendment) Act, 1967 '.

*Clause* 10.

In sub-clause (1) of clause 10 after the word ' consideration ' insert the words ' in the first place it occurs '.

Under sub-section (3) of the proposed section 47-A the Collector may *suo motu* within three years from the date of registration of any instrument of conveyance, exchange or gift not already referred to him under sub-section (1) call for and examine the instrument for the purpose of satisfying himself as to the correctness of the market value of the property. A doubt was raised in the Council whether under this sub-section the Collector can call for documents registered before the date of the commencement of the proposed amending Act. The amendment proposed by the Council to clause 8 seeks to remove this doubt. According



to this amenrlment, the Collector can call for and examine only those documents registered after the date of the commencement of the proposed amending Act.

The amendment proposerl to clause 10 of the Bill is only of a verbal nature.

I commend that the recommendations made by the Legislative Council may be accepted.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் உள்ள கேள்வி: " 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ் நாடு திருத்த) மசோதாவில் (சட்டப் பேரவை மசோதா 13/1967) தமிழக சட்ட மேலவை செய்த பரிந்துரைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் ".*

*தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பரிந்துரைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.*

*பிரிவுகள் 8-ம்—10-ம்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *பேரவையின் முன்னுள்ள கேள்வி :*

*பிரிவுகள் 8, 10 குறித்து தமிழகச் சட்ட மேலவை செய்துள்ள பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :*** *தலைவர் அவர்களே, லெஜிஸ்லேடிவ் கவுன்சிலில் இருந்து நமக்காகப் பரிந்துரையாக அனுப்பப் பட்டிருக்கிற திருத்தங்களுக்காக நாம் அவர்களுக்குக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். ஆத்திரத்தில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டோமோ என்று ஐயப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையில் நாம் இருந்தோம். இந்தச் சட்டத்தினால் முன்பு பதிவு செய்த பத்திரங்களையும் கலெக்டர்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய உரிமை வழங்கப்பட்டிருந்தது. இப்போது மேல் சபை தந்துள்ள திருத்தத்தினால் அந்த அதிகாரம் இப்போது சட்டபூர்வமாகவே ரத்து ஆகிவிடும். முன்பு ரிஜிஸ்தர் செய்த பத் திரங்களை அப்படி மறுபடி பரிசீலனை செய்து ஆக்சுவல் வால்யூ நிர்ணயிக்க கலெக்டருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால் பல இன்னல்களும், கஷ்டங்களும் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மேல் அவையில் எடுத்துச் சொன்னதன் காரணமாக இந்தத் திருத்தத்தை அரசாங்கத் தரப்பில் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். அதற்காக அரசாங்கத்தை மனமார வாழ்த்துகிறோம். சாதாரணமாக இந்தமாதிரியான முத்திரைத்தாள் சட்டத்திற்கு வால்யூ நிர்ணயிக்க ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பது பல கஷ்டங்களுக்கு இடமளிக்க ஏதுவாகும். அதைத் தவிர்ப்பதற்காக மேலவை தம் ஆழ்ந்த கருத்தினை நமக்குத் தந்தமைக்கு நாம்*

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1967 நவம்பர் 28

அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். ஆகையால் இனி கஷ்டம் எழாது என்று கருதி இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.

பரிந்துரைகள் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டன,

(iii) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப்பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா 20/1967).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே,

"1967-ம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப்பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா[a] (சட்டப் பேரவை மசோதா 20/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று கோருகிறேன்.

இந்த மசோதாவில் அதிகமாக விளக்க வேண்டியது ஒன்றும் இல்லை. இதற்கு ஆண்டுதோறும் காலவரையறை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த மசோதாவுக்கு இப்போது 1968-ம் ஆண்டு ஜனவரி 25-ம் தேதி வரைதான் காலம் இருக்கிறது. மேலும் ஓராண்டு காலத்திற்கு இதை நீடிக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன்படி இந்த மசோதாவின் காலம் 1969-ம் வருடம் ஜனவரி 25-ம் தேதி வரை அனுமதிக்கப்படுகிறது. ஆகவே இந்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது,

இரண்டாவது பிரிவு, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, '1967-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் கட்டுப்பாடு—கேட்டுப்பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா 20/1967) நிறைவேற்றப்பட வேண்டும்' என்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா சட்டமாக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

a 1967 நவம்பர் 24 தேதியிட்ட தமிழகத் (தனிவெளியீடு) அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



(iv) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாவது திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 21/1967).

* மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1967-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த மசோதாவை)[a] ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்" என வேண்டிக்கொள்கிறேன்.

தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920) நகராட்சிகளை முறைப்படுத்துகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நகராட்சிகளுக்கான மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அச்சட்டத்தின் 7-வது பிரிவில் கண்டுள்ள விதித்துறைகளின் கீழ் முடிவு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு நகராட்சியிலுமுள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முடிவு செய்யப்படுகிறது. தற்போதைய விதித்துறையின் கீழ், 20,000-க்கு மேற்படாது மக்கள் தொகை உள்ள நகராட்சிகளைப் பொறுத்தவரையில், உறுப்பினர்களின் குறைந்த அளவு எண்ணிக்கை 16 ஆகும். இது 50,000 மக்கள் தொகை வரை ஒவ்வொரு பத்தாயிரம் மக்கள் தொகைக்கும் நான்கு உறுப்பினர்களாக கூடுதலாக்கப்படுகின்றது. 50,000-க்கு மேற்பட்டு, ஆனால் 1,00,000-க்கு மேற்படாத மக்கள் தொகையுள்ள நகராட்சிகளில் மேலும் நான்கு உறுப்பினர்கள் கூடுதலாக்கப்படுவர். 1,00,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகராட்சிகளைப் பொறுத்தவரையில், இந்த எண்ணிக்கை 36 என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது. எனவே, ஒரு லட்சத்துக்கு மேல் மக்கள் தொகை என்னவாக இருந்தபோதிலும், நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பேரளவு எண்ணிக்கை 36 என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகரங்களின் மக்கள் தொகை கடந்த இருபது முப்பது ஆண்டுகளாகப் பெருமளவுக்கு அதிகரித்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். நகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 1920-ல் மக்கள் தொகையின் அடிப்படையில் 36 என்ற பேரளவுக்குட்பட்டு முடிவு செய்யப்பட்டது. 1 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகராட்சி நகரங்களைப்பொறுத்தவரையில், உறுப்பினர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்த வேண்டியுள்ளது. நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பேரளவு எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து, 1949-ம் ஆண்டு முதற்கொண்டே அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

உள்ளாட்சி குறித்த வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள அரசாங்கத்தின் தற்காலிக முடிவுகளில் ஒன்று என்னவென்றால், 2 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகரங்களில் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 42 ஆக முடிவு செய்யப்

a 1967 நவம்பர் 24 தேதியிட்ட தமிழக (தனிவெளியீடு) அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. மா. முத்துசாமி] [1967 நவம்பர் 28

படலாம், என்பதாகும். நகராட்சி நிர்வாகத்தைச் சீரமைப்பது குறித்து ஆலோசனை செய்யவும், நகராட்சிகள் குறித்த தற்போதைய சட்டங்களின் விதித்துறைகளைப் பரிசிலனை செய்து தகுந்த திருத்தங்கள் செய்ய ஆலோசனை கூறவும் ரத்தினசபாபதி முதலியார் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. நகராட்சிகளின் தற்போதைய வகைப்பாட்டில் சிறு மாறுதல்களுடன், நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பேரளவு எண்ணிக்கையை 48-ஆக உயர்த்தும் வகையில் மொத்த மக்கள் தொகையின் அடிப்படையில் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முடிவு செய்யப்படலாமென்று அக்குழு பரிவுரை செய்தது.

இதைத் தவிர, மக்கள் தொகையின் விகிதாசாரப்படி நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பேரளவு எண்ணிக்கையை உயர்த்தி அதன் மூலம் மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்புக்கேற்ப முறையான பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமென்று வரி செலுத்துவோர் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

நகராட்சி மன்றம் சிறிய அளவினதாக இருக்கவேண்டுமா அல்லது பெரிய அளவினதாக இருக்க வேண்டுமா என்பது குறித்து முடிவு செய்யும்போது நகராட்சிமன்றம் நிறைவேற்றப் பணித்துள்ள அலுவர்களைக் கருதிப் பார்க்க வேண்டும். நகராட்சி மன்றத்திற்கு நிர்வாக அதிகாரம் கிடையாது. எது ஒன்றைக் குறித்தும் அது விவாதித்து முடிவு மட்டுமே செய்யலாம். எனவே மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைப் போதிய அளவு அதிகமாக இருக்கவேண்டும். சட்டப்படி நகராட்சி மன்றங்களுக்கு ஒப்படைத்துள்ள கடமைகள் பலதரப்பட்டவையாய் உள்ளதால், மக்கள் தொகையின் அதிகரிப்பிற்கேற்ப நகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை உயர்த்தப்படவேண்டும். ஆயினும், மன்றம் மிகப் பெரிய அளவினதாக இருந்தாலும், அதனால் இடர்பாடுகள் விளையும். சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அண்மையில் 100-லிருந்து 120-ஆக உயர்த்தப்பட்டதனை இங்குக் குறிப்பிட விழைகின்றேன். இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, 1 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகரங்கள் குறித்து மேற்படி சட்டத்தில் முடிவு செய்துள்ள நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பேரளவு எண்ணிக்கையை உயர்த்துவது முறையாகும் என்று இப்போது கருதப்படுகிறது. அதாவது 5 லட்சம் மக்கள் தொகை வரையில் ஒவ்வொரு லட்சத்துக்கும் கூடுதலாக நான்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதும், 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகைக்கு, உறுப்பினர்களின் பேரளவு எண்ணிக்கையை 52-ஆக முடிவு செய்வதும் முறையாகுமென்று கருதப்படுகிறது.

இம் மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு சட்ட மன்றப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

V2)1, 31 N67



N67.6.4

1967 நவம்பர் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சரால் முன்மொழியப்பட்ட தீர்மானம் பேரவைமுன் விவாதத்திற்கு இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், இந்த மசோதாவைப் பற்றி நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதிலே உறுப்பினர்களுடைய எண்ணிக்கையின் உச்ச வரம்பை 52 ஆகக் கூட்டுவதற்காக இந்த மசோதாவானது கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1920-ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட இந்தச் சட்டத்தின் அடிப்படையிலேதான் நாம் இன்றைக்கு நிர்வாகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம். உள்ளாட்சித் துறையிலே பலவிதமான கஷ்டங்களும் துன்பங்களும் இருக்கிற, காரணத்தாலே, இதைத் திருத்திப் புதிதாக ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று இந்த மன்றத்திலே பல முறைகள் பல உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் வந்தபொழுது அதிவிரைவிலே அந்தத் திருத்த மசோதா வரப்போகிறது என்று கேள்விப்பட்டோம். ஆனால் இதுகாறும் அத்திருத்த மசோதாவானது வரவில்லை. பத்தாயிரத்திற்கு நான்கு என்ற முறையிலே உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூட்டி உச்ச வரம்பை 52 ஆகக் கூட்டிருக்கிறார்கள். இதைத்தவிர, உள்ளாட்சித் துறையிலே உள்ள அதிகாரங்கள் எல்லாம் முனிசிபல் கவுன்சில்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படவேண்டும். அதிகாரங்கள் குவிந்திருக்காமல் பரவலாக விஸ்தரிக்கப்படவேண்டும். அந்த முறையிலே ஒரு திருத்தம் வருமானால், அது வரவேற்கத் தக்க அம்சமாக இருக்கும்.

64981

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே அதிகமான கருத்துகளைக் கூறவேண்டிய தேவையில்லை. இது எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்குத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதைத்தவிர நான் குறிப்பிட்ட திருத்தங்களையும் விரைவிலே கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி ஒரு திருத்தச்சட்டத்தை விரைவிலே உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த திருத்த மசோதாவின் கருத்துக்களை பொதுவாக ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

Dr. H. V. HANDE : Hon. Speaker, Sir, with regard to this Bill I wish to seek a few clarifications. Firstly, it would have been very nice and useful if the Hon. Minister had given a list of a few important cities like Madurai, Coimbatore and Tiruchirappalli containing the exact number of wards and the councillors who are to be elected by those municipalities. If such additional particulars like the present strength and the probable future strength of the councillors had been given, it would have been a good thing. Now we do not know what is actually happening in those municipalities.

In this particular context, I would like to point out that in the panchayat unions, M.L.As. are also ex-officio Members of the panchayat unions without voting rights. Similarly in the case of

municipalities and the Corporation of Madras, if the local M.L.As. are also made ex-officio members of those bodies without voting rights they can at least know what is actually happening there. At least they should be supplied with a copy of their agenda, etc., and also allowed to participate in the meetings. If that is done, there will be a link between the Government and the municipalities and the M.L.As. also will be in a position to point out to the Government the difficulties or the requirements of the municipalities in the Legislature. For instance, take the water supply scheme of Tiruchirappalli. If the Members of the Legislature belonging to Tiruchirappalli are made ex-officio members of that municipality, they could come to the House and point out clearly the difficulties experienced by that municipality. In that way they could make an effective contribution for welfare of the people. The Hon. Minister for Local Administration also will be extremely profited in knowing what is actually happening in the municipality and coming to a quick decision.

Then I come to the most important thing. Unfortunately in most of the municipalities and the Corporation of Madras, a vitiated atmosphere of party feeling has crept in and that overrides other basic considerations for the welfare of the people. I do not single out any single political party for this state of affairs. But unfortunately that is there and we hear day-in and day-out that a ward here or there has not been attended to because a particular party has been in power. So, I request this Ministry to consider this aspect of the matter and call a meeting of party leaders who could sit together and come to a decision which will completely do away with the party feeling generated at the time of elections to municipalities. These are the few random thoughts which occurred to me and I think they are pertinent to the Bill. I hope this Ministry will take proper action on them at the proper time.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மாவட்ட நகராட்சித் திருத்த மசோதாவின் கருத்துக்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ்நாடு பூராவிலும் உள்ள நகராட்சிகளில் பீப்பிள்ஸ் ரெப்ரசன்டேஷன் ஆக்டின்படி எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. நகராட்சியில் ஒரு பகுதி மத்திய சர்க்காரின் பகுதியாக இருந்தால், அங்கே பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. ரெயில்வே காலனி, ஐ.ஏ.எப். காலனி இவற்றில் அளிக்கப்படவில்லை. ஒரு சில நகராட்சிகளில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. ஒரு சில நகராட்சிகளிலே அளிக்கப்படவில்லை. இதுபற்றி நான் அமைச்சர் அவர்களிடம் மனுக்களைக் கொடுத்திருக்கிறேன். தாம்பரத்தை எடுத்துக்கொண்டால் 15 ஆயிரம் பேரில் 2,500 பேர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. முழுமையான பிரதிநிதித்துவம் சில நகராட்சி-





களில் கிடைக்கவில்லை. ஆகவே, அப்படியில்லாமல் மத்திய சர்க்கார் பகுதியாக இருந்தாலும்சரி, மாநில சர்க்கார் பகுதியாக இருந்தாலும்சரி, எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும். அப்படிப்பட்ட ஒரு பரவலான உத்திரவு போட்டால்தான், எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கக் கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து அரசாங்கம் அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கோவிந்தராசுலு : தலைவரவர்களே, இந்த நகராட்சிகள் திருத்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களை கோவையைப் பொறுத்தவரையில் சொல்லலாம் என்று கருதுகிறேன். தற்போதுள்ளபடி 50,000 முதல் 1 லட்சத்திற்கு வாக்காளர்கள் இருக்கின்ற நகராட்சிகளுக்கு 32 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கு வழி இருக்கிறது. ஒரு லட்சத்திலிருந்து 2 லட்சம் வரையிலும் 36 மன்ற உறுப்பினர்கள் இருப்பதற்கும், 2 லட்சத்திலிருந்து 3 லட்சம் வரையிலும் 40 மன்ற உறுப்பினர்கள் இருப்பதற்கும், 3 லட்சத்திலிருந்து 4 லட்சம் வரையிலும் 44 மன்ற உறுப்பினர்கள் இருப்பதற்கும், 4 லட்சம் முதல் 5 லட்சம் வரைக்கும் 48 உறுப்பினர்கள் இருப்பதற்கும் 5 லட்சத்திற்கு மேற்பட்டால் 52 உறுப்பினர்களும் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கோவை நகரத்தைப் பொறுத்தவரையில், இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்களையும் 36 நகர மன்ற உறுப்பினர்களையும் கொண்டுள்ள 1¾ லட்சம் வாக்காளர்களைக் கொண்டுள்ளது. ஆனால் அங்கே 3 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே 36 நகர மன்ற உறுப்பினர்களாக இருப்பதை 40 நகர மன்ற உறுப்பினர்களாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், கோவை நகரத்தைப் பொறுத்தவரையில், முன்னாலே இருந்த டவுன் பிளானிங் செக்ஷனிலே ரோடுகளும் பாதைகளும் குறுகிய பாதைகளும் அமைக்கப்பட்டு இருப்பதாலே இப்பொழுது தொழிலாளர்கள் அங்கெல்லாம் அதிகமாக வசிக்கின்ற காரணத்தாலே 3½ லட்சத்திற்கு மேற்பட்டு ஜனத்தொகை இருப்பதாலே 40 நகர மன்ற உறுப்பினர்களாக இருப்பதை 44 ஆக உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு சட்ட மன்றத்திலே இப்பொழுது ரிசர்வ் தொகுதி எப்படி இருக்கிறதோ, அதைப்போல நகராட்சிகளிலும் ரிசர்வ் தொகுதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் ந. ப 12 00
தலைவர் அவர்களே, மாவட்ட நகராட்சிகள் திருத்த மசோதாவின் மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சி உறுப்பினர் ஹாண்டே அவர்களும், ஏனைய உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். 1920-ம் ஆண்டிலே ஏற்பட்ட இந்த சட்டதிட்டங்களில் பல திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்ற முயற்சியில் இதற்கு முன்னாலே இருந்த அரசு நீண்டகாலமாக ஈடுபட்டு ஒரு

வரைவுத் திட்டத்தைத் தயாரித்து, பிறகு என்ன காரணத்தாலோ கைவிடப்பட்டது. புதிய அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு அவைகளை மீண்டும் ஆராய்ந்து குறைபாடுகளை எல்லாம் போக்கி சட்ட திட்டங்களைத் திருத்தியமைத்து நகராட்சிகளை நல்ல வலிவும் பொலிவும் உள்ளதாக மாற்ற வேண்டுமென்ற முயற்சியில் பரிசீலனைகளைச் செய்து கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய பல்வேறு பிரச்சினைகளும் அந்தத் திருத்தங்களை அமல்படுத்துகிற நேரத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு நிச்சயமாக அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநகராட்சி மன்றங்களுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் முறையான அதிகாரங்களை வழங்க வேண்டுமென்பதைப் பற்றி வலியுறுத்திச் சொன்னார்கள். அந்தச் சட்டத்தில் விரிவான முறையில் திருத்தங்கள் செய்யப்பட்டு மிக விரைவில் இந்த மாமன்றத்திற்குக் கொண்டு வரப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் ஹாண்டே அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் பார்வையாளர்களாகச் சென்று கருத்துக்களைத் தெரிவிப்பது போல், நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். சட்ட திட்டங்கள் வருகிற நேரத்தில் அவைகளைப் பற்றியும் கருத்துக்களைப் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக இன்னொன்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். உள்ளாட்சித் துறைகளில் அரசியல் கட்சிகள் தலையீடு இருக்கக்கூடாது என்றார்கள். அரசியல் கட்சிகளின் போட்டியின் விளைவாக குழப்பங்களும், சச்சரவுகளும் ஏற்படுவதால், நிர்வாக முறை சீர்கேடு அடைகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே, இதைப் பற்றி அனைவரும் கூடிப் பேசி கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலைமையில் உள்ளாட்சி மன்றங்களை நடத்திச் செல்ல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நம்முடைய தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்ற மாதத்தில் திட்டவட்டமாக பல்வேறு நிகழ்ச்சிகளின்போது இதைப் பற்றி அறிவித்திருப்பதை அவர்களும் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மற்றக் கட்சிகள் உடன்பட்டால், கட்சி அடிப்படையில் போட்டி தேவையில்லை என்ற முடிவுக்கு வருவார்களேயானால், அரசு நிச்சயமாக மனமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மற்றக் கட்சிகள் உடன்பாடு இல்லாமல் அரசாங்கமே இத்தகைய முடிவை வெளியிடுமானால், அரசாங்கத் தரப்புக் கட்சிக்கு ஏதோ பலகீனம் இருக்கிற காரணத்தால், அப்படி முடிவுக்கு வருகிறார்கள் என்ற குறைபாட்டைச் சொல்லக் கூடும் என்பதால் அரசாங்கம் தானாகவே நடவடிக்கை எடுக்க இயலாத நிலைமை இருக்கிறது.



நீண்டகாலமாக ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருக்கக்கூடிய கட்சி, பல ஆண்டு காலமாக இந்த நாட்டின் ஆட்சித் துறையை ஏற்று நடத்தி வந்த கட்சி இந்தப் பிரச்சினையிலே முழு கவனத்தைச் செலுத்தி அறிவிப்புக் கொடுத்தால் அனைவரும் கலந்து பேசி முடிவை மேற்கொள்ள இந்த அரசும், அரசைச் சார்ந்திருக்கிற கழகமும் நிச்சயமாக ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர் முஹு ஆதி அவர்கள், சில பகுதிகள் நகராட்சிகளில் இணைக்கப்படாது விடப்பட்டு இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி அவர்கள் சட்ட விதிகளைப் பற்றிப் பரிசீலனை செய்த காலத்திலே எழுதிக் கொடுத்திருந்தால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும். அவர்கள் இன்றைக்குத்தான் என்னிடத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். தொடர்புடைய அதிகாரியிடத்தில் கொடுத்து பரிசீலனை செய்து தக்க முடிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருமை நண்பர் கோவை சட்ட மன்ற உறுப்பினர் கோவிந்தராஜன் அவர்கள் தம்முடைய மாவட்டத்தில் உள்ள பிரதிநிதித்துவம் நகரத்தில் இல்லையென்று குறிப்பிட்டார்கள். அவர்கள் கூறுகின்ற கணக்குப்படி மக்கள் தொகை 3½ லட்சம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். வார்டு திருத்த அமைப்புகள் 1961-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் பார்க்கும்போது அவர்களுக்குக் கிடைத்திருப்பது 40 என்ற விதம் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மக்கள் தொகை கணக்குகள் மாறுகிறபோது படிப்படியாக உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், முன்பு இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கையையும், இப்போது மாற்றப் போகிற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பற்றிக் கூறவேண்டுமென்றார்கள். முன்பு இருந்ததை விட இப்போது உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமான நகரங்கள் சேலம், திருச்சி, கோவை, மதுரை ஆகிய நான்கு நகரங்கள்தான். இந்த நான்கு நகரங்களில் முன்பு 36 உறுப்பினர்கள் இருந்தார்கள். இப்போது சேலத்தில் 40 உறுப்பினர்கள், திருச்சியில் 40 உறுப்பினர்கள், கோவையில் 40 உறுப்பினர்கள், மதுரையில் 48 உறுப்பினர்கள் என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒற்றை மெம்பர் முறைகளை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அவற்றைப் பற்றியெல்லாம் இந்த நேரத்தில், நகராட்சித் தேர்தல்கள் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பரிசீலிக்க முடியாது இருப்பதாலும், சட்ட திட்டங்களைத் திருத்தி

யமைக்கும் முயற்சியை மேற்கொண்டிருப்பதாலும், அப்போது இந்தக் கருத்துக்களையெல்லாம் பரிசீலிக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தாலும், இதைப் பற்றி அப்போது பரிசீலித்துக் கொள்ளலாம். அதற்கிடையில் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதற்குக் காரணம் நகராட்சித் தேர்தல்களை அதிக காலம் தள்ளி வைக்காமல் உடனடியாக நடத்த வேண்டுமென்பதுதான். அந்தக் காரணத்தாலேதான் இது சபையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் கூறிய அத்தனை கருத்துக்களிலும் கவனம் செலுத்தப்படும் என்று கூறி இந்த மசோதாவைச் சட்டமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டாவது பிரிவு, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, "1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாவது திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 21/1967) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, மசோதா சட்டமாக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

**( v ) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) வரிவிதிப்பு (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 22/1967).**

* THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill,[a] 1967 (L.A. Bill No. 22 of 1967) be taken into consideration".

Under section 3 of the Madras Sales of Motor Spirit Taxation Act, 1939, every importer and every wholesale dealer should pay, on all the sales of motor spirit effected by him, a tax at the rate of ten paise per litre, in the case of petrol and diesel oil and at the rate of two paise per litre in the case of any motor spirit other than petrol and diesel oil.

It was found that certain motor spirits used as aviation fuel were being sold by the oil companies with different commercial names and they were subjected to tax at two paise per litre only, as motor spirit other than petrol and diesel oil. Since petrol or diesel oil used for motor vehicles were taxed at ten paise per litre, the Government decided that any motor spirit used as aviation fuel should also be subjected to tax at ten paise per

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 25th November 1967.



litre. In view of the appreciable revenue anticipated by such a measure and as the Legislature was not then in session, the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Ordinance 1967 (Madras Ordinance 1 of 1967) was promulgated by the Governor to give effect to the above decision.

The Bill seeks to replace the above Ordinance. I request the House to accept the motion.

DR. H. V. HANDE : Sir, I wish to have one or two clarifications from the Minister.

At the outset I must say that this is a very very sensible measure and this Bill just replaces the Ordinance. I want to know when exactly was the Government seized of the matter. Sale of certain motor spirits used as aviation fuel under different names must have been going on for a long time. I have a feeling that a lot of revenue must have been lost. Do the Government think it not possible to give retrospective effect and will the Government tell us for how long it has been going on and under what circumstances this was brought to the notice of the Government? If the Minister can tell us this thing, it will help us to know how exactly and in what context this legislation has been brought forward.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டத்திலே இருந்த டெஃபனிஷனை, விமானங்களுக்குப் போடக்கூடிய ஒருவிதமான கிரசினுக்கும் பொருந்தும் என்று இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு வரி வசூலித்து வருகிறது. அதில் எந்தவிதத் தவறும் இல்லை. பிறகு, இப்படி ஒரு விளக்கம் கொடுக்கலாமென்றால், விளக்கம் கொடுத்தால் வாங்கப்பட்ட வரிகளை எல்லாம் திருப்பிக் கொடுக்கவேண்டிய வாய்ப்பு ஏற்பட்டு விடும் என்ற சந்தேகத்திற்காகத்தான் உடனடியாக ஒரு ஆர்டினன்ஸ் போடப்பட்டது. உறுப்பினர் அவர்கள் நினைப்பதுபோல் எந்தவிதமான நஷ்டமும் ஏற்படக் கூடாது என்ற அடிப்படையில்தான் இப்படி விளக்கமாக சட்டமும் போட்டு விட்டால் நல்லது என்று கருதினோம். ஏற்கனவே உள்ள சட்டத்தில் போடப்பட்டுள்ள வார்த்தைகளில் இதுவும் வரட்டும் என்பதுதான். ஏற்கனவேயிருந்த விளக்கத்தை விட ஒரு புதிய பெயர் வைப்பதால் இப்படிப்பட்ட ஒரு விளக்கம் வராது அவர்கள் தப்பித்து விடலாம் என்ற நிலைமை இருக்காது. தெளிவுபடுத்த வேண்டுமென்றுதான் இது போடப்பட்டது. அப்படிப்பட்ட விளக்கத்தை யாரும் தந்து விடக் கூடாது என்று இச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கனவே வசூலித்து வருகிறார்கள். இந்த ஆர்டினன்ஸ் ஏற்கனவே போடப்பட்டிருக்கிறது. போடப்பட்ட தேதியிலிருந்து அந்த விளக்கம் காப்படும். அந்தமாதிரி தவறு ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும் திருத்த அதில் வழிகள் இருக்கின்றன.

[திரு. செ. மாதவன்] [1967 நவம்பர் 28

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 22 of 1967) be passed ".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக் கப்பட்டது.

(vi) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றுவது திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 23/1967).

* THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker Sir, I move—

" That the Madras General Sales Tax (Third Amendment) Bill[a] 1967 (L.A. Bill No. 23 of 1967) be taken into consideration ".

In Tax Case Nos. 108 to 110 of 1967 the Madras High Court held that the expression " all kinds of mineral oils (not otherwise provided for in this Act)" occurring in entry 47 of the First Schedule to the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959) as amended by the Madras General Sales Tax (Amendment) Act, 1964 (Madras Act 7 of 1964) will cover only such of the mineral oils as are lubricants and not furnace oil, etc., which are not lubricants. But the Commercial Taxes Department had been treating furnace oil and other mineral oils (not otherwise provided for in the Act) as falling under entry 47 and had been levying single point tax under that entry on those articles. In view of the High Court's judgment, refund of tax becomes necessary to the tune of Rs. 19 lakhs, being the difference between the rate of single point tax levied and collected and the rate of multi-point tax leviable in terms of the High Court's judgment. It is therefore proposed to make a separate entry 47-A in the First Schedule to the Act so as to cover all kinds of mineral oils (other than those falling under entry 47 and not otherwise provided for in the Act) including furnace oil, the rate of tax being the same as for entry 47 and to validate the past levy and collection of tax in respect of the articles covered by the proposed entry 47-A with effect from the 1st April 1964. Existing entry 47 is also proposed to be amended to cover only lubricating oils (not otherwise provided for in the Act), quenching oils and greases. Clauses 2 and 4 of the Bill contain the necessary provisions in this regard.

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 24th November 1967.



1967 நவம்பர் 28] [Thiru S. Madhavan]

Pure silk fabrics were exempted from sales tax with effect from 1st March 1961 consequent on the levy of additional excise duty on silk fabrics by the Union Government. In view of the withdrawal of the additional excise duty on silk fabrics by the Union Government, this Government decided to cancel the exemption with effect from the 1st July 1966, in respect of pure silk fabrics made in mills and on powerlooms. Accordingly these articles became liable to multi-point tax from the 1st July 1966. But it has been found that silk fabrics have been included as one of the items of declared goods under section 14 of the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956). Therefore under section 15 of that Act only a single point tax at a rate not exceeding 3 per cent can be levied on these articles under the sales tax law of the State. It is accordingly proposed to amend the Second Schedule to the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959) as to levy with effect from the 1st July 1966 a single point tax of 3 per cent at the point of first sale in the State on pure silk fabrics made in mills and on powerlooms. Clause 3 of the Bill contains the necessary provisions in this regard.

Sir, I commend the motion for the acceptance of the House.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

' That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1967 (L.A. Bill No. 23 of 1967) be passed '.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக் கப்பட்டது.

(vii) 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலவுடமை உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா 24/1967).

* THE HON. THIRU S. MADHAVAN : Mr. Speaker, Sir, I beg to move—

' That the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, [a] 1967 (L.A. Bill No. 24 of 1967) be taken into consideration '.

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 25th November 1967

Section 59 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961) as amended by the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1965 (Madras Act 10 of 1965) provides that the provisions of Chapter VIII of that Act shall remain in force for a period of six years from the date of publication of the Act, namely, the 2nd May 1962. The chapter will now expire on the 2nd May 1968.

Chapter VIII of the Act deals with the cultivating tenants' ceiling area. The proposal to enact a single comprehensive Tenancy Act embodying all the tenancy enactments in force in the State including Chapter VIII of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, with suitable modifications with reference to the recommendations made by the Planning Commission, the Government of India, etc., from time to time is separately under the consideration of the Government. This comprehensive Tenancy Bill is not likely to become law before the 2nd May 1968. It has, therefore, been decided to amend section 59 of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961) so as to extend the life of Chapter VIII of the Act for a further period of two years from the 2nd May 1968. The Bill seeks to achieve the above object.

I request the House, Sir, to accept the motion.

திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய இந்த மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே தமிழ்நாடு அரசாங்கம் அன்று திட்டக் கமிஷனுக்கு குத்தகை வார விவசாயிகள் சம்பந்தமாக சீக்கிரமே ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதாக எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதி இன்று மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. அதோடு இந்திய திட்டக் கமிஷன் தமிழ்நாடு அரசாங்கத்திடம் இந்த மாநிலத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற குத்தகை வார வரம்புகள் அதிகம் என்றும், நிலப்பிரபுக்களுக்குக் கொடுக்கவேண்டுமென்ற பங்கு கால் பங்காக இருக்கவேண்டுமென்றும் சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அது போல, அவர்களுடைய உரிமைகளைப் பதிவு செய்யவேண்டும் என்றும், யார் யார் எந்தெந்த நிலங்களைப் பயிர் செய்து வருகிறார்கள் என்று பார்த்து அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்றும் திட்டக் கமிஷன் ஏற்கெனவே நமது மாநில அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், குத்தகை வார விவசாயிகள் பாதுகாப்புச் சட்டத்தில் 4-ஏ பிரிவை, நிலப்பிரபுக்கள் குத்தகை வார விவசாயிகளிடமிருந்து மீண்டும் சொந்த சாகுபடிக்கு மேற்கொள்ளுவது குறித்த பிரிவை, நீக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்திருக்கிறது. அது





மட்டுமல்லாமல், திட்டக் கமிஷன் சிபாரிசுகளில் வாரக் குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கக்கூடிய குத்தகைக்கு ரசீது கொடுக்க வேண்டுமென்றும், அவர்கள் மணியார்டர் மூலமாகப் பணத்தை அனுப்பினால் அதைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும், எந்த வருஷத்திலாவது நிலைமை மோசமாக இருந்தால் குத்தகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கூறியிருக்கின்றது. வாரக் குத்தகைக்காரர்கள் ஏழை எளியவர்களாக இருந்தால், அவர்களாக சரண்டர் செய்து விட்டார்கள் என்று ஏராள நிலங்களைத் தங்களுடைய சாகுபடிக்கு நிலப்பிரபுக்கள் எடுத்திருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட திருத்த மசோதாவிலுள்ள பிரிவுக்கு நானும் ஒத்துக்கொள்கிறேன். 1968-ம் வருஷம் மே மாதத்திற்குள் கொண்டு வருவது சாத்தியம் இல்லாமல் இருந்தாலும், சீக்கிரத்தில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளபடி குத்தகை வார விவசாயிகளுக்கு உரிமை வழங்க ஒரு சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மாசோதாவின் மீது ஓரிரு கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

இந்த டெனன்சி லெஜிஸ்லேஷனானது காலதாமதப்பட்டு வருகிறது. விவசாயத் துறையிலே ஒரு அமைதி ஏற்படவேண்டுமானால், எல்லாத் துறைகளையும் நல்ல முறையில் சிந்தித்து ஒரு சட்டத்தின் அடிப்படையில் டெனன்சி லெஜிஸ்லேஷன் கொண்டு வருவது சிறந்த முறையாக இருக்கும் என்று நான் ஆலோசனை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமீபத்தில் பல இடங்களிலே பல நிகழ்ச்சிகள் நடந்தது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று கருதுகிறேன். நிலவுடைமையாளர்களுக்கும் நிலத்தைப் பயிர் செய்கிறவர்களுக்கும் இருக்கிற பிரச்னைகளைக் குறித்துப் பல்வேறு சட்டங்களைத் தமிழக அரசு ஏற்படுத்தியிருந்தாலும் பல கஷ்டங்கள் இன்று இருந்துகொண்டிருக்கின்றன. நிலத்தைத் திரும்ப சொந்தக் கிருஷிக்கு எடுக்கவேண்டுமென்றால் பல கஷ்டங்கள் இருப்பதாக நிலப்பிரபுக்களும், நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள் என்று நிலத்தில் வேலை செய்கிறவர்களும் முழக்காடிக்கொண்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே, இவர்களுடைய பிரச்னைகளுக்கு உடனடியாக ஒரு சட்டத்தை இயற்றுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏதோ காலத்தை மாத்திரம் நீட்டிக் கொடுக்க இந்தத் திருத்தத்திலே வழிவகைகள் செய்திருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று அரசாங்கம் அதிகமாக முனைந்திருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த நிலத்திலே வேலை செய்கிறவர்களுக்கு இருக்கிற கஷ்டங்களைத் தவிர்க்க என்னென்ன வழிவகைகள் செய்யவேண்டுமென்று

தீவிரமாக ஆலோசிக்க வேண்டும். ப்ளானிங் கமிஷனிலிருந்து ஆலோசனைகள் கூறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ப்ளானிங் கமிஷனின் ஆலோசனைகளுக்கேற்ப இந்த அரசு சீர்திருத்தமான முறையில் நல்ல வழிவகைகள் செய்ய வேண்டும்.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பல ஆட்சேபங்களை முற்போக்கான கட்சிகள் கூறியிருக்கின்றன. அது நினைத்த பயனைக் கொடுக்கவில்லை, விவசாயிகளுக்கு நன்மை ஏற்படவில்லை, கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று விவாதத்திற்கு உரிய விஷயங்கள் மக்கள் மத்தியில் இருக்கின்றன. குறிப்பாக ஓரிரு கட்சிகள் நிலச் சீர்திருத்தமே கூடாது என்று சொல்லக்கூடிய நிலைமையும் இருக்கிறது. இன்று இருக்கிற உச்சவரம்பு கூடுதலாக இருக்கிறது, அதைக் குறைக்க வேண்டும் என்று ஏனைய கட்சிகளும் சொல்லுகிற சந்தர்ப்பத்திலே இந்தப் பகுதியில் ஒரு நிலையான ஏற்பாடு ஏற்படுவதற்கும், உற்பத்தி பெருகவும், நிலத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு ஏற்படவும் நல்ல சட்டத்தை உரிய காலத்தில் நமது அமைச்சரவை கொண்டுவரும் என்று எதிர்பார்க்கிறேன். அதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமர்கிறேன். வணக்கம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு நிலச் சீர்திருத்த நில உடைமை உச்சவரம்பு மசோதாவை மேலும் திருத்தி உயிரூட்ட இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவால் சிறு நிலச் சொந்தக்காரர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுச் சொல்லொணாத் துயரத்துக்கு ஆளாகிறார்கள். ஐந்து ஏக்கர்களுக்கும் குறைந்த—ஏன்? ஒன்றிரண்டு ஏக்கர்களே உள்ள—சிறு நிலச் சொந்தக்காரர்கள், தங்கள் வாழ்வுக்கு அதன் வருவாயைத் தவிர வேறு வழியற்ற நாதியற்ற மக்கள் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலத்திலிருந்து சிறிதளவு குத்தகையும் கூடப் பல ஆண்டுகளாகப் பெற முடியாவிட்டாலும், அவர்களை அப்புறப்படுத்த முடியாத பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் என்று அவர்களுக்கு ரேஷனும் கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கு கந்தாயம் முதலியன கட்ட வேண்டிய பொறுப்பும் இருக்கிறது. நிலத்தின் வருவாயைக் கொண்டு அதன் மீதுள்ள கடனையும் கட்ட முடியாமல் நிலத்தையே இழந்துவிடக்கூடிய பரிதாப நிலைகூட உள்ளது.

ஏற்கெனவே 1961-ம் ஆண்டின் நிலச் சீர்திருத்தச் சட்டம் செல்லாதென சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டு மேலும் 17-வது திருத்தத்தின் மூலம் உயிர் கொடுக்கப்பட்டிருந்தாலும், 27—2—1967-க்கு மேல் ஜீவாதார உரிமையைப் பறிக்கக்கூடிய எந்தச் சட்டத்தையும் செய்ய பார்லிமெண்டுக்குக்கூட அதிகாரம் இல்லையெனத் திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூறப்பட்டிருப்பதால் இப்பொழுது கொண்டு வந்திருக்கும் திருத்த மசோதாவானது ஏற்கெனவே உயிரிழந்த சட்டத்தைப் புதுப்பிப்பதாக இருக்கிறது.



இம்மாதிரி போதிய ஆலோசனையின்றிச் செய்யும் சட்டங்களின் பின் விளைவுகள் பலவிதக் கஷ்ட நஷ்டங்களுக்கும் இடமளிக்குமாகையால் இதனைக் கைவிடுவதே நல்லதென்று எடுத்துக்கூற விரும்புகிறேன். இதற்கு வேண்டிய ஆதாரங்களைக் கேட்டால் கொடுக்கவும் விளக்கவும் தயாராக இருக்கிறேன். நான் இவ்வாறு சொல்லுவதன் மூலம் குத்தகை வாரத்துக்கு உழுகின்ற ஏழைச் சிறு விவசாயிகளைப் புறக்கணிப்பதாக எண்ண வேண்டாம். இவர்கள் நலனுக்குப் புறம்பில்லாமல் இந்த ஏழைச் சிறு நிலக்காரர்களையும் வாழவிட வேண்டும் என்பதே என் வேண்டுகோள். இதற்கேற்ற முறையில் சட்டமாக்குவதை நான் வரவேற்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவிலே நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் 8-வது அத்தியாயத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கவேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்தச் சட்டசபையிலே நில உச்சவரம்புச் சட்டம் வந்த சமயத்திலே இனிமேல் இதை நீடிக்காமல் காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷனாக, குத்தகைதாரர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிப்பதற்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதற்கும், உற்பத்தி பெருக வேண்டிய நிலைமைகளுக்கும் கொண்டுவருவதாக அந்த சர்க்கார் சொல்லியிருந்தது. 1968-ம் ஆண்டில் காலாவதி ஆகும் சட்டத்தை நீடிக்க வேண்டும் என்பதை வரவேற்கிறேன். அதே நிலையில் இப்பொழுது நீடித்து அந்தக் காலம் முடிவதற்குள் ஒரு நிரந்தரமான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். இப்போது நிலையில்லாத நிலைமையாக இருக்கிறது. உச்சவரம்பு என்று சொல்லிவிட்டோம். யாரிடம் எந்தெந்த நிலம் எப்படி இருக்கின்றன என்ற கணக்குகள் சரியாக வரவில்லை என்பது இப்போது இருக்கும் நிலை. விவசாயத்திற்கு பூமிதான் அடிப்படை. முன்பு ஜாகீர்தார்கள், ஜமீந்தார்கள் இருந்தார்கள். அவர்கள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள். பெரிய மிராசுதார்கள் இருந்தார்கள். ஓரளவுக்கு மிராசுதார்கள் இந்தச் சட்டத்தை அனுகூலமாகவோ, பிரதிகூலமாகவோ உபயோகப்படுத்திக் கொண்டு தங்களுக்கு வேண்டிய நிலையில் செய்துகொண்டார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்த உண்மை. விவசாயிகள் என்றால், விவசாயமே தெரியாத விவசாயிகள் ஒரு ரகம் இருக்கிறார்கள். நிறைய நிலத்தை வைத்துக்கொண்டு தீவிரமாக விவசாயம் செய்து கொண்டிருப்பது ஒரு ரகம். சொந்தச் சாகுபடியும் செய்து, குத்தகைக்கும் எடுத்து விவசாயம் செய்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். சொந்த பூமி இல்லாமல் குத்தகைக்கு சாகுபடி செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். எல்லாவற்றிலும் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பி.ப. 12-30
இத்தனை ரகங்கள் இருந்தாலும், உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால், உற்பத்தியை அதிகமாக்க வேண்டும் என்பதுதான். அந்த உற்பத்தியைப் பெருக்க உழைப்பவனுக்கு நிலம் இருக்க வேண்டும் என்னும் நிலை. உழைப்பவன் என்றால் யார்? யார் உண்மையாக உழைக்கக்கூடியவர்கள்?

இப்பொழுதிருக்கும்படியான உலகப் போக்கிலே உற்பத்தி அதிகமில்லையே என்றால் அவ்வாறு விளைவதற்காக அக்கறையாக வேலை செய்கிறார்களா என்றால் சந்தேகமாக இருக்கிறது. இதைச் சொல்லும்படியான சமயத்தில் இல்லை இல்லை, பெரிய மிராசுதார்கள் குடியானவர்கள் இல்லை என்னும்படியாகப் பேசுவதாகக் கருதக்கூடாது. என்னுடைய பூமியிலே பாதி பூமியைக் குத்தகைக்குக் கொடுத்திருக்கிறேன். பாதியில் சொந்தச் சாகுபடி செய்கிறேன். நான் விவசாயம் செய்யும் குடியானவனுக்கு வேண்டிய விதை கொடுத்தேன், அதற்கு வேண்டிய உரம் கொடுத்தேன், உரத்திற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்தேன். இத்தனையும் கொடுத்தும் என்னுடைய சொந்தச் சாகுபடியில் கிடைத்ததில் பாதி வெள்ளாமைகூட கிடைக்கவில்லை. இந்தச் சட்டம் நாம் பதவி உரிமை பெறுவதற்குத்தான் இருக்கிறதே தவிர கடமையைச் செய்வதற்கில்லை.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** ஒரு நிலவுடைமையாளர், தானே நேரிடையாக அக்கறையோடு பாடுபட்டு விவசாயம் செய்வதற்கு எந்த அளவு நிலமிருந்தால், அவர் சரியான முறையிலே விவசாயத்தைப் பார்க்க முடியும் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதலமைச்சர் சொல்வதற்கு என் நன்றி. இப்பொழுது இருக்கும்படியான சூழ்நிலையிலே விவசாயத் தொழிலாளர்கள் கேட்கும்படியான ஊதியத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் விவசாயம் செய்வதற்கு 20 ஏக்கரா என்றால் நல்லது. மனத்திலே இருக்கும்படியான எண்ணத்தைச் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் ''டிராப்'' பண்ணப்பார்க்கிறார்கள். அதிலே நான் சிக்கமாட்டேன். இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் அவர்களாக நேரடியாக விவசாயம் செய்தால் இன்னொரு பிரச்னை ஏற்படும், நிலச்சாகுபடியை யார் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று குறிப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. விவசாயத் தொழிலாளர்கள் உள்ள வீடுகளில் உள்ளவர்கள் படிக்கப் போய்விடுகிறார்கள், உத்தியோகம் இல்லாத நிலையிலே வீட்டுக்குப் போகச் சொல்கிறார்கள். மீண்டும் போய் இருக்கும்படியான நேரத்தில் அதை எடுத்துக்கொள்ள என்ன சட்டம் இருக்கிறது என்று விளக்க வேண்டும். மேற்கு ஜெர்மனியில் சொந்தக்காரர்களுக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் கொடுத்துவிட வேண்டுமென்றால் அதற்கான நஷ்ட ஈட்டைக் கொடுத்து விடுகிறார்கள். உச்ச வரம்பு கிடையாது. இவ்வளவு இருந்தால்தான் அவன் வாழ்க்கைக்குச் சரியாக இருக்கும், இவ்வளவு இருந்தால்தான் உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் தேவைகளைப் பெருக்க முடியும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். ரஷ்யாவில் கூட்டுப்பண்ணை வைத்திருந்தும் அவ்வளவு தூரம் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லையாகையால் மீண்டும் தனி நபர்களுக்கு உடைமை இருக்கும்படியாக கொஞ்சம் கொஞ்சம் மாற்றியமைத்திருக்கிறார்கள்.



இப்பொழுதிருக்கும்படியான சட்டம் பல பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் ஏழை அரிசனங்கள், குடியிருப்பு என்னும்படியாக ஒரு குடிசை போட்டிருப்பார்கள். ஆனால் அதில் இருப்பதற்கு உரிமை கிடையாது. சட்டத்தை நாம் செய்திருக்கிறோமே தவிர மக்களுக்கு அது பரிபூரணமாக உபயோகப்படும்படியான நிலையில் அதை நாம் 'ஃபாலோ' செய்யவில்லை. ஆகவே, விவசாயத் தொழிலாளர்கள் அவர்கள் எந்த இடத்திலே வேலை செய்தாலும்கூட அவர்களுக்கு வீடு கட்ட வசதி, படிக்க வசதி ஆகியவற்றைச் சர்க்கார் செய்து தர முன் வரவேண்டும். எந்தெந்தப் பண்ணையிலே வேலை செய்கிறார்களோ அங்கே அவர்களுக்கு குடியிருப்பு வசதிகள், வீட்டு வசதி, தொழில்கள் செய்யும்படியான வாய்ப்பு ஆகியவற்றை இன்னும் இரண்டு வருஷங்களுக்குள்ளாக நிச்சயமாக செய்து தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அடுத்த இரண்டு வருஷ காலத்திற்குள்ளாக 'காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' முறைப்படி யாருக்கு பூமி சொந்தம், எப்படி எடுத்துக்கொள்ள முடியும் என்பனவற்றை முடிவு செய்ய வேண்டும். உழுபவனுக்கு உச்சவரம்பு கட்டியிருக்கிறது. ஆனால், எந்த அளவுக்குக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறோம் என்று பார்த்தால், உழைக்கும்படியான ஒருவன் உச்சவரம்பையும் மீறி, இன்னொருவரிடத்திலிருந்து 5 ஏக்கர், 4 ஏக்கர் என்று பெற்று நிலச் சொந்தக்காரர்களைவிட அதிக அளவு சௌகரியம் அடைவதை இந்தச் சட்டத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அப்பேர்ப்பட்ட நடுத்தரகர்களை நீக்கிவிட்டாலே நாம் நிலச் சீர்திருத்தத்தைப் பரிபூரணமாக சீக்கிரத்திலே கொண்டு வந்திருப்போம். அதை இரண்டு வருஷத்திற்குள்ளாக நிறைவேற்ற வேண்டும் என்பதே என்னுடைய வேண்டுகோள். நாம் செய்யும் சட்டம் மக்களுக்குப் பயன்படும் வகையில் செய்து, உற்பத்திக்குத் தகுந்தமாதிரி, விவசாயிகளுக்கு லாபகரமான விலை இருக்கவேண்டுமென்று கோரி மசோதாவை நான் வரவேற்கிறேன்

***மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இந்தச் சட்டம் நில உச்சவரம்புச் சட்டத்தை நீடிப்பது அல்ல. நில உச்சவரம்பின் ஒரு பகுதியிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வரவேற்றுப் பேசிய உழைக்கின்றவர்களுக்கு ஒரு உச்சவரம்பு என்ற கருத்தை உள்ளடக்கிய ஒரு பகுதியை மட்டும் நீடிப்பது என்பதுதான் இந்தச் சட்டத்தின் குறிக்கோள். இந்தச் சட்டத்தை காலதாமதம் ஆக்கிக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்குத் தெரியும் இதைப்பற்றி. நாங்கள் எத்தனைமுறை கேட்டிருப்போம், ஏன் காலதாமதம் என்று கேட்டுக் கொண்டேயிருந்தோம். இந்த அரசு பதவியேற்று, இதை உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்று முயற்சித்து அதற்கான திட்டங்கள் உருவாகி ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. 'காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' என்பதைத்தான் நாம் சிந்தித்துக்கொண்டிருக்கின்றோம். இதில் முக்கிய பகுதியாக ஒருமுகப் படுத்தும்பொழுது சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இவற்றை

புதிய பிரிவுகள், கருத்துக்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்று திட்டக் குழு கருதி வருகிறது. இந்தக் கருத்துக்களைப் பரிசீலித்து நாம் புதிய சட்டத்தைச் செய்யவேண்டிய ஒரே காரணத்தினாலே தான் இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அரசு இப்பொழுது இரண்டு ஆண்டுகள் என்று கூறினாலும்கூட அதற்கிடையிலே சட்டங்களைக் கொண்டு வர எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சட்டம் அரசமைப்புப்படி செல்லுமா, செல்லாதா, ஏதோ ஒரு தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று சுதந்திரா கட்சியில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்தச் சட்டத்திற்கும் அந்தக் கருத்துக்கும் பொருத்தம் இல்லாவிட்டாலும் சட்ட விளக்கத்தை நான் தர ஆசைப்படுகிறேன். அரசியலமைப்பை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதற்குள்ளே சட்டங்களை யோசிக்க வேண்டும். அதற்கு மாறாகச் செல்லுவோமானால் உயர்நீதி மன்றம், தலைமை நீதிமன்றம் சுட்டிக்காட்டும். சுட்டிக்காட்டிய காரணத்தாலேயே அந்தக் கருத்துக்களையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது கட்டாயமல்ல, ஜனநாயகத்தில். ஜனநாயகம் பிரஜைகள் கூட்டு. அதற்கு மாறாக அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென நாட்டு மக்கள் கூறுவதற்கு உரிமை உண்டு. அதை எடுத்துச்சொல்ல பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு. மத்திய அரசும் அலசி வருகிறது. கொடுக்கப்பட்டிருக்கும் சட்டமும் அவர்கள் கூறும் பொருள் தருமா, தராதா என்பது சர்ச்சைக்குரிய பிரச்சினை. ஆனால் இந்தச் சட்டம் தீர்ப்புக்குக் கொண்டுவரப்படவில்லை என்று மட்டும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் இப்படிப்பட்ட பாதுகாப்பு தர வேண்டுமென்ற கருத்தைச் சுதந்திரா கட்சியும் ஆதரித்து இருக்கிறது. சுதந்திரா கட்சியினுடைய தலைவரவர்களே முதன்முதல் தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய இந்தச் சாகுபடிதாரர்களின் குறைகளை எல்லாம் தீர்க்க வேண்டுமென்று அவர்களாகவே சட்டம் கொண்டு வந்திருக்கிறார். அதற்குப் பிறகுதான் இந்த கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் அக்ட் எல்லாம் கொண்டு வரப்பட்டன. ஆனால், அந்தச் சட்டத்திற்கும் இன்றைக்குள்ள சட்டத்திற்கும் சம்பந்தமில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டம் 'சீலிங் ஏரியா ஃபார் கல்டிவேடிங் டெனன்ட்ஸ்' என்ற பிரிவை நீடிப்பதாகும். அது சம்பந்தமாக முழுமையான சட்டம் வரும்வரை இந்தப் பகுதி தான் இருக்க வேண்டுமென்ற ஒரு எண்ணத்தால் அது கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். மற்றபடி சாகுபடிதாரர்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் சட்டத்திலிருந்து பிரச்சினை வருகிறது. தஞ்சை மாவட்டத்திலேயிருந்து பிரச்சினை வந்தது என்றெல்லாம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். சட்டம் என்று கொண்டு வந்து ஒருவருடைய உரிமையைக் குறைத்து ஏராளமான பேர்களுக்கு உரிமையை அதிகமான அளவுக்குக் கொடுப்பதுதான்



இந்த சட்ட மன்றத்தினுடைய வேலை. அதற்காகத்தான் மக்கள் நம்மை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். எல்லோரும் ஏற்றுக் கொண்ட ஒரு சட்டத்தை நாம் கொண்டு வந்தால் அதனாலே சில பேருக்குப் பாதகம் ஏற்படுகிறது. அதை எதிர்த்து சிலர் கிளர்ச்சிகள் செய்கிறார்கள். அவைகள் எல்லாம் அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு ஏதாவது குறைகள் இருக்குமானால் அதைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் தயங்காது என்பதை மட்டும் இந்த சந்தர்ப்பத்திலே கூறி இந்த மசோதாவை எல்லோருக்கும் நன்மை செய்யக்கூடிய மசோதா என்ற முறையிலே எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இரண்டாவது பிரிவு, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That the Madars Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill, 1967 (L.A. Bill No. 24 of 1967) be passed".

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

### 1967-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய-அறக்கட்டளைகள் திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா 25/1967).

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** "தமிழ்நாடு 1967-ம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் (திருத்த) மசோதா* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

அவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக் கட்டளைகள் சட்டத்திலே பல சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்ற நோக்கம் இருந்தாலும் உடனடியாக இந்தச் சிறு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்பொழுது இந்த அவையின் முன் இந்தத் திருத்தம் வைக்கப்பட்டிருக்கிறது:

1959-வது ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 61-வது பிரிவின் கீழ் ஆங்காங்கு இருக்கிற துணை ஆணையர்களுக்கு சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதன்படி நிதிகள் இருக்கிற கோவில்களிலும் மற்ற அறநிலையங்களிலும் இருக்கிற உபரி நிதியை சிலபல வகைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று

* 27—1.—1967 தேதியிட்ட தமிழக வெளியீடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 நவம்பர் 28

இருக்கிறது. மற்றொரு நிதி ஆணையாளரிடத்திலே இருக்கிறது. பொதுநல நிதி என்று ஒரு நிதி வைக்கப்பட்டிருக்கிறது. அவைகள் அறநிலையங்களிலிருந்து 'ஜெனரல் பூல்' என்ற வகையிலே எடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட சில காரியங்களுக்கு மட்டும்தான் செலவழிக்க வேண்டுமென்று 97-வது பிரிவு கூறுகின்றது. அதன்படி திருப்பணி, காப்புப்பணி போன்ற பணிகள் தேவைப்படும் கோவில்களுக்கும், அவற்றின் கட்டடங்கள், வண்ண ஓவியங்கள் முதலியவற்றின் பாதுகாப்பிற்கும் மட்டுமே இந்த நிதியை பயன்படுத்த வேண்டுமென்ற உரிமையை வழங்கியிருக்கிறது. சாதாரணமாக கோவில்களிலும் பொதுநல நிதிக்கு மதிப்பிடப்படுகிற அளவுக்கு நிதி வந்து சேருகிறது. அதைத்தவிர வேறு யாரும் நன்கொடையாகத் தந்தாலும் அதுவும் இந்தப் பொது நிதியிலே சேருகின்றது. குறிப்பிட்ட சில வகைகளுக்கும் மட்டும் தான் இந்த நிதியிலிருந்து செலவழிக்க வேண்டுமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் சில அறநிலையங்களின் சார்பாக இருக்கிற பணத்தை கல்வித் துறைக்கு செலவழிக்கப்படுகிறது. குற்றாலத்தில் உள்ள பராசக்தி மகளிர்க் கல்லூரி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பூம்புகார் பண்பாட்டுக் கல்லூரி போன்ற கல்வி நிலையங்கள் இத்தகைய உபரி நிதியின் உதவியுடன் இந்து சமய அறக்கட்டளைகளால் நிறுவப்பட்டிருக்கின்றன. அதற்கு சமய நிலையங்களிலிருந்து கொடுக்கப்படுகிற உபரி நிதி போதுமான அளவாக இல்லை. ஆணையாளர் பொதுநல நிதியிலிருந்து பராசக்தி மகளிர்க் கல்லூரி, தஞ்சாவூரிலுள்ள பூம்புகார் பண்பாட்டுக் கல்லூரி ஆகிய கல்லூரிகளுக்குச் செலவழிக்கச் சட்டத்திலே இடம் இல்லை. ஆகவே 66(1)-வது விதியின் கீழ் துணை ஆணையருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த உரிமையை ஆணையருக்கும் வழங்குவதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அந்த வகையில் பொது நிதியிலிருந்து கல்வி நிலையங்கள் மற்றவைகளுக்கும் வழங்குவதற்குப் பயன்படும் என்ற வகையில் தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 66-வது பிரிவின்படி துணை ஆணையர் எந்தெந்த வகைகளுக்கு செலவழிப்பதற்கு உரிமைகள் இருக்கின்றனவோ அதே உரிமைகள் அதே போன்று அந்த நிதியிலிருந்து எடுத்து செலவழிக்கும் உரிமைகள் ஆணையருக்குத் தரவேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு திருத்தங்களின் முக்கிய நோக்கம் அந்தந்த கோவில்களின் செலவுகள் போக மிச்சம் இருக்கிற தொகையை இது போன்ற நோக்கங்கள் நிறைவேறும் வகையில் வேறு பல கோவில்களை பழுது பார்த்தால், கல்வி நிலையங்களுக்குப் பொது நிதியிலிருந்து உதவிபுரிதல், போன்ற செலவுகளுக்கு வழி வகுக்க வேண்டுமென்பதுதான். உதாரணமாக, தஞ்சை பெரிய உடையார் கோவிலை எடுத்துக்கொண்டால், பெரிய உடையார் கோவிலை ராஜராஜசோழன் எழுப்பினானென்றாலும் அதற்கென்று ஒரு குழி நிலம் கூட இல்லை. ஆகவே, இன்றைக்குப் போதுமான நிதி வசதி இல்லாத அவ்வளவு பெரிய கோவிலை பராமரிக்கும் பொறுப்பு அது



1967 நவம்பர் 28] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சரித்திரப் பிரசித்தி பெற்ற கோவிலானதால் நமக்கு இருக்கிறது. அதே போன்று வரலாற்றுச் சிறப்பு கொண்ட கங்கை கொண்ட சோழபுரத்திலே இருக்கிற கோவிலையும் சரிப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இவ்வளவு சரித்திரப் பிரசித்தி பெற்ற கோவில்களாக இருந்தாலும் அதற்கென்று தனி சொத்து எதுவும் இல்லாத நிலையில் அவைகளைப் பராமரிக்க வேண்டி இருக்கிறது. ஆகவே, அந்தக் கோவில்களை எல்லாம் பராமரிக்கவும், வரலாற்று சிறப்பு மிக்க கோவில்களை நிர்வகிக்கவும், பூம்புகார் பண்பாட்டுக் கல்லூரி, பராசக்தி கல்லூரி போன்ற கல்லூரிகளை உயர்நிலைப் படுத்தவும் போதுமான நிதிவசதியைப் பெற, இந்தப் பொது நல நிதியிலிருந்து நிதியை எடுத்துக்கொள்ள வழிவகுக்கும் இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த சட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்து நான் இந்த அமைச்சரை பாராட்டுகிறேன். இந்த மாதிரியான ஒரு சீர் திருத்தம் நீண்ட நெடுங்காலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய ஒரு பொறுப்பு எல்லோராலும் உணரப்பட்டுள்ளது. அதற்காக இப்பொழுது அறநிலையங்களுக்காக அமையப்பெற்றிருக்கிற சட்டத்திலே திருத்தத்தைக் கொண்டு வந்து அதற்கு வழி காண்பது மிகவும் சிறந்த கருத்தாக இருக்கிறது. என் கன்னியாகுமரி பகுதியிலே தேவஸ்வம் போர்டில் தெய்வகுமரி மகளிர் கல்லூரி ஒன்று துவக்கப் பட்டிருக்கிறது. அதை இப்பொழுது உயர் அளவிலே பெருக்க அங்கே இருக்கிற பொது மக்களால் சுமார் 10½ ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவஸ்வம் போர்டார் தமக்குப் பண வசதி இல்லையென்ற காரணத்தினால் முழு நிலத்தையும் பொது மக்களே வாங்கியளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். தேவஸ்வம் போர்டாருக்கும் அந்தக் கல்லூரியை நடத்துவதில் பல கஷ்டங்கள் இருந்தன. அதை உணர்ந்த பொது மக்கள் தாங்களே நிலத்தை தருகிறோம் என்று கூறினார்கள். நிலத்தைக் கொடுப்பதற்குப் பல கஷ்டங்கள் இருந்தன. அந்தப் பகுதியிலே நிலத்தின் விலையும் அதிகமாக உயர்ந்திருக்கிற காரணத்தால் போதிய அளவு நிலம் வாங்கி அந்த மகளிர் கல்லூரிக்குக் கொடுப்பதற்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆதலால் நாங்கள் ஏதோ 10½ ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறோம். இம்மாதிரியான நல்ல காரியங்களுக்கு எஞ்சிய பகுதியை தேவஸ்வம் போர்டு கொடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்படுவதற்கு சட்டம் இருந்தாலும் அது பெரிய உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கல்லூரி குழித்துறை பகுதியிலிருந்து ஏனைய பகுதிக்கு மாற்றப்படவேண்டும் என்று கூட ஒரு முயற்சி முன்பு நடந்தது. அது இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது என்று கேட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி உள்ளவனாக இருக்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள பொது மக்கள் இந்த ஒரு நற்பணிக்காக நிலங்களை

வழங்கியிருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் முறையில் அந்தக் கல்லூரி அந்தப் பகுதியிலேயே அமைவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யும் என்று எதிர்பார்க்கிறேன். ஆகையால் இந்த சிறப்பான காரியங்களைச் செய்வதற்காக இத்தகைய ஒரு மசோதாவைக் கொண்டு வந்ததற்காக மறுமுறையும் அமைச்சர் அவர்களைப் பாராட்டி, இந்தச் சட்டத்தைக்கொண்டு பெண்கள் கல்விக்கு அதிகமாக ஊக்கம் அளிப்பதற்கு அரசு முன்வர வேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்திலே கூறி, அமர்கிறேன் வணக்கம்.

DR. H. V. HANDE: Sir, while welcoming this measure I only want to refer to one or two salient points. Most of the funds collected by the Hindu Religious and Charitable Endowments Board have been contributed by persons who have great faith in the Hindu religion and who go to the temples. They want that some sort of organisation must be there primarily to perpetuate faith in the Hindu Religion and the worship of the idols and gods in those temples. Now, there is an apprehension among certain sections of the Hindus that the money thus collected by the Hindu Religious and Charitable Endowments Board may be diverted to certain other purposes which were not in the minds of the people who had allotted those funds. I only want to take this opportunity to express the feelings of those Hindus that the money should be primarily used for the benefit of the Hindus and also for the renovation of the large number of temples which are in a very dilapidated condition. The rules to be framed under this Bill should taken into consideration the above feelings of the Hindus. That is an important thing. Out of the surplus funds a number of colleges can be started but they should propagate Hindu culture. In this connection, I want to point out that recently it was suggested in the Lok Sabha that the funds contributed by the Hindus could be pooled together and used for the benefit of all religions. This is not what those lakhs and lakhs of people who have contributed funds have intended. So, I am now voicing the feelings of those people outside that whatever measures we take, we should bear in mind that those funds are primarily intended for propagating the Hindu religion and culture in a systematic manner. With these words, I conclude my speech.

* மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் திரு. ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்துக்கு சிறு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அவர் நினைத்தபடி இந்தச் சட்டம் அமைந்திருக்கவில்லை. இந்தச் சட்டத்தின் 66-வது பிரிவிலே கோவில்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தை எந்தெந்த வழிகளில் பயன்படுத்தலாம் என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அந்த வழியைவிட்டு இந்தத் திருத்த மசோதா கொஞ்சம் கூட மீறவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிய கருத்துக்களெல்லாம் 66-வது பிரிவிலே இருக்கின்றன. அந்த வருமானத்





தையும் இந்த மசோதா எதுவும் செய்யப் போவதில்லை. அதற்கு அப்பாற்பட்டும் 97-வது பிரிவிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. கோவில்களை நிர்வகிக்கக்கூடிய அற நிலைய இலாகாவை பராமரிக்க பீஸ் என்ற முறையிலே வசூலிக்கப்படுகிறது. அதிலே மிச்சப்படுகிறது. அந்த பீஸெல்லாம் சேர்ந்து ஒரு காமன் பண்டாக இன்றைக்கு இருக்கிறது. அந்த காமன் பண்டில் மீதி இருந்தால், அந்தப் பகுதியை, அந்தத் தொகை அப்படியே இருக்கலாகாது, அதையும் மக்களுக்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பது தான் நோக்கம். 66-வது பிரிவில் கூறப்பட்ட வகைகளுக்காக பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதுதான் நோக்கம். மற்றபடி கோவில்களுக்குள்ள வருமானத்தை, பக்தர்கள் கொடுக்கக்கூடிய வருமானத்தை வேறு முறையிலே செலவழிக்க வேண்டும் என்பது அல்ல இந்தத் திருத்த மசோதாவின் குறிக்கோள். 66-வது பிரிவிலே கூறப்பட்டிருக்கும் காரியங்களுக்காக 97-வது பிரிவிலே வரக்கூடிய பணத்தையும் செலவழிக்கலாம் என்பது தான் இதிலே உள்ள ஒரு சிறு திருத்தம். ஆகவே, எந்த ஒரு முறைகேடான செயலும் ஏற்பட்டுவிடாது. சும்மா இருக்கக்கூடிய தொகையையும் மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன அந்தக் காரியங்களுக்காகத்தான் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் நோக்கம். கல்லூரி தொடங்கப்படப் போகிறது என்றாலும், கல்லூரி தொடங்கப்பட்டு, அந்தக் கல்லூரியில் எந்தெந்த முறையிலே இந்து சமுதாயத்தை வளர்க்க வேண்டும் என்பதும் 66-வது பிரிவிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. காமன் குட் பண்டில் செலுத்தப்படக்கூடிய பணத்தைக்கொண்டு கல்லூரி திறக்கப்பட்டால் அந்தக் கல்லூரியில் 66-வது பிரிவிலே கூறப்பட்டபடி மத சம்பிரதாயமும் பாதுகாக்கப்படும் என்ற விளக்கத்தை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்கும் வாயிலாக சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்பொழுது கோவில்களுக்கு ஏராளமான வருமானம் வந்து கொண்டுதான் இருக்கிறது. கோவில்களுக்கு வருமானம் பெருகிக் கொண்டு வருகிறது. மக்களுக்கு மத நம்பிக்கையிலே, கடவுள் நம்பிக்கையிலே எவ்வளவு வளர்ச்சி வந்திருக்கிறது என்பதை நாம் குறைவுபடுத்த முடியாது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த முற்போக்கான திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன். கல்விக்காக இந்தப் பணத்தை செலவழிக்கலாம் என்பது மிகமிக முற்போக்கான அம்சம். ஆனால், ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சில கோவில்களில் பணம் சேர்ந்து கொண்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கிற சில கோவில்களில் லட்சக்கணக்கான ரூபாய் சேர்ந்துகொண்டிருக்கிறது. அங்கே உள்ள சாதாரணமான டிரஸ்டிகள் பெரிய கோவில்களுக்கு என்று சொல்லிவிட்டு ரூ. 50,000, 60,000 'டைவெர்ஷன் அப் பண்டு' என்று கேட்டு வாங்கிக்கொள்கிறார்கள். எந்தப் பகுதியில் கோவில் வருமானம்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 நவம்பர் 28

இருக்கிறதோ அந்தப் பகுதியிலே பூரணமாக செலவழிக்கப்பட வேண்டும். சில டிரஸ்டிகள் அவர்களுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி, கோவில்களை ரெனேவேஷன் பண்ணுகிறேன் என்று சொல்லி வேறு விதமாக பிரயோசனப்படுத்தி விடுகிறார்கள். இப்பொழுது என்னுடைய வேண்டுகோள் இது தான். இருக்கிற கோவில்களை அப்படியே பாதுகாத்துக்கொண்டிருப்பதே போதும். புதிது புதிதாக அதிகமாகக் கட்டிக்கொண்டிருக்க வேண்டாம். நான் பொதுமக்களின் பக்தியைக் குறைத்துச் சொல்லவில்லை. மக்களுடைய அறிவு வளர வேண்டியது அவசியம்.

இன்னொரு விஷயத்தை மட்டும் சொல்கிறேன். இந்து மத சம்பந்தப்பட்ட காரியத்திற்காக மட்டும், இந்து மதத்திற்காக மட்டும் இதைச் செய்யவேண்டுமென்பது அல்ல. அனாதை ஆசிரமத்திற்கு உதவலாம். இந்துக்கள் அனாதைகள் மட்டும் இருக்க வேண்டும் என்பது அல்ல, கிறிஸ்துவ அனாதைகளும் இருக்கலாம், முஸ்லீம் அனாதைகளும் இருக்கலாம். நான் சமீபத்தில் ஒரு விஷயத்தைக் கேட்டேன். என்னுடைய தொகுதியிலே பன்னாரி மாரியம்மன் என்ற ஒரு கோவில் இருக்கிறது. அதற்கு ரூ. 2½ லட்சம் வரை வருமானம் வருகிறது. அது சாதாரணமான கோவில் தான். பக்கத்தில் கஸ்தூரிபாய் நிகேதன் என்ற அனாதை ஆசிரமம் இருக்கிறது. 100-க்கு 82 பேர்கள் இந்துக்கள். ஒரு முஸ்லீம் அனாதை இருந்தால் அந்த அனாதை ஆசிரமத்திற்கு உதவி செய்யக்கூடாது என்று சொல்வது நன்றாக இருக்காது. நான் அமைச்சர் அவர்களிடம் வேண்டிக்கொள்வது இது தான். அனாதை ஆசிரமங்களுக்கு உதவி அளிக்கும்பொழுது, அதிலே முக்கியமாக இந்துக்கள் இருக்கிறார்களா என்று பார்த்துக்கொண்டால் போதும். 100-க்கு 75 பேர்கள் இந்துக்களாக இருக்க வேண்டும், ஏனென்றால் இந்து ரிலிஜியஸ் என்டவ்மெண்டு என்று சொல்லப்படுகிறது. மற்றபடி இதரர்களும், அரிஜனங்களும் முன்னேற வேண்டும் என்று சொல்கிறோம். அரிஜனங்களை கோவில்களுக்குள் விடவேண்டும் என்று சொல்கிறோம். பாக்கி இருக்கும்படியான இரண்டொரு சமூகத்தினர் வந்திருந்தாலும் அதற்காக உதவித் தொகையை நிறுத்திவிடக்கூடாது என்பது தான் என்னுடைய வேண்டுகோள். பன்னாரி மாரியம்மன் கோவிலுக்கு சுமார் 2½ லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. உயர்நிலைப் பள்ளி மட்டுமல்ல, கல்லூரி மட்டுமல்ல, விவசாய அபிவிருத்திக்காக, காட்டு இலாகா அபிவிருத்திக்காக கல்லூரி ஏற்படுத்தலாம். விவசாயத்தை எந்த முறையில் அபிவிருத்தி செய்வது என்பது தான் முக்கியம். விவசாயக் கல்லூரி ஏற்படுத்தலாம் அந்த இடத்திலே என்று ஒரு தீர்மானத்தைப் போடவேண்டும். அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். பராமரிப்பு செலவு போக மிச்சம் இருப்பதை, காமன் குட் பண்டில் இன்னும் மிச்சம் இருக்கும்படியான பணத்தை கல்வி வசதிக்காக, கல்லூரி வசதிக்காக செலவு செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அனாதை ஆசிரமங்களுக்கு உதவி கோரி



1967 நவம்பர் 28] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

விண்ணப்பங்கள் வந்தால், அந்த நிலையில் தாராளமாக உதவி செய்ய முன்வரவேண்டும். அதை உடனடியாக அரசினர் செய்வார்கள் என்று நம்புகிறேன். அப்படிச் செய்தால் இந்த அரசு எவ்வளவு தூரம் மக்களுடைய நலனுக்காக, மக்களுடைய அறிவு வளர்ச்சிக்காக இந்தப் பணத்தையெல்லாம் பிரயோசனப்படுத்து கிறார்கள் என்ற நிலையிலே மக்கள் இதை வரவேற்பார்கள் என்று பி.ப. 1.00
நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் வரவேற்றுக் கருத்துக்களை வழங்கியதற்காக மகிழ்ச்சியடைகிறேன், அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மசோதாவை வரவேற்று, ஆனால் சில திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும், கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். இந்த மசோதா கன்னியாகுமரியை உள்ளடக்கி வராது. அங்கேயிருக்கின்ற கோவில்கள், தர்மஸ்தாபனங்கள் பொறுத்தவரையில், தேவஸ்வம் போர்டு இருக்கிறது. அதற்கென்று தனிச் சட்டமும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைகளுக்கு அதில் இடம் இல்லாவிட்டால், அதற்கும் திருத்தம் கொண்டு வந்து, அந்த நோக்கத்திற்கு அதிலும் இடம் செய்யலாம். அது எதிர்காலத்தில் தக்க முயற்சி எடுப்பதற்குக் காரணமாக இருக்கும். ஆனால் இப்பொழுது அவைமுன் இருக்கும் மசோதா, கன்னியாகுமரி நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களுக்கும், அங்கெல்லாம் உள்ள நிலையங்களுக்கும் தான் பொருந்தும் என்று எடுத்துத் தெரிவிக்க விரும்புகிறேன். எந்தெந்த வகைகளுக்குச் செலவழிக்க வேண்டும் என்பது பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட அத்தனை நோக்கங்களுக்கும்தான் அது பயன்படுத்தப்படுகிறது. மன்றத்தின் உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக, எந்த எந்த வகைகளில் செலவழிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறேன்.

(*a*) The grant of aid to any other religious institution which is poor or in needy circumstances ;

(*b*) the grant of aid to any religious purpose connected with the Hindu religion ;

(*c*) the propagation of the religious tenets of the institution ;

(*d*) the recitation of Divya Prabhandham and Thevaram and the like ;

(*e*) the establishment and maintenance of schools for the training of archakas, adyapakas, vedaparayanikas and othuvars and for the study of Divya Prabhandhams, Thevaram and the like including the study of Indian languages for that purpose ;

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1967 நவம்பர் 28

(f) the establishment and maintenance of asylums for persons suffering from leprosy; provision for the study of Hindu religion, philosophy or sastras or for imparting instruction in Hindu temple architecture ;

(g) the establishment and maintenance of educational institutions where instruction in the Hindu religion is also provided;

(h) promotion of fine arts and architecture ;

(i) the establishment and maintenance of orphanages for Hindu children ;

(j) the establishment and maintenance of poor homes for destitute, helpless and physically disabled persons; and

(k) the establishment and maintenance of hospitals and dispensaries for the benefit of pilgrims

என்று பொதுவாக, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட காரியத்திற்கு ஒப்ப, அறப்பணிகளுக்குச் செலவழிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகைகளில் ஆணையர் செலவழிக்கலாம் என்று வகைசெய்ய இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மேலும், இப்படிச் செலவழிக்கப்படுவது, இந்து மக்கள் களுக்குத்தான் என்றும் கொள்ளக் கூடாது. 90 சதவிகிதம் இந்துக்களாக இருந்தாலும், கிறித்துவ அறநிலையப் பணிகளும் இருக்கின்றன. பல்வேறு கல்வி நிலையங்களும், மற்றவைகளும் நடத்தப்படுகின்றன. அவை எல்லா சமயத்தினருக்கும் பயன் படுகின்றன. சமயச் சார்பற்ற பணிகள் ஆற்றுகிறார்கள். வெங்க டேஸ்வரா கல்லூரியிலும்கூட, திருப்பதியில் பல்வேறு வகை சமயத்தினருக்கும் பயன்படும் வகையில்தான் அமைத்திருக் கிறார்கள். ஆகவே, அந்த வகையில் எல்லோருக்கும் பயன்படும் வகையில்தான் செய்யப்படுகிறது.

ஏற்கனவே துணை ஆணையருக்குக் கொடுக்கப்பட்டிருந்த உரிமை இப்பொழுது ஆணையருக்கும் வழங்கப்படுகிறது. அதற்கு வகை செய்கிறது இந்த மசோதா. மேலும் நிர்வாக நிதியிலே பல லட்சக்கணக்கான ரூபாய்கள் தேங்கிக் கிடக்கின்றன. மேலே சொல்லப்பட்ட நல்ல காரியங்களுக்கு அந்தத் தொகையைச் செலவழிக்க இந்த மசோதா வகை செய்கிறது. இன்னின்ன வகை களுக்குச் செலவழிக்கலாம் என்று அரசாங்கம் ஆணையிட்டால், அதன் பேரில் ஆணையர் அந்த நிதியிலிருந்து தொகைகளைச் செல வழிக்க, திருப்பிவிடலாம் என்கிற அளவுக்கு இந்த திருத்த மசோதா இடம் கொடுக்கிறது.

கனம் எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன இன்னொரு கருத்து, கூடுமானவரையில் பணத்தை அந்த அந்தப் பகுதியிலேயே இருக்கும் மக்களுக்குப் பயன்படும் வகையில் செலவழிக்கப்பட வேண்டும் என்பது. அந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் உத்தரவுகள் போடப்படும்.



1967 நவம்பர் 28] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இந்த திருத்த மசோதாவை ஆதரித்த நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, மன்ற உறுப்பினர்கள் இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2, முதல் பிரிவு, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1967-ம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா 25/1967) நிறை வேற்றப் படவேண்டும்"
என்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, மசோதா சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மசோதா சட்டமாக ஆக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியது.

## 8. அரசினர் தீர்மானம்.

### 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் நான்காவது விவர அட்டவணைக்குத் திருத்த வரைவு

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத் தின் விவர அட்டவணையைச் சேர்ந்த 6-வது விதியின் (1-A) துணை விதியில் கண்ட (a) பகுதியில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற் கண்ட சட்டத்தின் 305-வது பிரிவின் (1) உட்பிரிவின்கீழ் செய்ய எண்ணியுள்ள கீழ்க்கண்ட திருத்த வரைவை ஏற்றுக்கொள்ள வேண்டும்"
எனக் கோருகிறேன்.

### வரைவு

தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையின் விதி களில் கீழ்க்கண்ட திருத்தம் தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் இதனால் செய்யப்படுகிறது. மேற்படி சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) துணைப் பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங் களைக் கொண்டு அத்திருத்தம் செய்யப்படுகிறது.

[திரு. மா. முத்துசாமி] [1967 நவம்பர் 28

## திருத்தம்

மேற்படி விதிகளிலே 8-வது விதியின் (1-A) துணைவிதியைச் சேர்ந்த (a) பகுதியில் "நான்கு அரையாண்டுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆறு அரையாண்டுகள்" என்னும் சொற்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920), 4-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 8-வது விதியின், (1-A) துணைவிதியைச் சார்ந்த (a) பகுதியில், "நான்கு அரையாண்டுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆறு அரையாண்டுகள்" என்னும் சொற்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து, சில சொற்கள் கூற விரும்புகிறேன்.

மேற்படி சட்டத்தின் 4-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 8-வது விதியின் (1-A) துணைவிதியின், (a) பகுதியின்படி, அரசாங்கம் தகுந்த காரணத்திற்காக அவ்வப்போது ஆணை பிறப்பிப்பதன் மூலம் வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணியை ஒத்தி வைக்கலாம் அல்லது வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணி குறித்த நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கலாம். இவ்வாறு ஒத்திவைப்பது அல்லது நிறுத்திவைப்பது ஒரு சமயத்தில் ஓர் அரையாண்டிற்கு அல்லது அதற்கு மேற்பட்ட அரை ஆண்டுகளுக்குச் செய்யப்படலாம். ஆனால், எந்த நேர்விலும் 4 அரையாண்டுக்கால அளவுக்கு மேல் இவ்வாறு ஒத்திவைப்பது அல்லது நிறுத்திவைப்பது கூடாது. மேலும், அவ்வாறு ஒத்தி வைப்பது அல்லது நிறுத்தி வைப்பதனால் வரி விதிப்புப் புத்தகங்களைப் பின்னர் பொதுவாகத் திருத்தியமைப்பது பாதிக்கப்படக் கூடாது.

1—4—1966 முதற்கொண்டு செய்யப்பட்ட ஐந்தாண்டுச் சொத்து வரிவிதிப்பு மாற்றம் மிகவும் அதிகமானது என்றும், தன் இச்சையாகச் செய்யப்பட்டது என்றும், இந்த வரி விதிப்பு மாற்றம் செயலுக்குக் கொண்டு வரப்படுவது ஒத்திவைக்கப்படவேண்டும் என்றும் நகராட்சிகள் பலவற்றிலுள்ள வரி செலுத்துவோரிடமிருந்தும், சில நகராட்சி மன்றங்களிலிருந்தும் பல முறையீடுகள் அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளன. எனவே, 30—9—1967 வரை பல்வேறு நகராட்சிகளில் வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணி ஒத்திவைக்கப்படவேண்டுமென்றும், அது குறித்த நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

தற்போது செயலிலுள்ள வரி விதிப்பு மாற்ற முறையில் பல ஏற்றத்தாழ்வுகளும் குறைவான வரிவிதிப்புகளும் இருப்பது தெளிவாகியுள்ளது. சொத்துவரி விதிப்பு முறையில் புதியதொரு முறை பரிசீலனையிலிருந்து வருகிறது. வரி விதிப்பு நியாயமான அடிப்



1967 நவம்பர் 28] [திரு. மா. முத்துசாமி]

படையில் இருக்கவேண்டுமென்பதே இதன் குறிக்கோளாகும். எனவே, நகராட்சிகளில் வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணியை 31—3—1969 வரையில் ஒத்தி வைப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இவ்வண்ணமே 1—4—1967, 1—4—1968 அன்று வரி விதிப்புத் திருத்த வேலை மேற்கொள்ளப்படவிருந்த 18 நகராட்சிகளில் வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணியை 31—3—1969 வரை ஒத்திவைத்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 1—4—1966 அன்று வரி விதிப்புத் திருத்த வேலை மேற்கொள்ளப்படவிருந்த 15 நகராட்சிகளில், இத்திருத்த நடவடிக்கைகளை 31—3—1968 வரையில் நிறுத்திவைத்து, அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. ஏனெனில், வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணியை அல்லது வரி விதிப்புப் புத்தகங்களைத் திருத்தியமைப்பதற்கான பணி குறித்த நடவடிக்கைகளை ஒரு சமயத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அரையாண்டுக் காலத்திற்கு, ஆனால் நான்கு அரையாண்டுகளுக்கு மேற்படாத கால அளவுக்கு ஒத்திவைக்க அல்லது நிறுத்தி வைக்க மேற்படி சட்டத்தின் 4-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 8-வது விதியின் (1-A) துணை விதியின் (a) பகுதியின்கீழ் அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. இந்த 15 நகராட்சிகளிலும் வரிவிதிப்புப் புத்தக திருத்த வேலை 31—3—1969 வரை ஒத்திவைக்கப்படவேண்டுமென அரசாங்கம் கருதுகிறது. இதற்கிணங்க, ஆறு அரையாண்டுக் கால அளவுக்கு வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைக்கும் பணியை ஒத்திவைக்க அல்லது வரி விதிப்புப் புத்தகங்களைப் பொதுவாகத் திருத்தியமைப்பது குறித்த நடவடிக்கைகளை நிறுத்திவைக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் தரும்வகையில் இவ்விதியைத் திருத்தக் கருதப்படுகிறது.

மேற்படி சட்டத்தின் 305-A பிரிவின்கீழ் இவ்விதியைச் திருத்துவதற்கான திருத்த வரைவு ஒன்று மாநிலச் சட்ட மன்றத்தின் இரு அவைகளின் முன்பும் வைக்கப்பட்டு அவர்களது ஒப்புதல் பெறப்பட வேண்டும். இத் திருத்தத்திற்கு ஒப்புதல் வழங்குமாறு இம் மன்றத்தினை நான் வேண்டிக் கொள்கிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. நாளை காலை 9 மணி அளவில் பிற்பகல்
பேரவைக் கூட்டம் மீண்டும் நடைபெறும். வணக்கம். 1-12

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

### 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

* 118. *Notification issued with G.O. Ms. No. 1586, Home, dated the 9th June 1967, making an amendment to Rule 289 of the Madras Motor Vehicles Rules*

*pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette Extraordinary, *dated the* 30*th March* 1940, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of Motor Vehicles Act,* 1939 (*Central Act IV of* 1939).]

119. *Notification issued with G.O. Ms. No.* 1421, *Rural Development and Local Administration, dated the* 4*th August* 1967, *accepting the resignation of Thiru K. Diraviam, I.A.S. as member of the Madras State Bhoodan Yagna Board with effect from the* 4*th August* 1967. [*Laid on the Table of the House under section* 28 (4) *of the Madras Bhoodan Yagna Act,* 1958 (*Madras Act XV of* 1958).]

120. *Notification issued with G.O. Ms. No.* 1841, *Home, dated the* 8*th July* 1967, *making certain amendments to the Madras Motor Vehicles Rules,* 1940, *published at pages* 1 *to* 40 *of the* Fort St. George Gazette Extraordinary, *dated the* 30*th March* 1940, *as subsequently amended.* [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act,* 1939 (*Central Act IV of* 1939).]

### B. Reports, Notifications and other papers.

* 14. *Notification issued with G.O. Ms. No.* 846, *Revenue, dated the* 4*th May* 1967, *making an amendment to the Indian Stamp Rules* 1925, *regarding the use of Court fee stamps for affixing on plain papers instead of using stamp papers under the Indian Stamp Act,* 1899 (*C. Act II of* 1899).

† 15. *The Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill,* 1967 *with annexure* (*L.A. Bill No.* 20 *of* 1967).

† 16. *The Madras District Municipalities (Second Amendment) Bill* 1967 (*L.A. Bill No.* 21 *of* 1967) *with annexure.*

‡ 17. *The Madras Sales of Motor Spirit Taxation (Amendment) Bill,* 1967 (*L.A. Bill No.* 22 *of* 1967) *with annexure.*

‡ 18. *The Madras General Sales Tax (Third Amendment) Bill,* 1967 (*L.A. Bill No.* 23 *of* 1967) *with annexure.*

‡ 19. *The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Bill,* 1967 (*L.A. Bill No.* 24 *of* 1967) *with annexure.*

20. *First Report of the Committee on Estimates on the action taken by the Government on the Recommendations of the Committee contained in the Report on the Industrial Estates.*

---

* Laid on the Table of the House on 27th November 1967.

† Despatched to Members on 25th November 1967.

‡ Despatched to Members on 26th November 1967.



## APPENDIX.

[*Vide* answer to Starred Question No. 488 at page 371.]

*A.*—

(*a*) Statement showing the number of Government Pleaders, Public Prosecutors and Assistant Public Prosecutors in the State is placed on the Table of this House.

(*b*) The Government Pleaders and Public Prosecutors are paid fees for the cases they conduct at the rates laid down under the Standing Orders governing them and under the Legal Practitioner's Fees Rules.

The Assistant Public Prosecutors and the Assistant State Prosecutors only, who are full-time Government servants, are paid monthly salary.

பதில்—

(அ). இம் மாநிலத்தில் உள்ள அரசாங்க வக்கீல்கள், அரசாங்க வழக்குரைஞர்கள், அரசாங்க உதவி வழக்குரைஞர்கள் ஆகியோரின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப் பட்டுள்ளது.

(இ) அரசாங்க வக்கீல்களுக்கும் அரசாங்க வழக்குரைஞர்களுக்கும் அவர்கள் நடத்துகின்ற வழக்குகளுக்கென கட்டணம் அளிக்கப்படுகிறது. வழக்குரைஞர் கட்டணங்களை முறைப்படுத்துகின்ற நிலை ஆணைகள் வழக் குரைஞர் கட்டண விதிகள் ஆகியவற்றின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வீதங் களில் அக்கட்டணங்கள் அளிக்கப்படுகின்றன.

அரசாங்க உதவி வழக்குரைஞர்களும் அரசாங்க உதவி வக்கீல்களும் மட்டுமே முழுநேர அரசாங்க ஊழியர்களாக உள்ளனர். அவர்களுக்கு மட்டுமே மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது.

## ANNEXURE.

Statement showing the number of Government Pleaders, Public Prosecutors and Assistant Public Prosecutors districtwise in the State :—

| Name of district. | Government Pleader. | Public Prosecutor. | Government Pleader-cum-Public Prosecutor. | Assistant Public Prosecutor. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| Chingleput .. .. | 1 | 1 | .. | 6 |
| North Arcot .. .. | .. | .. | 1 | 8 |
| South Arcot .. .. | 1 | 1 | .. | 7 |
| Salem .. .. | 1 | 1 | .. | 8 |
| Dharmapuri .. .. | 1 | 1 | .. | 3 |
| The Nilgiris .. .. | .. | .. | 1 | 2 |
| Coimbatore .. .. | 1 | 1 | .. | 10 |
| Madurai .. .. | 1 | 1 | .. | 11 |
| Tiruchirappalli .. | 1 | 1 | .. | 8 |

| Name of district. (1) | Government Pleader. (2) | Public Prosecutor. (3) | Government Pleader-cum-Public Prosecutor. (4) | Assistant Public Prosecutor. (5) |
|---|---|---|---|---|
| Thanjavur .. .. | .. | .. | 2 | 11 |
| Ramanathapuram .. | 1 | 1 | .. | 8 |
| Tirunelveli .. .. | 1 | 1 | .. | 8 |
| Kanyakumari ... | 1 | 1 | .. | 5 |
| Madras City ... .. | 1 | 1 | .. | 10 * Assistant State Prosecutors. |

* Includes one Chief Assistant State Prosecutor, Madras, also.

## இணைப்பு.

இம் மாநிலத்தில் உள்ள அரசாங்க வக்கீல்கள், அரசாங்க வழக்குரைஞர்கள் அரசாங்க உதவி வழக்குரைஞர்கள் ஆகியோரின் மாவட்ட வாரியான எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை:—

| மாவட்டத்தின் பெயர். (1) | அரசாங்க வக்கீல் (2) | அரசாங்க வழக்குரைஞர். (3) | அரசாங்க வக்கீல் அரசாங்க வழக்குரைஞர். (4) | அரசாங்க உதவி வழக்குரைஞர். (5) |
|---|---|---|---|---|
| செங்கற்பட்டு .. .. | 1 | 1 | .. | 6 |
| வடார்க்காடு .. .. | .. | .. | 1 | 8 |
| தென்னார்க்காடு .. .. | 1 | 1 | .. | 7 |
| சேலம் .. .. .. | 1 | 1 | .. | 8 |
| தருமபுரி .. .. .. | 1 | 1 | .. | 3 |
| நீலகிரி .. .. .. | .. | .. | 1 | 2 |
| கோயம்புத்தூர் .. .. | 1 | 1 | .. | 10 |
| மதுரை .. .. .. | 1 | 1 | .. | 11 |
| திருச்சிராப்பள்ளி .. | 1 | 1 | .. | 8 |
| தஞ்சாவூர் .. | .. | .. | 2 | 11 |
| ராமநாதபுரம் .. .. | 1 | 1 | .. | 8 |
| திருநெல்வேலி .. .. | 1 | 1 | .. | 8 |
| கன்னியாகுமரி .. .. | 1 | 1 | .. | 5 |
| சென்னை மாநகர் .. | 1 | 1 | .. | 10 * அரசாங்க உதவி வக்கீல்கள். |

64981

*இதில் சென்னை [illegible] அரசாங்கத் தலைமை உதவி வக்கீல் ஒருவரும் அடங்குவார்

D 1

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams, Private Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. Rukmani Corporation, Vepery, Madras-7.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.
Messrs. Book Corner, Book-Sellers, No. 2/4. Mount Road, Madras-2.

### IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
The Oriental Book House, Madurai.
Messrs. Vivekananda Press, Printers, Publishers and Book-sellers, Madurai.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswamy & Co., Tiruchirappalli.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelv Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-seller and Publisher, Nagercoil, Kanyakumari distric
Messrs. A. K. Chandriah Chettiar & Sons, Salem.
Messrs. Meenakshi Pathipagam, Pudukkottai.
Messrs. K. V Narayana Iyer & Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town H Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Janatha A[illegible]cies, Book-sellers, Gudur.
Messrs. Jain Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29
Messrs. The Books Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

Published under Rules 234 and 237 of the Madras Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.



| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

LIST OF AGENTS FOR THE SALE OF **MADRAS** GOVERNMENT PUBLICATIONS.

Messi
The
Messi
Messi
Messi
Messi
Sri S.
The
The
Messi
Messi
Messi

Sri E
The
Messr
Sri A
Messr
Messr
Messr
Messr
Messr
Messr
Sri S.
Messr
J
Sri B
Sri V
Messr
Messr
Sri S.
Messr
Messr
Messr
Messr
Messr
Messr
Messr
Messr
k

Messr
Messr
Messr
Messr
Messr
Messr
Messr


தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே. எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A— -1,00,000—30-1-84.



PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE MADRAS LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.